www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

දිනමුරසු වාරමලර්

நவ.03–09,19

# வார தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY

## வெளிநாட்டுப் பயிற்சி! திட்டம் தயார்

## புதிய முறை

## அதிரடி தாக்குத



## பெண்கள் கிரிக்கெட்

## ரஜினி – பிடித்ததும் – பிடிக்காததும்



படிப்பகம்

www.padippakam.com

# ...முரசம்

## ...னல் வைத்தியம்

...ா உங்களுக்கு
வணக்கம்.

...ாட்டில்
...டைந்து வருவதாக
...சொல்லப்பட்டன.

...ளுக்குள் இருந்து
மீட்கப்படும்
...மிரட்டுகின்றன.

...மா? என்பது
...க்கும் கேள்விக்குறி.

...லாம் நல்லதுமல்ல;
...வும் நன்மைக்குமல்ல;
...ாகின்றவையும் நல்லவையல்ல!
...தெரிந்தது அதுதான்!

...அன்று,
...ம் போனோருக்கான
...னகள் நடக்கின்றன.
...ல் போனதாகப்
...காடுத்தோர்
...க்கதை சொல்கிறார்கள்!

...ாநாட்டில்
...க் கதை சொல்வதற்கும்
...ப்பார்களோ தெரியவில்லை.
...ல்.
...ல் போனோரைத்
...புறப்பட்டவர்களும்
...கத் திரும்புகிறார்கள்.

...நடந்துவரும்
...களை அறிவதற்கு
...ராய்ச்சிதான்
...வண்டியிருக்கும்!

...டவும் சாட்சியில்லை;
...றுக்கும் சாட்சியில்லை,
...செய்தவர்கள்
...த்திசாலிகள்!

...உரிமைக் குழுக்களின்
...கைகளும்,
...மல் போனோர் தொடர்பான
...ணைகளும்
...உயிர்களுக்கான
...ாப்பை
...வாதப்படுத்தாவிட்டாலும்,
...ல செய்வோர்-தமது
...ாப்பை எப்படி
...ப்படுத்தலாம் என்று
...துக்கொள்ள உதவியிருக்கின்றன!

...செய்தார்கள்,
...சாட்சியே இல்லாமல்
...களைத் தின்றுவிட்டால்
...என்ன செய்ய முடியும்?
...ர் சொல்ல ஆள்வேண்டும்;
...ம் காட்ட ஆதாரம் வேண்டும்;
...னடையுமே புதைத்துவிட்டால்...?
...! அருமையான யோசனை!
...சனை செயலாக்கப்படுகிறது!

...த உரிமைக் குழுக்களுக்கு
...ஷ்! சரியான சவால்!
...ரம் கிடைப்பானேன்....?
...ர்கள் அறிக்கை விடுப்பானேன்.....?
...ந்தப்பட்டவர்கள் அதனால்
...திரப்படுவானேன்?
...மானால் கண்டுபிடி!
...ாலென்றால் சவால்தான்!

...ணாமல் போனோரில் சிலரின்
...ங்களாவது கிடைத்ததே
...ன்று அவர்தம் குடும்பத்தார்
...றுதல்பட்டுக்கொள்ளலாம்.
...துவரை பிணம் கிடைக்காதோர்
...போதாவது கிடைக்கலாம்
...ன்ற நம்பிக்கையில்
...மளனமாக இருந்தால்
...ாமாவது தப்பிக்கலாம்!
...பார் ஒன்றே
...கல நோய்க்கும் நிவாரணி
...ன்று தீர்மானமாகிவிட்டதால்
...யுதம் உள்ளோரே
...னைத்தையும் முடிவு செய்கிறார்கள்!
...வைத்தியமும் கோணல்;
...ருந்தும் சரியில்லை;
...க்களின் நிலை
...வலைக்கிடம்தான்!

❑❑

தாய்'நாவலைத் தொடர்ந்து
'முரசு' தரப்போகும் தொடர்
'தூக்கு மேடைக் குறிப்பு.'
நடந்த கதை, நாமறிய
வேண்டிய கதை.
நடந்தது வெளியுலகில்
என்றாலும்-
அனுபவங்கள் பொதுவானவை!
'தாய்' மாபெரும் வரவேற்பைப்
பெற்றதில் மட்டற்ற மகிழ்ச்சி.
அந்த மகிழ்ச்சியின் பரிசாக
'தூக்கு மேடைக் குறிப்பு'
படியுங்கள். பதியுங்கள்.
மடல் எழுதிப்போடுங்கள்.

❑❑

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்.
ஆசிரியர்

# ஆன்மீகம்



## விசுவாசம் நம்மை இரட்சிக்கும்

இயல்பான மனித வாழ்வில் மிகப்பிரமாண்டமான சக்தி என்னவெனில் வேதாகமத்தால் கற்பிக்கப்படும் ஆன்மீக சக்தியே. மனிதன் தன்னைத்தானே அறிந்துகொள்ளக்கூடிய நல்லவைகளை விவிலியம் கூறுகின்றது. அதாவது மனிதனுக்கு முக்கிய தேவைகளை இது எடுத்தியம்புகிறது. லெளகிக வாழ்வில்லல; ஆன்மீக வாழ்வில் விசுவாசம், நம்பிக்கை, உடன்பாட்டு எண்ணங்கள், இறைவனில் நம்பிக்கை, ஏனைய மக்களில் விசுவாசம், தன்னம்பிக்கை, உலக வாழ்வில் உண்மை, நம்பிக்கை போன்ற நற்குண நல்லியல்புகளே அவைகள்.

எனவேதான் இவ்வாறு கூறப்படுகின்றது:-

"உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது." (மத்9:29)

"கடுகு விதையளவு விசுவாசம் உங்களுக்கிருந்தால் நீங்கள் இந்த மலையைப் பார்த்து, இவ்விடம் விட்டு அப்புறம்போ என்று சொல்ல அது அப்புறம்போம். உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது." (மத்17:20)

எனவே, உண்மை விசுவாசம் உள்ளவருக்கு எதுவும் முடியும் என்பது உண்மையாகிறது. இதுவே, வேதாகமம் நமக்கு தரும் நல்ல கருத்து. எனவே விசுவாசியுங்கள், உண்மையாக விசுவாசியுங்கள். நம்மைச் சூழ்ந்த இருளகன்று ஒளிபிறக்கும் என்று உண்மையில் விசுவாசியுங்கள்.

ஏ.பி.வி.கோமஸ்.

## இஸ்லாமிய சிந்தனைத் துளிகள்

★ சீர்திருத்தவாதிகள் முக்கியமாகப் பெற்றிருக்க வேண்டிய அறிவு, ஒழுக்கம், நற்பண்பு, இந்த மூன்று பண்புகளையும் ஒருங்கே பெற்ற ஒருவன் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டால் அதை வணக்கம் என்றே கூறவேண்டும். -இமாம் கஸ்ஸாலி-

★ உன் நாவுக்கு அஞ்சு-அது குறிதவறக்கூடிய அம்பாகும். -அலி (றழி)-

★ மூன்று சந்தர்ப்பங்களில் ஒருவன் தன்னை முட்டாள் என்று காட்டிக்கொள்கிறான்.
தான் அறியாததைப் பற்றி பேசும்போது,
கேட்கப்படுமுன் பதில் கூறும்போது,
சிந்திக்காமல் துணிந்து செயலாற்றும்போது. -அலி (றழி)-

★ உங்களுடைய முன்னோர் திருமறையை அல்லாஹ்விடமிருந்து தங்களுக்குக் கிடைத்த கட்டளையாகக் கருதினார்கள். இரவில் அதன் கருத்தைக் கவனித்தார்கள். பகலில் அதன்படி செயலாற்றினார்கள். ஆனால் நீங்களோ அதைப்படிக்கவும் ஓசை நயத்தோடு ஓதவும் கற்றுக்கொண்டீர்களே தவிர அதன்படி ஒழுகுவதில் அக்கறை காட்டுவதில்லை. -ஹஸனுல் பன்னா-

★ மூன்று இடங்களில் உனது உள்ளத்தைத் தேடு:
குர்ஆன் ஓதுவதைக் கேட்கும்போது, திக்ர் மஜ்லிஸ்களில் தனிமையாயிருக்கும் நேரங்களில் இவ்விடங்களில் நீ காணாவிட்டால் அல்லாஹ்விடம் உனக்கொரு உள்ளத்தைத் தரும்படி கேள்; ஏனெனில் உனக்கு உள்ளமே இல்லை. இப்னு மஸ்ஊத்(றழி)-

கிண்ணியாவில்வெளி முஷாத்க்.

## கவிதைப் போட்டி இல.174

பரிசுக்குரிய கவிதை

### வழிகாட்டல்

கொடுக்க வேண்டியதை
கொடுத்து விடுங்கள்!
இல்லாவிட்டால்
இவர்கள்
'எடுக்க வேண்டியதை'
எடுத்து விடுவார்கள்!

சுபா வரன்-கண்டி.



**இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்**

### வ(வி)ழி திறக்குமா?

விழி இழந்த முதுமைக்கு
வழி காட்டும் இளமை ஒன்று
வழி மறைக்கும் அதிகாரம்
விழி திறக்கும் நாள் என்றோ?

சி.மு. சுந்தரேசன்- அரசினர் வைத்தியசாலை, மஸ்கெலியா.

## கவிதைப் போட்டி இல-177



**கவனியுங்கள்!** எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி:- 09.11.1996

-முகவரி- கவிதைப் போட்டி இல.177 தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.

### நீ எருதாமோ?

சீரழிந்த பூமியிதில்
சீமான்கள் கைகளிலே
சிறு குரங்காய் ஆனாயோ?
போர் நிறைந்த பூமியிலே
பொதி சுமக்கலானாயோ?
பாவியவர் கைகளிலே
பாலகன் நீ எருதாமோ?

தர்ஷிக்கா கனகசிங்கம்-கல்லடி, மட்டக்களப்பு.

### முன் எச்சரிக்கை

நாடோ பெரும் பிணக்காடு;
வீடோ கூரையில்லா குட்டிச்சுவர்;
மிஞ்சியிருப்பது கோவணம் ஒன்றே!
வேறிடம் செல்வோம்
அதையும் இழக்குமுன்!!

எம். முரளிதரன்- கல்கேவத்த, வெளிமடை.

### வேறிலையோ!

அரும்புகின்ற மொட்டெனக்கும்
பழுத்து நிற்கும் பழமுனக்கும்
மிஞ்சியது தடியிதுவோ?
மிச்சம்மீதி வேறிலையோ?

ஏ.எஸ். லோறன்ஸ்-வவுனியா.

### வழி காட்டல் பாதை

முதுமையின் வழிகாட்டல் அகிம்சை!
இளமையின் வழிகாட்டல் ஆயுதம்!
அகிம்சை ஆட்டம் கண்டதால்,
ஆயுதம் ஆட்சி புரிகின்றது;
இது இன்றைய வழிகாட்டல் பாதை!

அம்பிளாந்துறையூர்-அரியரன்.

### யார்?

முளைக்கும்
பருவத்திலேயே
உடல் நோக
சுமக்கத்
தொடங்கிய
இவன் யார்....?
மலையக
மைந்தனா?

திருமதி புவனேஸ்வரி பன்னீர்செல்வம்-பசறை.

### பாதை மாறும் பயணங்கள்

பாதைகள் மாறிவர
பயணங்கள் தொடர்ந்துவர
பாரிலிங்கு பரிதவித்து
பாலகனின் வழிநடந்து
பகலுமிங்கு இருளாக
பாலைவன வாழ்விதுவோ....?

தெ. நஞ்ஜனா-சின்னப்புதுக்குளம், வவுனியா.

# வாசக(ர்) சாலை

அன்பின் முரசே!

காதிலை பூ கந்தசாமியின் கற்பனை வடிவம் சூப்பர். அத்தோடு சிந்தியாவின் பதில் எம் நேய நெஞ்சங்களை வியக்க வைக்கின்றது.

மி.மைக்கிறீஸ், கொழும்பு-13.

'மறுபடி தா' தொடரில் பரத்-சுசியின் பிரவேசத்தின் பின் விறுவிறுப்பு அதிகரித்துள்ளது.

ஆமாம்..! 'கடி ஜோக்ஸ்'ஐ ரொம்ப நாளா காணோமே.., கடித்து ரொம்ப நாளாச்சு. சார். கடி ஜோக்ஸ் ப்ளீஸ்...!!

ஐ.எ.ஃப்.பர்வின், மடவளை.

அன்பின் தினமுரசே!

வாரந்தோறும் நீ வழங்கும் ஆக்கங்கள் அனைத்தும் என்னைக் கவர்ந்து செல்கின்றன. அவற்றில் ஒன்று அற்புதனின் அரசியல் தொடர்.

இது ஈழத் தமிழரின் போராட்டக் கால நிகழ்வுகளை மட்டும் நினைவுறுத்தவில்லை. இதுவரை மர்மமாகவும், மறைந்தும் இருந்த உண்மைகளை வெளியே புலப்படுத்துகின்றன. நாம் அழிந்தாலும் நமது வருங்கால சந்ததியினருக்கு வரலாற்று உண்மையை வெளிப்படுத்தும் ஒரு நூலாக இது வெளியிடப்பட வேண்டும். பணி தொடர என் வாழ்த்துக்கள்

ஜி.அல்பேட்,பாலையூர், திருமலை.

யாழ்-குடாநாட்டுக்கு முரசு வருவதில்லை. கப்பலில் வரும்போது நண்பர்கள் வாங்கிவருகிறார்கள். அரசியல் நிலவரங்களை துல்லியமாக கணிப்பிட்டுச் சொல்லும் பாங்கு வரவேற்கத்தக்கது. மற்றும் பூலான்தேவி கதையின் சில பகுதிகளை மட்டுமே தொடர்ச்சியில்லாமல் பார்க்க முடிந்தது. பூலான்கள் உருவாகுவதற்கான காரணங்கள் எங்கும் உண்டுதானோ? பூலான்தேவிகள் தாமாகத் தோன்றுவதில்லை; தோற்றுவிக்கப்படுகிறார்கள்.

செ. யோகரத்தினம், நல்லூர், யாழ்ப்பாணம்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் பற்றிய பேட்டி தொடர்பாக 'முரசு' வெளியிட்ட விமர்சனமும், கணிப்பும் மெய்யாகிவிட்டது. மத்தியஸ்த முயற்சிகளுக்கு தடை இல்லை எனத் தெரிவித்துவிட்டு, வழக்கும் தொடரப் பட்டுவிட்டதல்லவா? முரசுக்குப் பாராட்டு.

எம். தவக்குமார், வவுனியா.

'தாய்' நாவல் அற்புதமான பொக்கிஷம். இலக்கியம் மக்களுக்கானது. மக்களிடம் இருந்து மக்களுக்காக ஆக்கப்படுவது. 'தாய்' உலக இலக்கியம். உள்ளத்தை வசப்படுத்தி என்றென்றும் நினைவில் நிற்கும் இலக்கியம். 'தாய்' நிறைவைத் தொடர்ந்து புதிதாகத் தரப்படும் தொடரும் நிறைவானதாக இருக்கவேண்டும். முரசின் தெரிவுகள் முத்தாகத்தான் இருக்கும்.

ஏ. பெஞ்சமின், புத்தளம்.

**முரசுக்கு மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்படுபவர்கள்**

- ★ எஸ். ரஸ்மியா, பதுளை.
- ★ பொ. லோகநாதன், இறத்தோட்டை.
- ★ செல்வி எஸ். தேவகி, வவுனியா.
- ★ திருமதி ஜெ. ஜெகதீஸ்வரி.
- ★ கோ. சிவலிங்கம், மூதூர்.
- ★ வி. ஷயந்த சர்மா, அக்கரைப்பற்று-07.
- ★ ஏ. வேல் முத்து, உடப்பு-06.
- ★ ரி. ராஜேந்திரன், உக்குவளை.
- ★ எம். இசட்.எம். பைஸின், களுத்துறை (தெற்கு)
- ★ செல்வி பா. தில்லை, இராகலை.
- ★ லதா அருணாசலம், கொம்மாதுறை.
- ★ வி. சுதாகர், ஜெர்மனி.
- ★ பே. மஞ்சுளா, மடுல்சீமை.
- ★ எம்.எம். பௌசல் அமீன், காத்தான்குடி.
- ★ ஆர். பரமேஸ்வரன், மெல்போர்ன், அவுஸ்திரேலியா.

காலத்தின் சுமைகளைத் தாங்கிவரும் கதைகளையும், கவிதைகளையும் பிரசவிப்பதில் முரசுக்கு நிகர் முரசுதான்.

முரசில் பிரசுரமாகியிருந்த 'மிதிவெடி' சிறுகதை இரத்தினச் சுருக்கமாக எடுத்துக்காட்டியதுடன் படிப்போர் நெஞ்சங்களைத் துடிக்கவைத்தது.

அமீர்டீன் கே. முகம்மட்,திருகோணமலை.

காதிலை பூ கந்தசாமியின் கற்பனை அற்புதம். கவுண்டர்-செந்திலின் நகைச்சுவை சூப்பர். இலக்கிய நயம், தேன் கிண்ணம்- அறுசுவை படைக்கின்றன-அந்த நாள் ஞாபகத்தில் நடிக, நடிகையர், இயக்குநர்களின் அன்றும் இன்றும் போஸ் வியக்க வைக்கின்றன. பேபி ஷாலினியின் இன்றையத் தோற்றம் எம்மை அசத்தி விட்டது. கொள்ளைராணி பூலான் தேவியின் வாழ்க்கையை தரும் ரசிகன் திரைபடமொன்றை தயாரித்து எமக்களிப்பது போலுள்ளது. அவ்வளவு தத்ரூபமாக உள்ளது அவர் எழுதும் பாணி.

திருமதி மரினா நியாஸ், பூரணவத்த.



ரசிகனே! பூலான் தேவி இந்திய பொலிசாரிடம் மாட்டிக் கொண்டு பட்ட துன்பங்களை நினைக்கும்போது கண்கள் கலங்கி விட்டன.

சிந்தியாவின் பதில்கள் முரசுக்கு மேலும் சிறப்பைக் கொடுத்து வருகின்றன. உன் சேவை தொடர என் வாழ்த்துக்கள்.

கல்லடி மூர்த்தி, மட்டக்களப்பு.

இராஜகுமாரனின் "இராமகாவியம்" இலகு நடைக்கு ஓர் உன்னத உதாரணம். சிறு பிள்ளைகளும் படித்து சுவைக்கக் கூடியதாயிருக்கின்றது. அதில் வரும் "தவா"வின் கை வண்ணம் உயிரோவியமாய் மிளிர்கின்றது.

நா. ஆனந்தன், கண்டி.

இதயத்தைக் கொள்ளை கொண்ட இனிய முரசுக்கு, நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும், இனிமையிலும் இனிமை. சூடு.. சுவை.. சுவாரசியம் நிறைந்த முரசுக்கு இதயம் நிறைந்த வாழ்த்துக்கள். பரிசுக்குரிய கவிதை போட்டி இலக்கம்:- 172 'கானக வாழ்வு' மனதைத் தொட்டது. அத்துடன் இலக்கிய நயம் தரும் ரசிகனுக்குப் பாராட்டுக்கள்!.. சிந்தியாவின் சிந்தை கவரும் பதில்கள் மனதை கவர்கின்றன. 'லேடீஸ் ஸ்பெஷல்' மங்கையரின் வரப்பிரசாதம். மொத்தத்தில் "தேவை உந்தன் சேவை!"

வாழ்க... வளர்க உந்தன் பணி!...

திருமதி ராகினி யோகரெட்ணம், கொழும்பு-11.

என் இனிய முரசே!

நீ தாங்கி வரும் அனைத்து அம்சங்களும் மிகமிகப் பிரமாதம். பட்டுக் கோட்டை பிரபாகரின் 'மறுபடி தா' வின் இரண்டாம் பாகம் தந்தமைக்கு நன்றி. முரசே நீ நீடூழி வாழ்க.

செல்வி ரா.ராதா, செங்கலடி.

பாப்பா முரசில் வெளிவரும் சிறுகதைகள் சிறுவர்களுக்கு நல்ல கருத்தினை சொல்கின்றன. மற்றும் மாணவர்களுக்கு பயன்தரக் கூடிய வகையில் விஞ்ஞான விளக்கங்கள் அமைந்துள்ளன. அத்துடன் வாரம் ஒரு நாடு மூலம் பல்வேறு நாட்டு கலாசாரங்களை அறியக் கூடியதாக உள்ளது. முரசுக்கு நன்றிகள்.

ஜே. தேவனி, மட்/ஞானசூரியம் சதுக்கம்.



படிப்பகம்

www.padippakam.com

# பாரிசில் புலிகள் இயக்கப் பொறுப்பாளர் கொலை!
## பேசுவதற்காக அழைத்துச் சென்றவர்களே சுட்டனர்!
### கொலை செய்யப்பட்ட காட்சி வீடியோவில் பதிவு

**பு**லிகள் இயக்கத்தின் முக்கியஸ்தர்கள் இருவர் ஃபிரான்சில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

புலிகள் இயக்க சர்வதேச் நிதிப் பொறுப்பாளரான கந்தையா பேரின்பநாதன், (அரியாலை) ஃபிரான்சில் இருந்து வெளியாகும் 'ஈழமுரசு' பத்திரிகை ஆசிரியர் கந்தையா கஜேந்திரன் ஆகியோரே கொல்லப்பட்டவர்கள் ஆவர்.

இக்கொலைகள் தொடர்பாக புலிகள் இயக்க சர்வதேச தலைமையகம் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளது. சிறீலங்கா அரசின் திட்டமிட்ட பின்னணியுடன் இக் கொலைகள் நிகழ்த்தப்பட்டுள்ளதாக அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

**பாதாள ரயில்பாதையில்**

இச் சம்பவம் தொடர்பாக முரசுக்கு ஃபிரான்சிலிருந்து கிடைத்துள்ள தகவல்கள் பின்வருமாறு:

ஃபிரான்சின் தலைநகரான பாரிசில் லாசப்பெல் என்னும் பகுதியிலுள்ள பாதாள ரயில் நடைபாதையில்தான் கொலைகள் நடைபெற்றுள்ளன.

பாரிசில் பாதாளரயில் நடை பாதையில் நடைபெறும் குற்றச்செயல்களைக் கண்டு பிடிக்க வீடியோ கமராக்கள் பொருத்தப்பட்டிருக்கும். அந்த விடயம் கொலை நபர்களுக்கு தெரிந்திருக்கவில்லை.

கொலை நடந்த காட்சி வீடியோவில் படமாகியிருக்கிறது. அதனைவைத்து கொலையாளிகள் இனம் காணப்பட்டுள்ளனர். அவர்களைப் பிடிக்க பொலிசார் வலைவிரித்துள்ளனர்.

கொலையாளிகள், நாதனைச் சந்தித்து தனியாக பேசவேண்டும் என்று அழைத்து வந்ததாகத் தெரிகிறது. நாதனுடன் கஜேந்திரனும் சேர்ந்து வந்திருக்கிறார். நாதனுக்கும், கஜேந்திரனுக்கும் அவர்கள் முன்கூட்டியே நன்கு அறிமுகமானவர்களாக இருந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்களோடு சென்றிருக்க மாட்டார்கள் என்று கருதப்படுகிறது.

பேசிக்கொண்டே பாதாள ரயில்நடை பாதை வழியாகச் சென்றுகொண்டிருக்கும் போது திடீரென்று ஒருவர் பிஸ்டலை எடுத்து நாதனைச் சுட்டார். நாதன் சூடுபட்டு விழும்போது, அதேநபர் கஜேந்திரனை நோக்கியும் சுட்டார்.

**நோக்கம் என்ன?**

கொலையாளிகளின் நோக்கம் நாதனை சுடுவதுதான். ஆனால் கஜேந்திரனை தப்ப விட்டால் தம்மைக் காட்டிக் கொடுத்து விடுவார் என்றுதான் கொலையாளிகள் அவரையும் சுட்டுக்கொன்றனர் எனறு கூறப்படுகிறது.

கொலையான நாதன் புலிகள் இயக்க

(ஃபிரான்ஸ் நிருபர்)

சர்வதேச நிதிப் பொறுப்பாளர். ஐரோப்பிய நாடுகளில் புலிகள் இயக்கத்தினரால் திரட்டப்படும் நிதிமுழுவதும் அவரிடமே சேர்ப்பிக்கப்படுவதுண்டு.

புலிகள் இயக்கத்தின் சர்வதேச வியாபாரத் தொடர்புகளுக்கு பொறுப்பான பத்மநாதனுடன் நாதனுக்கு நேரடியான தொடர்புகள் இருக்கக்கூடும். தன்னிடம் வரும் நிதியை பத்மநாதனிடம் பேரின்பநாதன் கொடுத்துவிடுவார் என்று கருதப்படுகிறது.

நிதி விடயத்தில் ஏதாவது பிரச்சனை ஏற்பட்டு அதன் விளைவாக நாதன் கொல்லப்பட்டாரா என்றும் சந்தேகம் எழுப்பப் பட்டுள்ளது.

ஏனெனில் ஃபிரான்சில் புலிகள் இயக்கத்தினர் பலமாக உள்ளனர். ஆயுதங்களுடனும் நடமாடுகின்றனர். அங்குள்ள இலங்கைத் தமிழர்கள் மத்தியில் ஏற்படும் பிரச்சனைகளை பஞ்சாயத்துப்பண்ணி புலிகள் இயக்கத்தினர்தான் தீர்த்துவைக்கின்றனர்.

**பஞ்சாயத்து பிரச்சனை?**

ஏனைய இயக்கத்தினருடனோ, அல்லது முன்பின் தெரியாதவர்களுடனோ புலிகள் இயக்கத்தின் ஒரு முக்கிய பொறுப்பாளர், பாதுகாப்பு இல்லாமல் சென்றிருப்பாரா என்பதுதான் பிரதான கேள்வியாகும்.

இதேவேளை பஞ்சாயத்து செய்வதில் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமான எதிரொலியாக கொலை நடத்தப்பட்டதா என்றும் மற்றொரு சந்தேகம் எழுந்துள்ளது.

கொலையாளிகளின் அடையாளம் தெரிந்துவிட்டதால் அவர்கள் பிரான்சில் இருந்து தப்புவது சிரமம். அவர்கள் மாட்டிக் கொண்டால் கொலைக்கான காரணம் வெளிவரலாம்.

# இரு முனைகளில் முன்னேறும் முஸ்தீபு!
## தரைப்பாதைத் திறப்புக்கு படைகள் ஆயத்தம்!

(அலுவலக நிருபர்)

**பு**லிகள் இயக்கத்தினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து இதுவரை பத்தாயிரம் பேர் வவுனியாவுக்கு வந்துள்ளனர். வன்னிப் பகுதிகளில் பெருமளவான மக்களை வவுனியாவுக்குள் உள்வாங்கிவிட்டு வன்னியை நோக்கி படை நடவடிக்கை ஒன்றுக்கு படையினர் திட்டமிடுவதாக சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

வவுனியாவில் இருந்தும், கிளிநொச்சியில் இருந்தும் இரு முனைகளில் பாரிய படை நடவடிக்கை ஒன்றுக்கு திட்டமிடப்படலாம் என்று தெரிகிறது.

அந்த நடவடிக்கை மூலமாக கிளிநொச்சிக்கும் வவுனியாவுக்குமான தரைப்பாதையை திறப்பதே நோக்கமாக இருக்கும்.

வன்னியில் இருந்து வவுனியா நோக்கி வருவோரை புலிகள் இயக்கத்தினர் தடை செய்யவில்லை.

**நெரிசல்**

வவுனியாவுக்கு வருவதற்காக காத்திருந்தபோது கூட்ட நெரிசலில் சிக்கி ஒரு பெண் பலியானார். நெரிசலைக் கட்டுப்படுத்த புலிகள் இயக்கத்தினர் முற்படும் போது அவர்களுக்கும் காத்திருப்போருக்கும் இடையே பிரச்சனைகளும் ஏற்பட்டன.

வவுனியாவுக்கு இடம்பெயர்ந்து வந்துள்ளமக்கள் நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். முகாம்களைவிட்டு வெளியே செல்ல அனுமதி வழங்கப் படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் நிரந்தர வதிவிட அனுமதிப் பத்திரம் உள்ளவர்கள், கடமை நிமித்தம் வந்துள்ள அரசாங்க ஊழியர்கள், வவுனியாவுக்கு தெற்கில் உள்ள மாவட்டங்களில் மட்டக்களப்பு, திருமலை, புத்தளப் பகுதிகளில் நிரந்தரமாக வசிப்பவர்களும் மட்டுமே முகாமிலிருந்து வெளியேற அனுமதிக்கப்படுகின்றனர்.

வைத்திய சிகிச்சைக்காக வந்தவர்களுக்கு வவுனியா மாவட்ட வைத்திய அதிகாரியின் அத்தாட்சிப் படுத்தல் இருந்தால் மட்டுமே வெளியே செல்ல அனுமதி வழங்கப்படும்.

வெளிநாடு செல்ல வந்தோராக இருந்தால் பிரயாணச் சீட்டு, கடவுச் சீட்டு போன்ற ஆவணங்களுடன் பிரயாணம் உறுதிப்படுத்தப்பட்டவர்களாக இருந்தால் மட்டுமே இராணுவ அதிகாரி அவர்களது விண்ணப்பத்தைப் பரிசீலிப்பார்.

**யாழ் செல்ல அச்சம்**

யாழ்ப்பாணம் செல்ல விரும்புவோர் அங்கு அனுப்பிவைக்கப்படுவர். இடம் பெயர்ந்து வந்துள்ளவர்களில் பெரும்பாலானோர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். எனினும் யாழ்ப்பாணம் செல்வதற்கு சிறிய தொகையினரே பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.

முகாம்களில் இடவசதிகள் போதவில்லை. ஆண்களும், பெண்களும் ஒன்றாக அடைந்து கிடக்கின்றனர்.

முகாம்களில் இருந்து தம்மை வெளியே விடுமாறு கோரி உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்துவது பற்றியும் ஒரு சாரார் யோசித்து வருவதாகத் தெரிகிறது. அவ்வாறு நடைபெறுமானால் அரசாங்கத்திற்கு பெரும் தர்மசங்கடமாக இருக்கும்.

**புலிகளின் கவனம்**

இதேவேளை, வவுனியாவை- புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதி மக்களை உள்வாங்கும் தளமாக பயன்படுத்துவதை தடுக்க புலிகள் தாக்குதல்களில் ஈடுபடலாம் என்று அஞ்சப்படுகிறது.

சமீபத்தில் வவுனியாவில் புளொட் இயக்க முகாம்மீது புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தியிருந்தனர்.

வவுனியாவில் இருந்து படையினர் நடவடிக்கை ஒன்றையும் ஆரம்பிக்கலாம் என்று கருதப்படுவதால் புலிகளின் கவனம் வவுனியா நகர்மீது திரும்பலாம். அதனால் வவுனியா நிலவரம் விரைவில் நெருக்கடிக்கு உள்ளாகும் அபாயம் உள்ளது.

# மேலே புலிகள், கீழே படைகள்
## யாழ் குடாநாட்டில் தேடுதல்

**யா**ழ் குடாநாட்டில் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்குள் புலிகள் இயக்கத்தினர் மக்களின் பிரச்சனைகளை தீர்த்துவைக்கும் வேலைகளைச் செய்து வருகின்றனர்.

தாம் நிலைகொள்ளாத பகுதிகளுக்கு படையினர் பெருமளவாகச் சென்று தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டுவிட்டு திரும்பி விடுகின்றனர்.

வட்டுக்கோட்டைப் பகுதியொன்றில் படையினர் தேடுதல் நடத்திக்கொண்டிருந்த போது புலிகள் இயக்க உறுப்பினர்கள் தண்ணீர்த்தாங்கி ஒன்றின் மேலே பதுங்கிருந்தனராம். தண்ணீர்த் தாங்கிக்கு அருகே தேடுதல் நடத்தியபடி படையினர் அதன் மேலே இருந்த புலிகளை காணவில்லையாம்.

படையினர் நிலைகொள்ளாத பகுதிகளில் பொருட்களின் விலைகள் இரண்டு மடங்கு உயர்ந்துள்ளன. கட்டுப்பாட்டுப் பகுதிகளிற்கு சென்று பொருட்களைப் பெற்று வருவதில் உள்ள சிரமங்களே அதற்குக் காரணம் என்று கூறுகின்றனர்.

இதற்கிடையே படையினரின் கட்டுப்பாட்டு பகுதிகளுக்கு அடிக்கடி சென்றுவருவோர் மீதும் புலிகள் கண்காணிப்புச் செலுத்தத் தொடங்கியுள்ளனர். படையினருக்கு தகவல்கள் தெரிவிக்கும் நபர்கள் என்று சிலருக்கு புலிகளால் மரணதண்டனையும் வழங்கப்பட்டுள்ளது.

யாழ் குடாநாட்டில் தட்டாதெருச் சந்திக்கு அண்மையில் படையினரின் சோதனை முகாம் இருக்கிறது.

அங்கு சென்றுதான் படையினரின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குச் செல்ல அனுமதி பெறவேண்டும். அனுமதி பெறக் காத்திருக்கும்போது புலிகள் படையினரை தாக்கினால் பதிலடியில் தாமும் பாதிக்கப்படலாம் என்பதால் தட்டாதெருச் சந்தி சோதனை முகாமுக்குச் செல்ல மக்கள் அஞ்சுகின்றனர். தேவை நிமித்தம் செல்வோரும் உயிரைக் கையில் பிடித்தபடிதான் செல்கின்றனர்.

படையினர் தேடுதல் நடவடிக்கையில் முகமூடி நபர்களை பயன்படுத்துகின்றனர். இயக்க சம்பந்தமில்லாத நபர்களைப் பார்த்தும் முகமூடிகள் தலையாட்டிவிடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# கண்டியில் கடும் கண்காணிப்பு
## தலதாமாளிகைக்கு பலத்த காவல்!

(கண்டி நிருபர்)

**பு**லிகள் இயக்கத்தினர் பௌத்த ஆலயங்களைத் தாக்கக்கூடும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளதால் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

கண்டி தலதாமாளிகையின் மாதிரி வடிவம் யாழ்ப்பாணத்தில் புலிகள் இயக்க முகாம் ஒன்றில் கண்டெடுக்கப்பட்டதாக முரசு முன்னர் செய்தி வெளியிட்டிருந்தது. தற்போது கண்டி தலதாமாளிகை பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு உள்ளாகியிருப்பது முரசு வெளியிட்ட செய்தியை ஊர்ஜிதப் படுத்தியுள்ளது.

கண்டிநகரில் பொலிசார் கடும் கண்காணிப்பில் ஈடுபட்டுவருகின்றனர். புலிகள் இயக்கத்தினர் என்ற சந்தேகத்தின் பேரில் பலர் கைது செய்யப்பட்டு தீவிர விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டனர். தொடர் கைதுகள் இடம் பெற்று வருகின்றன.

சமீபத்தில் கண்டியில் உள்ள டி.எஸ். சேனநாயக்கா கேட்போர் கூடத்தில் கண்டி நகர பாதுகாப்பு தொடர்பான கூட்டம் ஒன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் கண்டி பிரதேச பொலிஸ் கண்காணிப்பாளர் நிமல் மெதிவக்கவும் கலந்து கொண்டார்.

பேராதனை வீதியின் இருமருங்கிலும் உள்ள வீடுகளும், விடுதிகளும் அடிக்கடி சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றன. விழிப்புக் குழுக்களும் கண்காணிப்புப் பணியில் தீவிரமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

# சூசையின் வழிநடத்தலில் கடற் சமர்
## கிழக்கில் கடற்புலிகளுக்கு ஆட்திரட்டல்!

'**தி**ருமலை துறைமுகப் பகுதியில் கடற்புலிகள் வேவு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். கடற்பகுதியில் பாரிய தாக்குதலுக்கு திட்டம்' என்று கடந்தவாரம் முரசு செய்தி வெளியிட்டிருந்தது தெரிந்ததே.

திருமலை துறைமுகம் அருகே 25.10.96 அன்று நடைபெற்ற கடற்சமரும், கரும்புலித் தாக்குதலும் முரசு வெளியிட்ட செய்தியை ஊர்ஜிதப்படுத்தியுள்ளன.

கடந்த ஒரு மாதகாலமாக திருமலை துறைமுகப் பகுதியில் கடற்புலிகளின் வேவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கடந்தமாதம் 13ம் திகதியன்றும் திருமலை கடற்பகுதியில் கடற்புலிகளுக்கும், கடற்படையினருக்கும் இடையே ஒரு மோதல் இடம் பெற்றது.

திருமலை துறைமுகப் பகுதியில் கடற்புலிகளின் வேவு நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும், தாக்குதல்களுக்குத் திட்டமிடவும் கடற்புலிகளின் விசேஷ தளபதி சூசை திருமலைக்கு நேரடியாகச் சென்றுள்ளார்.

மூதூர் பகுதியில் கடற் புலிகளுக்கான கூட்டம் ஒன்றையும் சமீபத்தில் சூசை நடத்தியிருக்கிறார்.

சூசையின் நேரடியான நெறிப்படுத்தலின் கீழ்தான் சமீபத்திய கடற்சமர் நடத்தப் பட்டுள்ளது.

கிட்டத்தட்ட பத்துப் படகுகளில் வந்த கடற்புலியினர் கடற்பகுதியில் காத்திருந்தனர். சரியாக இரவு 10.15 மணியளவில் கடற்படையின் டோரா பீரங்கிப் படகு கடற்பகுதியில் ரோந்துக்காகச் சென்றது.

திடீரென்று டோராப் படகை கடற்புலிப் படகுகள் சுற்றிவளைத்து தாக்க ஆரம்பித்தன. டோராப் படகில் இருந்தும் கடற்புலிகளை நோக்கி பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. இச் சண்டை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது வேறு ஒரு புறம் இருந்து படுவேகமாக வந்த கடற் கரும்புலிப் படகு ஒன்று டோராவுடன் மோதி வெடித்தது.

இக்கடற்சமரில் மற்றொரு டோராப் படகும் சேதமாக்கப்பட்டது. அப்படகு தப்பிச் சென்றுவிட்டது என்று புலிகளின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது தரப்பில் கடற்கரும்புலிகளான மேஜர் நளினன் (தெய்வேந்திரன் யோகேஸ்வரன்-மூதூர், திருக்கோணமலை), கப்டன் ஜெயராஜ் (கந்தசாமி கோபாலகிருஷ்ணன், யாழ்ப்பாணம்) ஆகியோர் பலியானதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை தற்போதும் திருமலையில்தான் தங்கியுள்ளார்.

கடற்புலிகள் அணியை மேலும் விரிவாக்க கிழக்கு மாகாணத்தில் உறுப்பினர்களைத் தெரிவு செய்வதிலும் சூசை ஈடுபட்டுள்ளதாகத் தெரிகிறது.

# தபாலதிபர்கள் தெரிவில் இனவிகிதாசாரம் புறக்கணிப்பு!
## மூவர் மட்டும் தமிழர்; முஸ்லிம்கள் எவரும் இல்லை!

(திருமலை நிருபர்)

**நா**டெங்கிலுமுள்ள தபாலதிபர்கள் தட்டுப்பாட்டைக் குறைக்கும் நோக்கமாக அண்மையில் 125 தபாலதிபர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றனர். இவர்களுக்கான ஆரம்பநிலை இருவாரகாலப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

125 பேரிலும் மூன்று தமிழர்கள் தவிர அனைவரும் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர்களே என்பது குறிப்பிடத்தக்கது. முஸ்லிம்கள் எவரும் நியமிக்கப்படவில்லை. தமிழ் தபாலதிபர்களுக்கு மட்டக்களப்பிலும், ஏனையோருக்கு வெள்ளவத்தையிலும் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இதேவேளை, திருக்கோணமலையைப் பொறுத்தவரையில் சகல தந்திகளும்- அவசரத்தந்திகளாக இருப்பினும்கூட- தபால்களிலேயே அனுப்பப்பட்டு வருகின்றன. கடந்த பல வருடங்களாக இங்கே டெலக்ஸ் சேவை இல்லாமற் போய்விட்டது.

இவ்வாண்டின் ஆரம்பத்தில் மூன்று பழுதடைந்த டெலக்ஸ் இயந்திரங்கள் பொருத்தப்பட்டு திருமலைத் தபால் நிலையத்தில் அழகாகக் காட்சியளிக்கின்றன. ஒரு டெலக்ஸ் இயக்குநரும் இருக்கின்றார். எனினும் தந்திச் சேவை பிந்திய நிலையில்தான் காணப்படுகின்றது.

இதுபற்றி விசாரித்தபோது, "டெலக்ஸ் இயந்திரங்கள் முற்று முழுதாக ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தைச் சார்ந்தவை. கடந்த மே மாதம், இயங்காத இவ்வியந்திரங்களைப் பொருத்தினார்கள். இயங்கவைத்துத் தருமாறு பலதடவை அவர்களிடம் முறையிட்டும் நடவடிக்கை எடுக்கிறார்கள் இல்லை," என்று தபாலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# துப்பாக்கி பறித்தவருக்கு பரிசும் பாராட்டும்!

(ஏறாவூர் நிருபர்)

**ம**ட்டக்களப்பு-கொம்மாதுறையில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த படை வீரரைச் சமயோசிதமாக மடக்கித் தாக்கி அவரது துப்பாக்கியைப் பறித்துச் சென்ற சிவிலியன் ஒருவருக்குப் புலிகள் பரிசும் புகழும் வழங்கிக் கௌரவித்தனர்.

சமீபத்தில் நடந்த இச்சம்பவம் பெரும் திகைப்பூட்டுவதாக இருந்தது. கொம்மாதுறைப் படைமுகாமின்சோதனைச் சாவடிக்கு முன்னால் காவல் கடமையிலீடுபட்டிருந்த படைவீரரைச் சமயம் பார்த்து அவர் வேறு பக்கம் திரும்பிக் கொண்டு நின்றபோது காற்றடிக்கும் சைக்கிள் பம்ப் ஒன்றினால் அவரது தலையில் அடித்த பின்னர் கத்தியாலும் குத்தி விட்டு துப்பாக்கியைப் பறித்துக் கொண்டு புலிகளிடம் ஓடிச் சென்றார் சிவிலியன் ஒருவர். அடையாளமில்லாத புதியவர் ஒருவர் துப்பாக்கியுடன் வருவதைக் கண்ட புலிகள் முதலில் பதட்டமடைந்தனர். பின்னர் ஆயுதத்தை அவரிடமிருந்து களைந்துவிட்டு நீண்ட விசாரணை நடத்தினர். நடந்த சம்பவம் தெளிவாகத் தெரியவரவே, சாதாரண பொதுமகனான இவரின் திறமையைப் பாராட்டி ஒரு தொகைப் பரிசுப் பணத்தையும் வழங்கியதுடன் இவரைப் புகழ்ந்து ஊர்வலமாக அழைத்துச் சென்றதாகவும் அறிய வருகிறது.

ஏறாவூரைச் சேர்ந்த குடும்பஸ்தரான இவர் ஒரு விறகு வியாபாரியாக இருந்தார் என்று கூறப்படுகிறது.

இவரால் தாக்கப்பட்ட படைவீரர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சில தினங்களில் இறந்ததாகவும் தெரிய வருகிறது.

# அணைக்கட்டு அமைக்கும் புலிகள்

(ஏறாவூர் நிருபர்)

**ம**ட்டக்களப்பு மாவட்டத்தில் மிகப்பெரியதான உறுகாமம் குளத்தின் அணைக்கட்டைத் திருத்தியமைக்கும் கொந்தராத்து வேலையில் புலிகள் தற்சமயம் ஈடுபட்டுள்ளார்கள்.

மட்டக்களப்புப் பகுதியில் உழவு இயந்திரங்கள் வைத்திருப்போர் இரண்டு நாட்களுக்குத் தேவையான எரிபொருளை நிரப்பிக் கொண்டு கூலியாட்களுடன் வந்து 20 பெட்டி மண் ஏற்றிக்கொட்டவேண்டும் என்று புலிகள் கேட்டுள்ளனர். கூலியாட்களுக்குரிய கூலிகளை மட்டும் புலிகள் வழங்குகிறார்கள். நாட் கூலியாக ஒருவேலையாளுக்கு ரூபா 125/- வழங்கப்படுகிறது.

ஏற்கனவே முதற்கட்டத் திருத்த வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதால் அவ்வேலைக்கு உதவிய விவசாயிகளையும், வாகனச் சொந்தக்காரர்களையும் அழைத்து சமீபத்தில் புலிகள் நடத்திய கூட்டமொன்றில் நன்றி தெரிவித்தனர்.

இக்குளத்தின் அணைக்கட்டுப் பலப்படுத்தப்பட்டுத் திருத்தப்பட்டுள்ளதால் இம்முறை போதியளவு நீரைத் தேக்கி வைத்து தங்கு தடையின்றி அதிக அளவான நெற்காணிகளைச் செய்கை பண்ண முடியும் என்று விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவிக்கிறார்கள்.

உறுகாமம் பெரிய நீர்ப்பாசனத் திட்டம் செங்கலடி நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் வருகிறது.

# "தீண்டிவிடுவோம் ஜாக்கிரதை!"
## 'விடுதலை நாகங்கள்' எச்சரிக்கை!

**அ**ம்பாறை மாவட்டத்தில் உள்ள அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்கள், மற்றும் பிரதேச சபை, அபிவிருத்திச் சபை ஆகியவற்றின் தலைவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புதிய இயக்கப் பெயரில் அந்த எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

'தமிழின விடுதலை நாகங்கள்' என்ற பெயரிலேயே எச்சரிக்கைக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

அக்கடிதத்தில் பின்வருமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது:

"ஈழத் தமிழினத்தின் விடுதலை வேள்வித்தீ அகிலமெங்கும் சுடர்விட்டெரியும் இந்தக் காலகட்டத்தில் சில சுயநல சக்திகள் தமிழினத்தின் தனித்துவத்தை விற்கும் வகையில் செயற்படுகின்றன.

சிங்களக் கட்சிகளின் பாதம் தாங்கிகளாக, சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசின் முகவர்களாக, அரசின் தயவில் இருந்தபடி தமிழர் துயர் பற்றி பிரஸ்தாபித்து அழும் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ, புளொட், ஈ.பி.டி.பி. போன்றவற்றின் ஊர் பிரதிநிதிகளாக, 1994 தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் திருகுதாளம் போட்ட தமிழர் மகாசபையின் பிரதிநிதிகளாக, வடக்கு-கிழக்கின் நிர்வாக முறைமையை முஸ்லிம் மயமாக்க நினைக்கும் அஷ்ரப்பின் அடிமைகளாக செயற்படுவதை உடன் நிறுத்தும்படி எச்சரிக்கிறோம்.

மீறினால் காற்றும் நுழைய முடியாத துவாரத்தின் ஊடாக உட்புகுந்து தீண்டி விடுவோம் ஜாக்கிரதை!" இவ்வாறு அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'தமிழின விடுதலை நாகங்கள்' என்பது புலிகள் இயக்கத்தினரின் ஒரு பிரிவாக இருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது.


படிப்பகம்

www.padippakam.com

# வைத்தியர்களுக்குப் பலத்த பற்றாக்குறை!

## மன்னார் ஆஸ்பத்திரி மூடப்படும் அபாயம்!

(மன்னார் நிருபர்)

மன்னார் அரசினர் ஆதார வைத்திய சாலை தற்போது யாருமே கவனிப்பாரற்ற நிலையில் அநாதரவாகக் காட்சி தருகிறது. இந்நிலை இன்னும் சில நாட்கள் நீடிக்குமேயானால் இந்த ஆஸ்பத்திரி எந்த வேளையிலும் இழுத்து மூடப்படலாம் எனத் தெரியவருகிறது.

தினமும் ஏராளமான நோயாளர்கள் வெளி நோயாளர் பகுதி கிளினிக் ஆகியவற்றிற்கு வருகின்றனர். வார்ட்டுக்களிலும் ஏராளமானோர் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரையும் முறையாக கவனிக்க போதியளவு வைத்தியர்கள் இங்கில்லை.

19 பேர் தேவையாகவுள்ள இவ்வாஸ்பத்திரியில் ஒரு உதவி வைத்திய அதிகாரியும், இரு டாக்டர்களும் கடமை புரிகின்றனர். இந்த இரு டாக்டர்களும் இடமாற்றத்திற்கு விண்ணப்பித்து அதனை எதிர்பார்த்த வண்ணம் உள்ளனர். எந்நேரமும் இடமாற்றம் கிடைக்கலாம்.

தற்போது இம்மாவட்டத்தில் ஒரு வித வைரஸ் காய்ச்சல் மிக வேகமாகப் பரவி வருகிறது. இந்நோயினால் இதுவரை ஐயாயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இதனால் வைத்தியசாலையை நாடி வருவோரின் எண்ணிக்கையும் மிக வேகமாக அதிகரித்து வருகிறது. வைத்தியர்கள் இரவு பகலாக தமது முழு மூச்சையும் பயன்படுத்தி நோயாளர்களை கவனித்து வருகின்றனர்.

ஒரு டாக்டர் போனால் கூட வைத்தியசாலையை இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அவ்வாறு ஏற்படுமேயானால் முதற்கட்டமாக வெளிநோயாளர் பகுதி மூடப்பட்டு, படிப்படியாக ஆஸ்பத்திரி முழுவதையும் மூடவேண்டிய நிலைக்கு ஆஸ்பத்திரி நிர்வாகம் தள்ளப்பட்டுள்ளது.

வெளியிடங்களுக்கான நிலத்தொடர்புகள் துண்டிக்கப்பட்ட நிலையில் உள்ள மன்னார்த் தீவில் 32 ஆயிரம் மக்கள் வாழ்கின்றனர். இங்கு வார்ட் வசதி கொண்ட தனியார் வைத்தியசாலை ஒன்றுகூட இல்லை.

இதனால் ஆயிரமாயிரம் மக்கள் நாட வேண்டிய இவ்வாஸ்பத்திரி கேட்பார், பார்ப்பார் யாருமின்றி, அநாதை போல் விடப்பட்டுள்ளமை குறித்து இப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

## புலிகளுக்குப் புத்தி புகட்டுமாறு போதனை!

(ஏறாவூர் நிருபர்)

இம்மாதம் எட்டாம் திகதி முதல் இங்கினியாகலையிலிருந்து மட்டக்களப்புக்கான மின் விநியோகத்தைப் புலிகள் போரதீவில் சேதப்படுத்திவிட்டனர். இதனால் மட்டக்களப்பின் ஒரு பகுதி இருளில் மூழ்கியது. திருத்த வேலைக்குச் சென்ற இ.மி.ச.ஊழியர்களையும் புலிகள் தடுத்து வைத்துப் பின்னர் விடுவித்தனர். எனினும் வாகனத்தையும், உபகரணங்களையும் பறித்துக் கொண்டனர்.

இதன் காரணத்தினால் புலிகளுக்கு பொதுமக்கள் எதிர்ப்பைக் காட்ட வேண்டுமென்று படையினர் விரும்பினர். கடந்த வாரம் களுவாஞ்சிக்குடி, களுதாவளை, ஓந்தாச்சிமடம், கல்லாறு, கோட்டைக் கல்லாறு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்களை களுவாஞ்சிக்குடி விஷேட அதிரடிப்படைமுகாமுக்கு வருமாறு ஒலி பெருக்கி மூலம் கேட்டுக் கொண்ட அதிரடிப் படையினர், "பொதுமக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் நாசகார நடவடிக்கைகளில் புலிகள் ஈடுபடுகின்றனர். இப்பொழுது மின்விநியோகத்தைத் துண்டித்துப் பொது மக்களுக்குப் பெருங் கஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளனர். தனிநாடு கோரிப் போராடும் புலிகள் தமிழ் மக்களைத் தவறான வழிக்கு இட்டுச் செல்கின்றனர். எனவே வன்முறையற்ற விதத்தில் போராடுமாறு நீங்கள் புலிகளுக்குக் கூறவேண்டும்," என்று அங்கு பெருமளவில் திரண்டிருந்த பொதுமக்களைப் படையினர் கேட்டுக் கொண்டனர்.

## கடல் நீரில் குளிக்க ரூபா 200

(மன்னார் நிருபர்)

தற்போது மன்னார்–கற்பிட்டி பகுதிகளுக்கிடையில் நடைபெற்று வரும் பயணிகள் படகு சேவையில் பல குறைபாடுகள் காணப்படுவதாகப் பயணிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

இப்படகில் சுமார் 200 பேர் வரை ஏற்றப்படுகின்றனர். எனினும் போதிய ஆசனம் கிடையாது. வசதிகளுடனான கென்டீன் இல்லை. இருப்பது ஒரேயொரு மலசல கூடம். எல்லா இடங்களிலும் குடிநீர் வைக்கப்படுவதில்லை.

அத்துடன் இருக்க இடமில்லாதோர் நிற்கவும் முடியாது. கூரையோ ஓட்டை. மிகவும் மெதுவான பயணம். 70 கிலோமீட்டர் தூரத்தை கடக்க 7 மணித்தியாலங்கள். இப்படி பல பல.

கடுமையான காற்று, கடல் கொந்தளிப்பு காலங்களில் பெய்கின்ற மழையில் ஒருபுறமும், அடிக்கின்ற கடல் நீரில் மறுபுறமும் குளித்துக் கொண்டு தான் பயணம் செய்யும் நிலை, பொருட்கள் நனைவது ஒரு புறம், உடல், உடை அசுத்தமடைவது மறுபுறம்.

இத்தனைக்கும் பயணி ஒருவருக்கு அறவிடப்படும் கட்டணம் ரூபா 200. பணம் மட்டுமே ஒரே குறிக்கோள்!

மிக மோசமான நிலையிலிருக்கும் இப்பயணச் சேவை சீர் செய்யப்படுவது அவசியம் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

## நியமனத்தில் நீண்ட தாமதம்

வடகிழக்கு மாகாண பாடசாலைகளில் காணப்படுகின்ற சிற்றூழியர் வெற்றிடங்களை நிரப்பும் முகமாக அதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு அதிலிருந்து சில மாதங்களின் பின்னர் அதற்கான நேர்முகப் பரீட்சைகளும் நடைபெற்றுமுடிந்துள்ளன.

பிரஸ்தாப நேர்முகப் பரீட்சையின் போது தெரிவு செய்யப்பட்டவர்கள், தத்தம் பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ்கள், மற்றும் சில முக்கிய சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளை அவரவர் கல்வித்திணைக்கள அலுவலகத்தினூடாக, கல்விப் பணிப்பாளரின் உறுதி செய்தலுடன் அனுப்பி வைக்க வேண்டும் என வடகிழக்கு மாகாண கல்வி, கலாசார விளையாட்டுத்துறை அமைச்சினால் கேட்கப்பட்டு, சகலரினதும் சான்றிதழ்கள் அமைச்சுக்கு அனுப்பப்பட்டன.

மாதங்கள் பல ஆகியும் இதுவரை தெரிவு செய்யப்பட்டோருக்கான நியமனம் அமைச்சினால் வழங்கப்படவில்லை என சம்பந்தப்பட்டவர்கள் அங்கலாய்க்கின்றனர்.

இன்றுவரும், நாளை வரும் என எதிர்பார்த்த வண்ணம் காத்திருக்கின்ற மேற்படி விண்ணப்பதாரிகளின் சிற்றூழியர் நியமனம், இலவுகாத்த கிளியின் கதையாக மாறிவிடுமோ எனவும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது. மாகாண கல்வி அமைச்சின் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பிரஸ்தாப நியமனம் விரைவில் கிடைக்க ஏற்பாடுசெய்வார்களா? என தெரிவு செய்யப்பட்டவர்கள் வினவுகின்றனர்.

## கிராமிய வங்கியில் கேலியான தமிழ்

### வங்கி 'லங்கி'யானது! வட்டி 'லட்டி'யானது!

உங்களுக்கு தெரியுமா:–

- நீங்கள் பணத்தை முதலிடும் நாளே உங்கன்ப்பனத்திற்கு லட்டி
- லருடக்கிற்டு 17.5% லறையிலான ஆக கடுநலகலட்டி
- காலம் ழர்த்தியாதைும் எர்த லநசியிலும் பனமாக்கும் லசதி

கேகாலை பிரதேச கிராமிய அபிவிருத்தி லங்கியிள் பகத்தாக அறிமுகம் செய்யும்

1996–08–10 திகதி

முதல் உங்கள் முன்றிலையில்.

- ☆ நீநான் லாங்கும் சகல சான்றிதழ்கழுகும் லருடாந்த சீட்டிழுப்ப லூன்று.
- ☆ நீங்கள் தேடிலது உங்கள் பணத்தறகு கிறத்த பாதுகாட்டும், ஆக கூடிய வட்டியும் கீடிய ஏம்பிக்கையான முதலீட்டு முகைதானே.

1997–12–31 முதலாவது சிப்புகப்பின் பெது பெறுமதியன் பரிசுகளை லெல்லுநகலா!

ஆகலே உடனே கேகாலை பிரதேச கிராமிய அபிவிருத்தி லங்கிக்கு செல்லுங்கள்

அரசாங்கத்தின் லிலெட அநுசரனை இலங்கை மத்திய லங்கியின் பலமான பாதுகாப்புடன நாம் ழன்னை லிட முன்றிலையில் உள்ளோம்.

கேகாலை பிரதேச கிராமிய அபிவிடுத்தி லங்கி
பிரதான காரியாலயம் – இல. 143/2,
மத்திய வீதி, கேகாலை.

Quality Printers - Hettimulla

தமிழுக்கு சம உரிமை வழங்கப்படும் முறையைப் பார்க்கும்போது, "பிச்சை வேண்டாம் நாயைப் பிடி" என்பது போல, "சம உரிமை வேண்டாம், தமிழைக் கடிக்காது விடுங்கள் போதும்!" என்று கூறலாம் போல உள்ளது.

கேகாலை கிராமிய அபிவிருத்தி வங்கி வெளியிட்டுள்ள பிரசுரம் ஒன்று உங்கள் பார்வைக்குத் தரப்பட்டுள்ளது. இதில் பிழையில்லாத ஒரு வாக்கியத்தை யாவது கண்டுபிடித்தால் உங்களுக்கு ஆயிரம் பொன் பரிசாகத் தரலாம்.

## சிநேகபூர்வ விளையாட்டு சீர்குலைப்பு

### பொலிஸார் மீது முறைப்பாடு!

(ஏறாவூர் நிருபர்)

ஏறாவூர்ப்பற்று தமிழ் பிரதேச செயலகம், ஏறாவூர் நகர பிரதேச செயலகம், அலிகார் தேசியக் கல்லூரி, ஏறாவூர் ப.நோ.கூ.சங்கம் ஆகியவற்றுக்கிடையில் தேசியக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கிரிக்கெட் போட்டி நடந்து கொண்டிருந்தபோது அங்கு சிவில் உடையில் வந்த ஏறாவூர் பொலிஸைச் சேர்ந்த சிலர் விக்கட் கம்புகளைப் பிடுங்கியெறிந்து விளையாட்டைக் குழப்பினர். தங்களையும் விளையாட்டில் ஓர் அணியாகச் சேர்க்காததினாலேயே பொலிஸார் விளையாட்டைச் சீர்குலைத்துப் பதற்றத்தை உண்டு பண்ணியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து விளையாட்டு அணிகள் அங்கிருந்து வெளியேறின. தமிழ்-முஸ்லிம் விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்ட அந்த நிகழ்ச்சியில் பொலிஸார் புகுந்த சம்பவம் பதற்றத்தை உண்டு பண்ணியது.

ஒற்றுமையின் முக்கியத்துவமும், விளையாட்டின் மகத்துவமும் தெரியாமல் இவ்விதம் முறைகேடாக வந்து புகுந்து குழப்பத்தை ஏற்படுத்திய பொலிஸார் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஏறாவூர்ப் ப.நோ.கூ.சங்கத்தின் விளையாட்டு முகாமையாளர் யூ.ஏ.லத்தீப் புகார் செய்துள்ளார்.


தரமான COMPUTER கல்வியைப் பெற்றுக் கொள்ள விரும்பும் ஒவ்வொருவரும் மட்டுநகரில் தெரிவு செய்யும். பதிவு செய்யப்பட்ட COMPUTER நிறுவனம் CSS.

மட்டுநகரில் CSS
CENTRE FOR SYSTEMS STUDIES

தற்கால தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்ட கீழ்காணும் பாட நெறிகளுக்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 09-11-1996

Diploma in Computer Programming.
Diploma in Computer Applications.
Diploma in Software Engineering.

ACS, NECS, Windows 3.11/95, Dos 6.22, EXCEL, Word, C++ , PASCAL, CLIPPER, dBASE, ACCESS மற்றும் பல....... 10% DISCOUNTS

குறிப்பு:–O/L பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான வகுப்புக்கள் பரீட்சையின் பின் ஆரம்பமாகும்.

* கட்டணத்தினை மாதாந்தம் செலுத்த முடியும்

-மேலதிக விபரங்களுக்கு-
DIRECTOR CSS,
No. 99, Pansala Road,
BATTICALOA.



சுவிட்சர்லாந்தில்
ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சிக்கு
மாணவர்கள் தேவை

1997 ஆம் ஆண்டு பெப்ரவரி வருடத்துக்கான மாணவர் அனுமதி

இலங்கைப் பிரஜைகளிடமிருந்து பின்வரும் பாடநெறிகளுக்காக சுவிட்சர்லாந்திலுள்ள ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சி நிலையத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

(1) உணவு மற்றும் விடுதிகள் சிற்றுண்டிச்சாலைகளுக்கான முகாமைத்துவம். (1 வருடம்)
CERTIFICATE IN FOOD & BEVERAGE MANAGEMENT (1YEAR COURSE)
(2) அறைகளைக் கொண்ட கட்டிட பிரிவுகளுக்கான முகாமைத்துவம். (1 வருடம்)
CERTIFICATE IN ROOMS AND DIVISION MANAGEMENT (1YEAR COURSE)
(3) ஹோட்டலை வழிநடத்துவதற்கான முகாமைத்துவம். (2வருடம்)
DIPLOMA IN HOTEL AND OPERATIONAL MANAGEMENT (2YEAR COURSE)
(4) உயர்முகாமைத்துவத்திற்கான. உல்லாச பிரயாணத்திற்கான முகாமைத்துவ டிப்ளோமா. (3 வருடம்)
HIGHER DIPLOMA IN HOTEL MANAGEMENT & TOURISM (3YEAR COURSE)

தகைமைகள்: க.பொ.த (சா.த) மற்றும் அதற்கும் மேற்பட்ட தராதரம்– 18 வயதுக்கு மேற்பட்டிருப்பதோடு ஆங்கில மொழியில் நல்ல தேர்ச்சி இருக்கவேண்டும்.

ஒவ்வொரு கல்வியாண்டும் ஐந்து மாத வகுப்பறைக் கல்வியும் ஏழுமாத நடைமுறைப்பயிற்சியும் உள்ளடக்கப்பட்டதாக இருக்கும்.

**நடைமுறை பயிற்சிக்காலத்தின் போது மாதாந்தம் எஸ்.எப்.ஆர். 2,000 முதல் 2,500 வரை படியாக வழங்கப்படும். ஆண்டுக்கு எஸ்.எப்.ஆர். 10,000 வரை (இலங்கை நாணயப்படி சுமார் ரூபா. 4,70,000) சேமிக்கலாம்.**

சுவிஸ் ஹோட்டல் முகாமைத்துவ பாடசாலையின் இலங்கைப் பிரதிநிதியை மாணவர்களும் பெற்றோரும் 1996 அக்டோபர் 1 ஆம் திகதியிலிருந்து சந்தித்து சுவிட்சர்லாந்தில் ஹோட்டல் முகாமைத்துவ கற்கை பற்றிய மேல் விவரங்களையும் தேவையான விண்ணப்பப்படிவங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

தளுவத்த அண்ட் ஜெப்பே அசோசியேட்ஸ்
LG 15, பீப்பிள்ஸ் பாக் சொப்பிங் கொம்பிளெக்ஸ்
கொழும்பு-11.

(குணசிங்கபுர தனியார் பஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள கட்டிடம்) (Advt.)



Bright ன் தபால் மூலம் கல்வித்திட்டம்

முன்றே மாதங்களில் ஆங்கிலம்/ சிங்களம் பேச, எழுத, வாசிக்க கற்றுத் தரப்படும் விபரங்களுக்கு கீழ்க்காணும் விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்க.

பெயர்.........................
விலாசம்.........................

BRIGHT BOOK CENTRE (PVT) LTD
S-27, FIRST FLOOR, P.O.BOX 162,
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX,
COLOMBO 11. TEL : 434770



காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

ரிஷி. S.மணி

மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

சந்திரன்
144 2/1, காலிவீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
T.P: 586218, 078-63611
Fax: 503030



RAJA VAJEEKARANA (Rasayana) LEGIUM
ராஜ வஜீகரண (ரசாயன) லேகியம்



(முஸ்லீம் முறைப்படி ஆட்டு மாமிசத்தில் பக்குவமாய் தயாரிக்கப்பட்டது.)

சலாமிசிரி, பதாம் பருப்பு போன்ற விலையுயர்ந்த மருந்துகள் சேர்த்து தயாரானது. உல்லாச வாழ்விற்கு உறுணையானது.

ஸ்திரீ புருஷர்களின் பலவீனங்களைப் போக்கி தளர்ந்த நரம்புகளுக்கு முறுக்கேற்றி சுறுசுறுப்பையும் தேக காந்தியையும் உண்டாக்க வல்லது. உடல் பூரிக்கும். எலும்பும் தோலுமானவர்களின் சரீரத்தை ஆச்சரியப்படத்தக்க வகையில் புஷ்டியாக்கும். கணைச்சூடு தணியும். மூலச்சூட்டைப் போக்கும். இருமல் மார்பு இடுப்புவலி, கால் கை நடுக்கம் மற்றும் சகல பலவீனங்களுக்கும் சிறந்த ரசாயனம் இதுவே. உடல் பருத்தவர்களுக்கும், நீரிழிவு, பிளட் பிரஷர் உள்ளவர்களுக்கும், சிறுவர் சிறுமியருக்கும் சிறந்தது.

நாள்பட்ட பீனிசம், இளைப்பு, இருமல், மூலரோகங்கள் உள்ளவர்களும் பயமின்றி பலனடையலாம். பத்தியமில்லை.

500 gram 225/= 250 gram 115/=

வி பி பி ஆடர்கள் கவனிக்கப்படும்

Ayur Dr. K. Sivasubramaniam
முருகானந்தா வைத்தியசாலை

G/ 02, கொழும்பு மத்திய சுப்பர் மார்கெட், மீன்கடை மேல (நிலமாடி) கொழும்பு - 11.



படிப்பகம்

www.padippakam.com

# வெற்றிலைக்கேணியில் ஒரு முற்றுகை முயற்சி!

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

நாரதர்

1995ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29ம் திகதி முல்லைத்தீவுக் கடலில் ஐரிஸ் மோனா பயணிகள் கப்பல் கடற்புலிகளால் கடத்திச் செல்லப்பட்டது.

அக்கப்பலை தேடிச்சென்ற கடற்படையின் டோராப் படகுகள் இரண்டு கடற்புலிகளால் தாக்கப்பட்டது. ஒரு டோராப் படகு கடலில் மூழ்கியது. இன்னொரு டோராப்படகு எரிந்து கொண்டிருக்க, கடற்புலிகள் அதனை கட்டி இழுத்து தமது தளத்துக்குக் கொண்டு சென்றனர்.

ஐரிஸ்மோனாவில் சென்ற பயணிகள் கடற்புலிகளின் தளத்தில்தான் தங்கவைக்கப்பட்டனர்.

முல்லைத்தீவுக்கும் வெற்றிலைக்கேணிக்கும் இடையில்தான் கடற்புலிகளின் பிரதான தளம் அமைந்திருந்தது.

விமானத்தாக்குதல்களை எதிர்கொள்ளக்கூடியவகையில் கடற்புலிகளின் தளம் உருவாக்கப்பட்டிருந்தது.

கடற்புலிகளின் படகுகள் நிலத்துக்குக் கீழே தரித்திருக்கக்கூடியவகையில் தளம் அமைக்கப்பட்டிருந்தது.

கடலில் இருந்து நேரடியாகவே தரைக்கு கீழான தரிப்பிடத்துக்கு படகுகள் சென்றுவிடலாம்.

கிட்டத்தட்ட ஒரு குட்டித்துறை முகம் போல கடற்புலிகளின் தளம் நிறுவப்பட்டிருந்தது. ராடர் சாதனங்களும் பொருத்தப்பட்டிருந்தன.

கடற்புலிகளது தளத்துக்கு சமீபமான கடற்பகுதியில் படகுகள் நடமாட்டம் இருந்தால் ராடர் காட்டிக்கொடுத்துவிடும்.

தரையில் இருந்து கடற்பகுதியை நோக்கி நீண்டதூரம் சுடக்கூடிய கலிபர் துப்பாக்கிகள் கடற்புலித் தளத்தில் எந்நேரமும் தயார்நிலையில் வைக்கப்பட்டிருக்கும்.

கடற்படையினரின் மீதான தாக்குதல்களில் கைப்பற்றப்பட்ட 'ராடர்கள்', நீண்ட சுடு தூர இயந்திரத் துப்பாக்கிகள் என்பவற்றையும் கடற்புலிகள் தளப்பாதுகாப்புக்கு பயன்படுத்திக் கொண்டார்கள். தாழப்பறந்து செல்லும் விமானங்களையும் அத்துப்பாக்கிகளால் சுடமுடியும்.

கடற்புலிகளின் பிரதான தளம் தொடர்பான விபரங்கள் கடற்படையினருக்கும் ஓரளவு தெரிந்தே இருந்தது. எனினும் அதன் பலம் பலவீனம் தொடர்பான போதிய விபரங்கள் இருக்கவில்லை.

படையினரின் வடபகுதிக்கான கடற்போக்குவரத்துக்கு முல்லைத்தீவில் அமைந்துள்ள கடற்புலிகளின் தளம் பெரும் அச்சுறுத்தலாகவே இருக்கிறது.

வானில் இருந்து தாக்குதல் நடத்துவதால் மட்டும் குறிப்பிட்ட தளத்தை முற்றாக அழித்துவிட முடியாது.

வானில் இருந்து இனம்கண்டு தாக்க முடியாதளவுக்கு உருமறைப்பு செய்யப்பட்ட நிலையில்தான் தளம் இருக்கும்.

தாக்குதல் நடத்தப்பட்டாலும் கடற்புலிகள் தரைக்கு கீழான பதுங்குமிடங்களில் பத்திரமாக இருந்துவிடுவார்கள். படகுகளுக்கும் சேதம் இருக்காது.

எனவேதான் கடற்புலிகள் தளத்தை முற்றுகையிட்டு தாக்கும் ஒரு நடவடிக்கைக்கு திட்டமிடப்பட்டது.

திடீர் தாக்குதல்வியூகம் வகுக்கப்பட்டது.

கடல் வழியாகவும், வான் வழியாகவும் கொமாண்டோக்களை தரையிறக்கி கடற்புலித் தளத்தின்மீது அதிரடித் தாக்குதல் நடத்துவதே படையினரின் திட்டம்.

திட்டத்தின் நோக்கம் இரண்டு. ஒன்று: கடற்புலித்தளத்தை முற்றாக நிர்மூலம் செய்வது.

இரண்டு: படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதி ஒன்றுக்குள் கொமாண்டோக்களை தரையிறக்கி ஊடுருவும் தாக்குதல் ஒன்றை நடத்தும் சாத்தியத்தை பரிசீலிப்பது.

பரந்த நிலப்பரப்புகளில் நிலைகொள்ள படையினரின் எண்ணிக்கை போதாமல் இருக்கிறது. ஏற்கனவே கைப்பற்றப்பட்ட நிலப்பரப்புக்களிலும் புலிகளின் அணிகள் பாரியளவில் அழிக்கப்படவில்லை.

எனவே நிலப்பரப்புக்களை பிடித்து வைத்திருப்பதைவிட புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் முக்கிய தளங்களை இனம்கண்டு அழிக்க முடிந்தால் ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள்.

புலிகளின் ஆட்பலத்தையும் அழிக்கலாம். படையினரின் ஆட்பலத்தை நீண்ட நிலப் பகுதிகளில் முடக்கும் தேவையும் இருக்காது.

வியட்நாம் யுத்தத்தில் அமெரிக்கப் படைகள் கையாண்ட தாக்குதல் உபாயம் அதுதான்.

வியட்நாம் போராளிகளின் முகாம்களுக்கு அருகே அமெரிக்க கொமாண்டோக்கள் வான் வழியாக தரையிறக்கப்பட்டு அதிரடித்தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

குறிப்பாக காட்டுப்பகுதிகளுக்குள் நீண்ட தூரம் தரைவழியாக நகர்ந்து சென்று இலக்குகளை நோக்கி முன்னேறுவதைவிட, குறிப்பிட்ட இலக்குக்கு அருகில் தரையிறங்கித் தாக்குவது புத்திசாலித்தனம்.



'யால' பயிற்சி முகாமில் அமெரிக்க கொமாண்டோக்களும் இலங்கைப் படையினரும்

எதிரி உஷாரடைவதற்கும், பின்வாங்கிச் செல்வதற்கும் வாய்ப்பு இருக்காது. எதிரியின் வியூகத்துக்குள் மாட்டிக்கொள்ளும் அபாயமும் குறைவாக இருக்கும்.

வியட்நாம் யுத்தத்தில் அமெரிக்கப் படைகள் கையாண்ட அத்தகைய அணுகுமுறையால் வியட்நாம் போராளிகளுக்கு கணிசமான உயிரிழப்பு ஏற்பட்டது. ஆயினும் அமெரிக்கக் கொமாண்டோக்களும் பாரியளவில் பலியாகினர்.

இறுதியில் அமெரிக்கப் படைகளின் 'எதிரியின் குகைக்குள் எதிரியை அழிக்கும்' தந்திரோபாயம் தோல்வியில்தான் முடிந்தது.

அமெரிக்கக் கொமாண்டோக்கள்தான் இப்போது இலங்கைப் படையினருக்கு யால

## அமெரிக்கப் பயிற்சியின் ஒத்திகைக் களம்

காட்டுக்குள் வைத்து விசேஷ பயிற்சி கொடுக்கின்றனர்.

காட்டுக்குள் உள்ள இலக்குகளை திடீர் தாக்குதலால் அழித்தொழிப்பது. குறைந்த நேரத்துக்குள் குறிப்பிட்ட ஒரு தளத்தை முற்றுகையிட்டு நிர்மூலம் செய்வது. தமக்கு பின்பலமோ வேறு உதவியோ கிடைக்காத ஒரு பகுதிக்குள் புகுந்து தாக்கிவிட்டு திரும்புவது போன்றவையும் கொமாண்டோ பயிற்சியில் அடங்குகின்றன.

கெரில்லாக்களை கெரில்லா யுத்தப்பாணியில் எதிர்கொள்ளக்கூடிய விசேஷ கொமாண்டோக்களை உருவாக்கத்தான் அமெரிக்கப் பயிற்சி இலங்கைப் படையினருக்கு தேவைப்படுகிறது.

முல்லைத்தீவு முகாமை புலிகள் தாக்கிய நேரத்திலும் விசேஷ கொமாண்டோப் படையினர்தான் கடல், வான் வழியாக அனுப்பிவைக்கப் பட்டனர்.

எனினும் முகாமில் தமது நடவடிக்கைகள் அனைத்தும் முடியும்வரை விசேஷ கொமாண்டோக்கள் முகாம் பகுதிக்கு செல்ல முடியாதவகையில் புலிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

விரைவாக குறிப்பிட்ட இலக்கை நோக்கி முன்னேறும் முயற்சியில் விசேஷ கொமாண்டோக்களுக்கு முல்லைத்தீவில் தோல்வியே ஏற்பட்டது.

புலிகள் முன்கூட்டியே தயார் நிலையில் இருந்தமையாலும், படைகள் உதவிக்கு வரலாம் என்று புலிகள் எதிர்பார்த்து இருந்தமையாலும் குறித்த நேரத்தில் குறித்த பகுதியை சென்றடைய முடியவில்லை என்று அப்போது படையினர் கருதியிருக்கலாம்.

எனவே-புலிகள் எதிர்பாராத நேரத்தில் கொமாண்டோத் தாக்குதல் ஒன்றை நடத்தினால் அதனைப் புலிகள் எவ்வாறு எதிர்கொள்கிறார்கள் என்பதைக் கண்டறியவும் படைத்தரப்பு விரும்பியது. அதற்கான பரீட்சார்த்த களமாகவும் வெற்றிலைக்கேணிச் சமர் அமைந்தது.

கிட்டத்தட்ட இருபது பீரங்கிப் படகுகளில் விசேஷ கொமாண்டோக்கள் புறப்பட்டனர். புக்காரா விமானம், கிபீர் விமானங்கள், ஹெலிகொப்டர் என்பவையும் பயன்படுத்தப் பட்டன.

ஒன்றன் பின் ஒன்றாக கடற்படை படகுகள் விரைந்து வருவதை கடற்புலிகளின் ராடார் காட்டிக் கொடுத்துவிட்டன. நேரம் அதிகாலை 6.30 மணி. கடற்புலிகளின் தளம் சண்டைக்கு தயாரானது. அருகிலுள்ள புலிகளின் இயக்க முகாம்களுக்கும் கடற்புலிகளின் தளத்தில் இருந்து செய்தி தெரிவிக்கப்பட்டது. அங்கிருந்தும் புலிகளின் அணிகள் உதவிக்கு விரைந்தன.

கடற்படைப் படகுகள் தரைக்கு வருவதற்கு இடையில் கடற்புலிகளது இயந்திரத் துப்பாக்கிகள் அவற்றைக் குறிவைத்து இயக்கப்பட்டன.

ஆர்.பி.ஜி ரக ஆயுதங்களாலும் கடற்புலிகள் தாக்க ஆரம்பித்தனர்.

அதேநேரம் வானில் வட்டமிட்ட விமானங்களும் கடற்புலிகளை நோக்கி தாக்கத்தொடங்கின.

ஹெலிகொப்டர் மூலமாக கொமாண்டோக்களை தரையிறக்கும் முயற்சியும் நடந்தது. கடற்புலிகள் கலிபர் இயந்திரத் துப்பாக்கியால் சுட்டதில் ஹெலிகொப்டர் சேதமடைந்து சுடுதூரத்துக்கு மேலாக வானில் உயர்த்தப் பட்டது.

விமானங்கள் வானில் வட்டமிட்டு உயரப் பறந்தபடி குண்டுத்தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தன.

கடற்புலிகளும், உதவிக்கு விரைந்த புலிகளின் அணிகளும் பதுங்கு நிலை எடுத்தபடியே எதிர்தாக்குதலில் ஈடுபட்டன.

அச்சந்தர்ப்பத்தில் கடற்படையினரின் அதிவேகத் தாக்குதல் படகொன்று கரையை நோக்கி விரைந்தது.

கரையில் இருந்து ஆர்.பி.ஜி ரொக்கட் லோஞ்சரால் அப்படகை குறிவைத்து புலிகள் தாக்கினார்கள். படகு தாக்கப்பட்டதால் அதிலிருந்த கடற்படையினரும், கொமாண்டோக்களும் காயமடைந்தனர்.

மற்றுமொரு கடற்படைப் படகும் தாக்குதலில் சேதமடைந்தது.

கடற்படையினரின் படகுகளில் இருந்த பீரங்கிகள் கரையை நோக்கி சரமாரியாக தாக்குதல் நடத்தின.

நீண்ட நேரமாக சண்டை தொடர்ந்த போதும் கடற்புலிகளின் தளத்தை படையினரால் நெருங்க முடியவில்லை.

புலிகளின் அணிகள் சண்டையின் போக்கை அவதானித்து வியூகம் வகுக்குமளவுக்கு கால அவகாசம் நீண்டுகொண்டிருந்தது.

தொடர்ந்து சண்டையில் ஈடுபட்டால் வியூகத்திற்குள் சிக்கிக்கொள்ள வேண்டியிருக்கும் என்பதால் கடற்படைப்படகுகள் வெற்றிலைக்கேணி முகாமுக்கு திரும்பின.

கடற்படையினர் தரப்பில் 9 பேர் பலியானதாகவும், 44 கொமாண்டோக்கள் காயமடைந்ததாகவும் படைத்தரப்பினர் அறிவித்தனர். இரண்டு அதிவேக ஜெற் படகுகள் சேதமடைந்தன. ஒரு ஹெலிகொப்டரும் சேதமானது என்பதையும் படைத்தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

கடற்புலிகள் தரப்பில் சண்டைக்கு தலைமைதாங்கியவர் லெப்டினன்ட் கேணல் வாசன். கடற்புலிகளின் முக்கிய தளபதியான வாசன் சண்டையில் பலியானார். கடற்புலிகள் தரப்பில் ஏற்பட்ட பாரிய இழப்பு அதுதான். வாசன் உட்பட மூன்று கடற்புலிகள் சண்டையில் பலியாகியுள்ளனர்.

வெற்றிலைக்கேணி சமரைப் பொறுத்தவரை படையினர் தாம் நினைத்த காரியத்தை சாதிக்காமல் திரும்பியுள்ளனர். கடற்புலிகளை விட படைத்தரப்புக்கே பாரிய சேதமும், இழப்பும் ஏற்பட்டுள்ளது.

கடற்புலிகளது தளத்தை நிர்மூலமாக்கி விட்டதாக படைத்தரப்பினர் தெரிவித்திருந்தனர். டபிள்-கப் வாகனமொன்றையும், உலர் உணவுப் பொருட்களையும் கைப்பற்றியதாகவும் படைத்தரப்பினர் கூறியிருந்தனர்.

டபிள்-கப் வாகனம் என்பது தரையில் ஓடுவது. கடற்புலிகளது பிரதான தளத்தை கைப்பற்றியதாக தெரிவிக்கும் படையினர் கடற்புலிகளது சாதனங்கள் எதனையும் கைப்பற்றவில்லையே ஏன்?

ஒரு மணி நேரத்திற்குள் கடற்புலிகளது தளப்பகுதி கைப்பற்றப்பட்டதாக படைத்தரப்பினரின் செய்தி தெரிவிக்கிறது. அப்படியானால் கடற்புலிகள் தமது படகுகளையோ, படகில் பொருத்தக்கூடிய எஞ்சின்களையோ, ஏனைய சாதனங்களையோ கொண்டு சென்றிருக்க முடியாது. கால அவகாசம் போதாது. நடந்தது அதுதான் என்றால் கடற்புலிகளது சாதனங்களை கைப்பற்றியதாகவோ, கைப்பற்றிய பகுதியில் கைப்பற்றிய சாதனங்களுடன் நின்று தொலைக்காட்சியிலும் காண்பித்திருப்பார்கள்.

எனவே-வெற்றிலைக்கேணி சமர் தொடர்பான படைத்தரப்பினர் வெளியிட்டுள்ள செய்திகள் பொருத்தம் அற்றவையாகவே உள்ளன.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்குள் திடீரென்று தரையிறங்கி அதிரடித்தாக்குதல் நடத்தும் முயற்சியும் தோல்வி கண்டுள்ளது.

கடல்சார்ந்த ஒரு பகுதியில் தரையிறங்க கடல், வான் என்று இருவழிகள் இருக்கின்றன. அவ்வழிகள் மூலமான தரையிறக்க முயற்சி ஒன்றுதான் தோல்வி கண்டுள்ளது.

இந்நிலையில் புலிகளின் காட்டுப்பகுதி தளங்கள் நோக்கி திடீர் தரையிறக்க அதிரடித் தாக்குதல் நடத்துவது சுலபமானதல்ல.

காட்டுக்குள் தொடர் முகாம்கள், பதுங்கு நிலைகள் இருக்கும் என்பதால் தரையிறக்கப் பட்ட அணிகள் மீள்வதற்கான பாதை இல்லாமல்போகலாம்.

எனினும் மீண்டும் திடீர் தரையிறக்கத் தாக்குதல் முயற்சிகளில் படையினர் ஈடுபட மாட்டார்கள் என்று சொல்வதற்கு இல்லை.

ஏனெனில் படையினரும் தோல்விகண்ட முனையில் மீண்டும் தாக்குதல் நடத்தும் அணுகுமுறையைக் கையாளத் தொடங்கியுள்ளனர்.

யாழ் குடாநாட்டில் முன்னேறிப் பாய்ச்சல் தோல்வி கண்டது. அதற்கு எதிராக புலிகள் மேற்கொண்ட பதில் தாக்குதலை மதிப்பிட்டு, அதற்கு ஈடுகொடுக்கும் மற்றொரு சமர் மூலம் யாழ் குடாநாட்டை படையினர் கைப் பற்றினார்கள்.

'சத்ஜய' மூலம் கிளிநொச்சியைப் பிடிக்கும் முதல் இரு கட்ட முயற்சிகளும் படையினருக்கு தோல்விதான். 'சத்ஜய' மூன்றாம் கட்டம் மூலமாக கிளிநொச்சி நகரைப் படையினர் கைப்பற்றினர்.

அதுபோல திடீர் தரையிறக்க கொமாண்டோ தாக்குதல்கள் இதுவரை தோல்வியில்தான் முடிந்துள்ளன. எனினும் மீண்டும் ஒரு கொமாண்டோ தாக்குதலில் படையினர் ஈடுபடமாட்டார்கள் என்று சொல்லவதற்கு இல்லை.

ஆனால் புலிகளின் முகாம்களில் பிரதானமானவை மிக விழிப்பான நிலையிலும், இனம் காணப்படமுடியாத நிலையிலுமே உள்ளன.

மரபுப்போர் முறையில் தொடர் படைவரிசைகள் மூலமாக குறிப்பிட்ட பகுதிகளை கைப்பற்றும் போரில் படையினருக்கு எத்தனை சாதகம் உள்ளதோ, அதேயளவு சாதகம் தமது பகுதிகள் திடீரென தரையிறங்கும் கொமாண்டோக்களை எதிர்கொள்வதில் புலிகளுக்கும் இருக்கிறது.

எனவே புலிகளுக்கு எதிராக அமெரிக்க கொமாண்டோப் பாணியிலான தாக்குதல் உத்திகள் போதிய பயனளிக்காது.

கெரில்லாக்களுக்கு எதிரான கெரில்லா போர் முறையில் வியட்நாமில் அமெரிக்கப் படைகளால்கூட வெற்றிபெற முடியவில்லை.

இந்தியப் படைகளும் புலிகளின் கெரில்லாப் போர்முறையை தமது படை பலத்தால் சந்திக்க முடிந்ததே தவிர, கெரில்லாப் பாணியிலான சண்டையில் ஈடுபடவில்லை.

அமெரிக்கப் படைகள் வியட்நாமில் போரில் ஈடுபட்டபோது ஆட்பலம் அவர்களுக்கு ஒரு பிரச்சனையாக இருக்கவில்லை.

இங்கே அரச படையினருக்கு ஆட்பலம் ஒரு பிரதான தேவை. அதுவுமே புலிகளின் வியூகத்துக்குள் சிக்கி பாரிய இழப்புக்களைச் சந்திப்பும் யுத்த வெற்றிப் பிரசாரங்களுக்கும் பாதகமாகிவிடும். படையினரை வீணாகப் பலிகொடுக்கிறார்கள் என்ற எதிர்க்கட்சி குரல் கொடுக்கும்.

எனவே தொலைக்காட்சியில் காண்பிக்கக்கூடிய வகையில் நிலப்பகுதிகளை பிடித்து, அங்கு படையினர் நிலைகொண்டிருக்கும் காட்சிகளை காண்பிப்பதுதான் அரசுக்கு பிரசார ரீதியில் லாபமானது.

ஆனால், அந்த நிலப்பகுதிகளில் புலிகள் ஊடுருவி பலத்த தாக்குதல் நடத்திவிட்டால் தனது பாடு தர்ம சங்கடமாகி விடும் என்பதும் அரசுக்குத் தெரியும்.

அதனால் புலிகள் இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிகளுக்குள் தேடிவர முன்னர், அவர்களை அவர்களது பகுதிகளுக்குள் தேடிச்சென்று தாக்கும் சில நடவடிக்கைகளையும் படையினர் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அந்த நடவடிக்கைகள் தோல்வியில் முடிந்தாலும்கூட, தாம் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகக் கூறும் பகுதிகளை அடுத்த தேர்தல்வரை தக்கவைத்துக்கொள்ள அந்த நடவடிக்கைகள் உதவினால் போதும் என்ற நிர்ப்பந்தமும் அரசுக்கு இருக்கிறது.

யுத்தத்தில் வெற்றி பெறுவதைவிட யுத்தத்தை தொடர்வது மூலமாக, யுத்தத்தை வெற்றிகரமாக மேலும் தொடர்வதற்கான ஆணை பெறும்களமாக அடுத்த தேர்தலை பயன்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கம்.

"வெற்றியின் விளிம்பில் நிற்கிறோம். மீண்டும் ஒரு சந்தர்ப்பம் தாருங்கள்." என்று கேட்பதற்கு ஏற்ற சூழலை தக்கவைத்தால் போதும் என்பதுதான் அரசின் நிலைப்பாடாக இருக்கிறது.

எனவே போரில் புதிய பாணிகள் பரிசீலிக்கப்படலாம். பயிற்சிகள் மேலும் பெறப்படலாம். புதிய தாக்குதல்கள் ஆரம்பிக்கப்படலாம். எப்படியோ போரிட்டுக் கொண்டே இருந்தாக வேண்டும். எல்லாப் பாதையும் ரோமாபுரிக்கே.

## அதிரடி அய்யாத்துரை



வெளிநாட்டு விவகாரத்துக்கு பொறுப்பானவர் சர்வதேச பொறுப்பு ஒன்றில் கண்வைத்துள்ளாராம். உலக சபையின் செயலாளர் நாற்காலிமீது தான் கதிர் பார்வை திரும்பியிருக்கிறது. பிரிட்டனும் கதிர் அந்த நாற்காலியில் பாய்வதற்கு உடன்பாடு தெரிவித்துள்ளதாம். அமெரிக்காவும் குறுக்கே நிற்காது எண்டு தகவல். ஆசிய நாட்டவர் ஒருவருக்குத்தான் இம்முறை நாற்காலி எண்டு பெரிய நாடுகள் விட்டுக்கொடுக்கும் எண்டும் கேள்வி. அப்படிப் பார்க்கும்போது நூற்றுக்கு 75% கதிருக்கு ஒரு வாய்ப்பு இருக்கிறதாம். சமீபத்தில் பிரிட்டனுக்குச் சென்று கதிர் ஆதரவு தேடியதாகவும் கேள்வி. நாற்காலி கிடைத்துவிட்டால் இரண்டு பேருக்கு அவர் நன்றி சொல்ல வேண்டியிருக்கும். ஒருவர், அவருக்கு தற்போதுள்ள பதவி கிடைக்க சிபாரிசு செய்த கூட்டான கட்சியின் நிலமானவர். மற்றவர் பதவி கொடுத்த அதிகாரமுள்ள சக்தியான நிலவு.

குழியில் கண்டெடுக்கப்பட்டோர் விடயத்தில் நியாயம் சொன்னவர் பிழைவிட்டுப் போட்டாராம். சொந்தங்களிடம் உடலைக் கொடுக்கக் கூடாது எண்டு சொல்லுறது என்ன நியாயம்? நியாயம் சொன்னவரும் ஒரு செந்தமிழர்தான். ஏன் அப்பிடிச் சொன்னனீங்கள்? எண்டு ஒரு நண்பர் கேட்க, "பெட்டையிலும் பிழைதான், அவையுடன் வாதாட்டம் நடத்தினதுதானே பிசகாய் போனது" எண்டாராம். நான் எண்டால் அந்த நியாயவாதியை நாலு கேள்வி நாக்கைப் பிடுங்குவது மாதிரி கேட்டிருப்பேன் பாருங்கோ. வேலியே பயிரை மேயுது. வேலியைவிட்டுப்போட்டு பயிரை நோகிறாராம். உதுதானே பிழைக்கிறது.

தலைநகரிலும், நாட்டின் பல பகுதிகளிலும் ஆயுதங்களுடன் பெண் அணியினர் 'அலேட்டாக' நிக்கினம். முன்னர் ஆயுதமில்லாமல் கடமை செய்தபோது விடலைகள் கிண்டல் செய்துபோட்டினமாம். இனிமேல் கிண்டல் செய்ய முடியுமோ? கிண்டல் செய்தால் ஒரே ஒரு கண்டல்தான். தோட்டா பறந்துவரும். ரெண்டு எழுத்தாருடன் விரோதம் எண்டாலும் அவைதான் சில காரியங்களுக்கு முன்னுதாரணமாக இருக்கினம்.

மூதூரில் ஒரு நாடகம் போடப்பட்டதாம். திருவானமலையின் தங்கமானவரின் 'பொதுநல சேவைதான்' நாடகத்தின் கதை. வேலை கேட்டுச் சென்றால் உறவுமுறை பற்றி கேட்டறிவது. உறவு என்று தெரிந்தால் மட்டும் கவனிப்பே தனி. இப்படியாகப்பட்ட பல்வேறு 'பொதுநல சேவைகளை'யும் புட்டுப்புட்டு வைச்சுப்போட்டினமாம். தங்கமானவரின் ஆட்கள் சிலர் நாடகம் போட்டவர்களை பிடிச்சு மிரட்டியிருக்கினம். மிரட்டப்பட்ட ஒருவர் சொன்னாராம், "அண்ணே! அடிக்கிறதெண்டா அடியுங்கோ. ஆனால் கேட்டுப்போட்டு அடியுங்கோ. ரெண்டு எழுத்தார்தான் நாடகம் நடத்தச் சொன்னவை நேரில் வந்தும் பார்த்து ரசிச்சவை" மிரட்டினவர்கள் கப்சிப்.

பொன்னான தலைவரின் புத்திரர் சமீபத்தில் ஒரு கலக்குக் கலக்கிப்போட்டார். புதைகுழி விவகாரத்தில் அதிகாரத்தரப்பை ஒரு உலுக்கு உலுக்கிப்போட்டார் மனுசன். கொழும்புக்கு உடல்கள் கொண்டுவரப்பட்டால் பிரச்சனையாகுமோ எண்டு பயந்து உறவினர்களே தயங்கினவையாம். குமாரர்தான் தைரியம் சொல்லி பக்க பலமாக நிண்டவராம். சட்டத்தைக் கரைச்சுக் குடித்த வீரத்தமிழ் சட்டத்தரணிகள் இருந்தும் ஒருத்தர்கூட எட்டிப்பார்க்காத நேரத்தில் குமாரர் கெட்டித்தனமாக வாதாடிக் காட்டிப்போட்டார். நல்லதைப் பாராட்டத்தான் வேணும்.

வெளிநாட்டில் இருந்து ஒரு நண்பர் கடிதம் போட்டிருந்தார். "முரசில் அரசியல் விமர்சனங்களை நிறுத்திப் போடாதேயுங்கோ. 'முரசு' என்ன கணிப்புச் சொல்லுது, என்ன ஸ்ரைலில் சொல்லுது எண்டு ஆறுதலாக இருந்து படிச்சப்போட்டு அதே ஸ்டைலில் அதே விசயத்தை சில மாற்றங்களுடன் எழுதும் சிலருக்கு வாய்ப்பு இல்லாமல் போயிடும்." எண்டு சொல்லுகிறார். சேச்சே... முன்னுதாரணமாக இருப்பது முகம் சுளிக்கும் விஷயமில்லைத்தானே!

வடக்கு-கிழக்கு முன்னாள் அதிகார தமிழ் கட்சியின் ஆட்கள் கிழக்கில் ஒரு பிடி பிடிக்கினம். சீருடையுடன் களத்துக்கும் சென்று வருகிறார்கள். நிதி திரட்டலிலும் ஜமாய்க்கிறார்கள். அவர்களை விலக்கிவிட்டோம் எண்டு அறிக்கை வந்தது. விலக்கப்பட்டதாக சொல்லப்பட்ட முக்கியஸ்தர் மட்டக்களப்பிலிருந்து வெள்ளைவானில் வந்து திருவானமலையில் அக் கட்சியின் அலுவலகத்தில் தங்கியிருந்தாராம். விலக்கப்பட்டவருக்கு அங்கு என்ன வேலை? சிந்திக்க வேணும்தான்!

சி.சு.செல்லப்பா எழுதிய கவிதையில் இருந்து ஒரு துளி.

"சூலம் எழுந்தது  
அண்டம் அதிர்ந்தது.  
உலகெங்கும் கூடாரம்  
ஊரெங்கும் விஷப்புகை  
வானெங்கும் எஃகிறகு  
தெருவெங்கும் பிணமலை.  
பீரங்கிக் குரல்பேச  
கேட்டதொரு வேறுகுரல்.  
அன்பும் அஹிம்சையும்  
விற்று வந்தேன் ஆதிமுதல்!  
பூக்காரி பூவைப்போல  
கண்ணெடுப்பார் யாருமில்லை."



படிப்பகம்

www.padippakam.com

அரசியல் தொடர்

அற்புதன் - எழுதுவது

# பாராளுமன்றத்துக்குள் படுகொலைத் திட்டம்






## ஆயுத ஒப்படைப்பு

ஒப்படைக்கப்பட்ட ஆயுதங்களின் தரம், எண்ணிக்கை தொடர்பாக இந்தியப்படை அதிகாரிகளுக்கு திருப்தி ஏற்படவில்லை.

பிரபாகரனை சந்தித்து பேச வேண்டும் என்று விரும்பினார் இந்தியப் படைத் தளபதி ஹரிகிரத் சிங்.

ஆகஸ்ட் மாதம் ஆறாம் திகதி (1987) யாழ் பல்கலைக்கழகத்தின் எதிரில் இருந்த புலிகள் இயக்க தலைமையகத்திற்குச் சென்றார் ஹரிகிரத் சிங்.

அங்கே பிரபாகரன், மாத்தையா, யோகி ஆகியோர் அவரை வரவேற்றனர்.

சுமார் இரண்டுமணி நேரம் பேச்சுக்கள் நடந்தன.

குறிப்பிட்டளவான ஆயுதங்கள் முதலில் ஒப்படைக்கப்படவேண்டும். முதல் கட்டமாக ஒப்படைக்கப்பட்ட ஆயுதங்கள் போதியளவாக இல்லை என்று சுட்டிக்காட்டினார் ஹரிகிரத் சிங்.

"நாங்கள் ஆயுதங்களை ஒப்படைக்கத் தயார். ஆனால் ஏனைய இயக்கங்களிடமும் ஆயுதங்கள் இருக்கின்றன என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. அவர்களால் எமக்கு ஆபத்து ஏற்படலாம்," என்று திசையை மாற்றினார் பிரபாகரன்.

இதற்கிடையே புலிகள் இயக்கத்தினர் செய்திருந்த ஒரு காரியமும் இந்தியப்படை தளபதியின் காதுகளுக்கு எட்டியிருந்தது.

புலிகள் இயக்க உறுப்பினர்கள், பொறுப்பாளர்கள் ஆகியோரிடம் இருந்த ஆயுதங்களில் ஒரு பகுதி தலைமையால் திரும்பப் பெறப்பட்டன.

யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திலீபனின் கீழ் செயற்பட்ட நவீனன் தான் ஆயுதச் சேகரிப்புக்கு பொறுப்பாக இருந்தார்.

சேகரிக்கப்பட்ட ஆயுதங்களில் தரமானவற்றுக்கு கிறீஸ் தடவி, பொலித்தீன் பைகளில் போட்டு பத்திரமாக புதைத்து வைக்குமாறு இரகசிய உத்தரவு போட்டுவிட்டார் பிரபாகரன்.

இதனை 'டம்பிங்' என்று சொல்வதுண்டு. இந்தியப் படைகள் வலுக்கட்டாயமான முறையில் ஆயுதங்களைப் பெற முயலலாம். அது தவிர பெருந்தொகையான ஆயுதங்கள் இருப்பதாகத் தெரிந்தால் இந்தியப் படைகளின் கண்கள் பட்டுவிடும். அதனால் தான் 'டம்பிங்' பண்ணுமாறு கூறிவிட்டார் பிரபாகரன்.

இன்னொரு காரணம் இருந்தது. இந்திய-இலங்கை ஒப்பந்தம். ஆயுத ஒப்படைப்புத் தொடர்பாக இயக்கத்துக்குள் பெரும்பாலானோருக்கு அதிருப்திதான்.

தமிழீழம் தவிர்ந்த வேறு ஒரு தீர்வை ஏற்றுக்கொள்வதைப் பற்றி நினைத்துப் பார்க்கவே அவர்கள் தயாராக இருக்கவில்லை.

ஒப்பந்தம் முறியும், மீண்டும் தமிழீழத்துக்கான ஆயுதப்போராட்டம் தொடரும்: இந்தியாவை பகைக்காமல் இருப்பதற்காகவே இப்போது சில காரியங்களை செய்ய வேண்டியுள்ளது என்பதை தலைமைகளில் இருந்தோர் எடுத்துக் கூறினார்கள்.

ஆயினும் இயக்கத்துக்குள் ஒரு குறிப்பிட்டளவான உறுப்பினர்கள் சோர்வாகவே காணப்பட்டனர்.

புலிகள் இயக்கப் பிரமுகர் ஒருவர் பின்வருமாறு தன் நண்பரிடம் சொன்னார்:

"சிறீலங்கா ஜனாதிபதி நமக்குப் பொது மன்னிப்பு வழங்குவதை நாம் ஏற்றுக் கொண்டால், நாம் தவறுகள் செய்திருக்கிறோம் என்றல்லவா அர்த்தமாகிறது? நமது தாயகத்தின் விடுதலைக்காக நாம் போராடியது எப்படித் தவறாகும்?"

இயக்கத்துக்குள் உள்ள மனநிலைகளைப் பிரபாகரனும் புரிந்துகொண்டே இருந்தார். ஏனெனில் அவரும் அதே மனநிலையில்தான் இருந்தார்.

ஆனால் பிரபாகரனுக்கு காத்திருந்து மீண்டும் போராட்டத்தை தொடரும் நம்பிக்கை இருந்தது. அந்த நம்பிக்கை இல்லாத உறுப்பினர்கள் இயக்கத்தை விட்டு விலகக்கூடும் என்பதும் பிரபாகரனுக்கு தெரிந்திருந்தது.

விலகிச் செல்லும் உறுப்பினர்களோ, பொறுப்பாளர்களோ ஆயுதங்களுடன் சென்றுவிட்டால் என்ன செய்வது? ஆயுதங்கள் மீளப்பெறப்பட்டதற்கு அதுவும் ஒரு காரணம்.

பொறுப்பாளர்கள் பலரது பிஸ்டல்கள், சுழல் துப்பாக்கிகள் என்பவற்றையும் திரும்பப்பெற்று 'டம்பிங்' செய்துவிட்டார்கள்.

## பிரபா சொன்ன காரணம்

இச்செய்திதான் இந்தியப்படைத் தளபதியின் காதுகளில் எப்படியோ விழுந்திருந்தது.

அவர் பிரபாகரனிடம் நேரடியாகவே கேட்டுவிட்டார். "மிஸ்டர் பிரபாகரன்! நீங்கள் கிறீஸ் மற்றும் பொலித்தீன் பைகள் வாங்கியதாகச் சொல்கிறார்களே. ஆயுதங்களை புதைத்து வைக்கப் போகிறீர்களா?"

உடனே பிரபாகரன் சமாளித்தார். "கிறீஸ் வாங்கினோமா? இதெல்லாம் ஏனைய இயக்கங்கள் கட்டிவிடும் கதை" என்றுவிட்டார் பிரபாகரன்.

"ஆயுதங்களை ஒப்படைக்கும் விடயத்தில் நீங்கள் ஒத்துழைக்காவிட்டால், நாங்கள் தலையிட்டு ஆயுதங்களை எடுக்க வேண்டியிருக்கும்," என்று கூறிவிட்டார் இந்தியப் படைத் தளபதி.

இறுதியாக ஆகஸ்ட் 7ம் திகதி இரண்டாம் கட்டமாக ஆயுதங்களை ஒப்படைக்க சம்மதித்தார் பிரபாகரன்.

இந்தியத் தளபதி சென்றதும் தம்மிடம் உள்ளனவற்றில் தரம் குறைந்தவையும், நீண்டநாள் பாவனையில் உள்ளவையுமான ஆயுதங்களைச் சேகரித்துக் கொண்டனர் புலிகள் இயக்கத்தினர்.

யாழ் கோட்டை இராணுவ முகாமில் இரண்டாம் கட்ட ஆயுத ஒப்படைப்பு நடைபெற்றது. அப்போது யாழ் கோட்டை முகாமுக்கு பொறுப்பாக இருந்தவர் டென்சில் கொப்பக்கடுவ.

புலிகள் சார்பாக யாழ் மவுாட்ட தளபதி குமரப்பா சென்றிருந்தார்.

ஒப்படைக்கப்பட்ட ஆயுதங்களையும், அவற்றின் எண்ணிக்கையையும் பார்த்த டென்சில் கொப்பக்கடுவ முகத்தில் ஏமாற்றம் தான்.

ஆக 20 ஆயுதங்கள் மட்டும்தான் அன்று ஒப்படைக்கப்பட்டன.

இதேவேளை கொழும்பில் இருந்த இந்தியத் தூதர் திக்ஷித் ஆயுத ஒப்படைப்புப் பற்றிய கேள்விக்கு சொன்ன பதில் இது:

"முதல் நாளன்று 800 ஆயுதங்களும், இரண்டாம் கட்டமாக 300 ஆயுதங்களும் ஒப்படைக்கப்பட்டு விட்டன. 65 சத வீதமான சிறுரக ஆயுதங்களும், 85 சத வீதமான கனரக ஆயுதங்களும் ஒப்படைக்கப்பட்டுவிட்டன."

இந்தியப் படையின் கண்காணிப்பில் எல்லாமே சுமுகமாகவும், நல்லவிதமாகவும் நடந்து கொண்டிருக்கின்றன என்னும் கருத்தை உருவாக்குவதே திக்ஷித்தின் நோக்கமாக இருந்தது.

## பிரேமதாசாவின் ஜோக்

இந்திய-இலங்கை ஒப்பந்தத்துக்கு பிரதமர் பிரேமதாசாவின் ஆதரவைப் பெறுவதில் ஜனாதிபதி ஜே.ஆருக்கு தோல்விதான் ஏற்பட்டது.

அப்போது கூட்டுப்படை நடவடிக்கை தலைமையக (JOC) தளபதியாக இருந்தவர் ஜெனரல் சிறில் ரணதுங்க. பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்தவர் சேபால ஆட்டிக்கல.

இருவரிடமும் ஒப்பந்தத்தின் பின்னர் நடைபெறும் நிகழ்ச்சிகள் பற்றி கேட்டறிந்தார் பிரதமர் பிரேமதாசா.

"தீவிரவாத இயக்கங்கள் ஆயுதங்களை ஒப்படைப்பது எப்போது முடிவடையும்?" என்று கேட்டார் பிரேமதாசா.

"மிகவும் மெதுவாக நடைபெறுகிறது. 3060 ஆயுதங்கள் இயக்கத்தினரிடம் இருக்கலாம் என்று நினைக்கிறோம். அதில் 381 ஆயுதங்கள் மட்டுமே ஒப்படைக்கப்பட்டுள்ளன," என்றார் சேபால ஆட்டிக்கல.

"இந்தியப் படையினர் என்ன சொல்கிறார்கள்?"

"அவர்கள் பிரபாகரனின் தனிப்பட்ட பாதுகாப்பில் அக்கறையோடு இருக்கிறார்கள். புலிகள் இயக்கத்தினர் குறிப்பிட்ட தொகையான ஆயுதங்களை ஒப்படைப்பார்கள். ஆனால் அது நூறு வீதமானதாக இருக்காது" என்றார் சேபால ஆட்டிக்கல.

அவர் சொல்வதைக் கேட்டுவிட்டு பிரமதாசா ஒரு ஜோக்கடித்தார்.

"நமது ஆயுதப்படைகளின் முழுப் பொறுப்பையும் பிரபாகரனிடம் ஒப்படைத்துவிடலாம். அப்போதுதான் அவர் எதிர்த்துப் போராட எவரும் இருக்கமாட்டார்கள்."

பிரேமதாசா சொன்ன இந்த ஜோக்தான் பின்னர் வெளியே கசிந்து திரிபுபட்டு, "பிரபாகரனை முப்படைத் தளபதியாக நியமிக்க பிரேமதாசா தயாராக இருந்தார்" என்று சிலரால் சொல்லப்பட்டது. பிரேமதாசா திறந்த மனதுடன் இருந்தார் என்பது போல வரலாற்றை திரிபுபடுத்தும் விதமான கூற்றாகவும் அது அமைந்துள்ளது.

பிரேமதாசா பிரபாகரன்மீது ஒரு வியப்பான பார்வை கொண்டவராகவே இருந்தார் என்பது மெய்தான். அதற்கான காரணம்– முப்படைகளையும் எதிர்த்துப் போராடும் சளைக்காத ஒரு மனிதராக இருக்கிறாரே என்ற பிரமிப்புத்தான்.

பிரபாகரன் தொடர்பாக பிரேமதாசா அடிக்கடி சொன்ன கருத்து இதுதான் "அவர் ஒரு புத்திசாலி."

## இந்தியா சந்தேகம்

இந்திய-இலங்கை ஒப்பந்தம் முறியும் தருணத்திற்காகப் புலிகள் காத்திருந்தனர்.

ஒப்பந்தத்தின் சில ஷரத்துக்களுடன் உடன்பாடு கொள்ள முடியவில்லை என்று கூறியபோதும் ஏனைய இயக்கங்கள் ஒப்பந்தத்தை வரவேற்பதில் போட்டி போட்டன.

ஆயுத ஒப்படைப்புக்காக வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கு செல்வதன் மூலமாக, அப்படியே தமது அலுவலகங்களையும் அங்கு திறந்துவிடலாம்; காலூன்றிக் கொள்ளலாம் என்பதே ஏனைய இயக்கங்களின் திட்டமாக இருந்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஒப்பந்தம் உருவாக தாமும் ஒரு காரணம் என்பது போல சொல்லத் தொடங்கியது.

'இந்தியா தம்மைக் கைவிடாது. அரசியல் என்று வந்துவிட்டால் தமக்குத்தான் ஒரு எதிர்காலம் இருக்கிறது. இயக்கங்கள் ஆயுதங்களை ஒப்படைக்கத் தொடங்கிவிட்டன. இந்தியப் படைதான் பாதுகாப்புக்கு நிற்கிறது. அதனால் தமிழ் பகுதிகளில் தம்மால் முன்பு போல செயற்படும் காலம் நெருங்கிவந்து விட்டது' என்றே கூட்டணியினர் நினைத்தனர்.

ஏனைய இயக்கங்களை இந்திய அமைதிப்படையினர் வடக்கு- கிழக்குப் பகுதிகளுக்கு

# ஆயுத ஒப்படைப்பில் பிரபாவின் தயக்கம்

வர அனுமதிப்பது புலிகளுக்குப் பிடிக்கவில்லை.

அதேநேரம் புலிகள் இயக்கத்தினரின் போக்கில் இந்தியப் படை அதிகாரிகளுக்கும், இந்திய உளவு நிறுவனங்களுக்கும் சந்தேகம் ஏற்படத்தொடங்கியது.

புலிகள் இயக்கத்தினர் தம்மை எதிர்த்து ஆயுதங்களை ஏந்தக்கூடும் என்பதை அப்போது இந்தியப் படை அதிகாரிகள் நினைத்தும் பார்த்திருக்கமாட்டார்கள்.

எனினும் புலிகள் இயக்கத்தினருக்கு ஒரு நிர்ப்பந்தத்தையும், நெருக்கடியையும்



கொடுப்பதற்காக ஏனைய இயக்கங்களின் பிரவேசத்துக்கு இடமளிக்கப்பட்டது.

உண்மையில் புலிகள் இயக்கத்தினர் முரண்டு பிடிக்காமல் இந்தியப் படையினருடன் ஒத்துழைத்திருந்தால் ஏனைய இயக்கங்களை இந்தியா ஒரு ஓரத்தில்தான் வைத்திருந்திருக்கும்.

ஒருபுறம் புலிகள், மறுபுறம் தமிழர் விடுதலைக் கூட்டணி.

தீவிரவாதிகள், மிதவாதிகள் என்றளவில் இரு அமைப்புக்களையும் வைத்துக் கொண்டு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தவே இந்தியா முதலில் விரும்பியது.

## கடத்தப்பட்டவர்கள்

ஒப்பந்தம் வந்துவிட்டது. இந்தியப் படையினர் நிற்கின்றனர் என்ற நினைப்பில் வடபகுதிக்குச் சென்ற ஏனைய இயக்க உறுப்பினர்கள் சிலர் மாயமாய் மறைந்தனர்.

புலிகள் இயக்கத்தினரே அவர்களை கடத்திச் சென்று சுட்டுவிட்டு உடல்களை மறைத்து விட்டனர்.

ஈ.பி.டி.பி. இயக்கத்தின் முக்கிய உறுப்பினரான பிரேமானந்தனும் இன்னும் இருவரும் யாழ்ப்பாணம் வந்தனர்.

ஈ.பி.டி.பி. இயக்கத்தின் சார்பாக ஆயுதங்களை ஒப்படைக்கவும், இயக்க வேலைகளை மீண்டும் ஆரம்பிக்கவுமே அவர்கள் அனுப்பிவைக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள உதயன் பத்திரிகை நிறுவனத்திற்குச் சென்று அறிக்கை ஒன்றைக் கொடுத்தார் பிரேமானந்தன்.

ஒப்பந்தம் தொடர்பாக டக்ளஸ் தேவானந்தா விடுத்திருந்த அறிக்கையே அதுவாகும்.

பிரேமானந்தன் டக்ளஸ் தேவானந்தாவின் சகோதரர் ஆவர். தோற்றத்திலும் ஓரளவு உருவ ஒற்றுமை இருந்தது.

எனவே உதயன் பத்திரிகை பின்வருமாறு செய்தி வெளியிட்டது.

"ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணம் வந்துள்ளார். உதயன் பத்திரிகைக் காரியாலயத்துக்கு வந்து



இந்தியப்படை-யாழ் கோட்டைக்கு அருகே

அறிக்கை ஒன்றைத் தந்துவிட்டு சென்றுள்ளார்."

புலிகள் இயக்கத்தினர் உடனே உஷாராகிவிட்டனர். மோட்டார் சைக்கிள் ஒன்றில் சென்று உறுப்பினர்களைச் சந்திப்பதில் ஈடுபட்டிருந்தார் பிரேமானந்தன்.

சாவகச்சேரியில் உள்ள ஓர் உறுப்பினரின் வீட்டுக்குச் சென்றுவிட்டு பிரேமானந்தனும், ராகவன் என்னும் ஈ.பி.டி.பி உறுப்பினரும் திரும்பிக்கொண்டிருந்தபோது புலிகள் இயக்கத்தினர் அவர்களை வழிமறித்தனர். துப்பாக்கி முனையில் இருவரும் வேன் ஒன்றில் கொண்டு செல்லப்பட்டனர்.

இந்தியப் படைக்கு தெரிவிக்கப்பட்டது. அவர்கள் புலிகள் இயக்கத்தினரிடம் கேட்டனர்.

"அப்படி ஒரு சம்பவம் நடந்ததே எமக்குத் தெரியாது" என்று புலிகள் இயக்கத்தினரால் கூறப்பட்டது.

பிரேமானந்தனும், ராகவனும் பின்னர் புலிகள் இயக்கத்தினரால் கொல்லப்பட்டுவிட்டனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்த ரெலோ இயக்க உறுப்பினர்களும், ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் சிலரும் இணைந்து புலிகள் இயக்க உறுப்பினர்களைத் தீர்த்துக்கட்ட திட்டம் தீட்டினார்கள்.

இயக்கங்களில் இருந்து விலகியவர்கள் என்று கூறியே அவர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கி இருந்தனர்.

அதனால் இரவு நேரங்களில் புலிகள் இயக்க உறுப்பினர்களை தீர்த்துக்கட்டுவது என்று திட்டம் போட்டனர்.

இரவோடு இரவாக புலிகள் இயக்க உறுப்பினர்கள் சிலர் வெட்டிக் கொல்லப்பட்டனர். துப்பாக்கியால் சுட்டால் சத்தம் கேட்கும் என்பதால் அந்த ஏற்பாடு.

இச்சம்பவங்கள் குறித்து இந்தியப் படையினர் கண்டும் காணாமல்தான் இருந்தனர்.

## வரதராஜப்பெருமாள்

இக்காலகட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பின் சார்பாக வரதராஜப்பெருமாள் கொழும்பில் தங்கியிருந்து இயக்க வேலைகளில் ஈடுபட்டார்.

"இந்திய-இலங்கை ஒப்பந்தம் அமெரிக்க ஏகாதிபத்தியம் இலங்கைக்குள் ஆதிக்கம் பெறுவதை தடுக்கிறது. இந்தியா எமது நண்பன். நட்பு நாடு. அதனால் ஒப்பந்தத்துக்கு ஆதரவளிக்கிறோம்" என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். அறிவித்தது.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகளுடனும், தூதர் திக்ஷித்துடனும் வரதராஜப்பெருமாள் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்.

இந்திய அதிகாரிகளுடன் நட்பை பலப்படுத்த வரதராஜப்பெருமாளிடம் ஒரு சாதகமான அம்சம் இருந்தது.

வரதராஜப்பெருமாள் இந்திய வம்சாவளித் தமிழராக இருந்தார். இந்தியாவில் உள்ள தனது பூர்வீகத் தொடர்புகள் பற்றியும் இந்திய அதிகாரிகளுக்கு அவர் விளக்கிக் கூறினார்.

பின்னாளில் மாகாணசபை முதல்வர் பதவியை அவர் பெற்றுக்கொள்ளவும் அந்த விடயம் ஒரு சாதகமாக இருந்தது. அதுபற்றிப் பின்னர் பார்க்கலாம்.

இந்தியத் தூதரக அதிகாரிகளுடன் வரதராஜப்பெருமாளுக்கு இருந்த தொடர்பும், ஒப்பந்தம் தொடர்பான ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க நிலைப்பாடும் புலிகள் இயக்கத்தினர் ஒத்துழைக்க மறுத்தால் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்துக்கு வாய்ப்புக் கொடுக்கலாம் என்ற நிலையைத் தோற்றுவித்தன.

## கொலைத் திட்டம்

இந்திய-இலங்கை ஒப்பந்தத்துக்கு எதிரான பிரசாரத்தில் தென்னிலங்கையில் ஜே.வி.பி. இயக்கத்தினரும் முன்னணியில் நின்றனர்.

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

படையினர் மத்தியிலும் ஜே.வி.பி. இயக்கத்துக்கு கணிசமான ஆதரவு இருந்தது.

"இந்திய ஏகாதிபத்தியவாதிகள் இலங்கைக்குள் புகுந்துவிட்டார்கள். இந்தியா இலங்கையை அடிமைப்படுத்திவிட்டது" என்று பிரசாரம் செய்தது ஜே.வி.பி.

"இந்தியப் பொருட்களை யாரும் வாங்கக்கூடாது. இலங்கையில் உள்ள இந்திய முதலாளிகளை வெளியேற்ற வேண்டும்" என்றெல்லாம் ஜே.வி.பி. பிரசாரத்தை முடுக்கிவிட்டது.

ஒப்பந்துக்கு அமைச்சரவைக்குள் எதிர்ப்பு இருக்கிறது.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் ஒப்பந்தை எதிர்க்கிறது.

வடமராட்சியைக் கைப்பற்றியதுபோல யாழ்ப்பாணத்தை முழுதாக பிடித்திருக்கலாம். இந்தியா தலையிட்டு காரியத்தைக் கெடுத்துவிட்டது என்று படையினர் மத்தியிலும் சலசலப்பு.

இதுதான் தருணம் என்று தீர்மானித்தது ஜே.வி.பி. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதியை தீர்த்துக் கட்டிவிட்டால் நாட்டில் மேலும் குழப்பம் உண்டாகும். ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் வாய்ப்பும் ஏற்படலாம் என்று முடிவு செய்தது ஜே.வி.பி.

## திட்டம் வகுக்கப்பட்டது

பாராளுமன்றக் கட்டிடத்துக்குள் வைத்து குண்டு வீசி கொல்வதுதான் திட்டம்.

ஜே.வி.பி.க்கு பாராளுமன்ற கட்டிடத்திற்குள்ளும் உளவு சொல்ல ஆட்கள் இருந்தார்கள்.

ஜனாதிபதி ஜே.ஆர், பிரதமர் பிரேமதாசா, தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி ஆகியோரை ஒரே நேரத்தில் தீர்த்துக்கட்ட ஒரு வாய்ப்பிருப்பதாக ஜே.வி.பிக்கு தகவல் எட்டியது.

1987 ஆகஸ்ட் 18ம் திகதிதான் அந்தநாள்.

பாராளுமன்ற கட்டிடத்துக்குள் கைக்குண்டு கொண்டுவரப்பட்டது.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

## அலசுவது– இராஜதந்திரி

# கதிர்காம அழகி மனம்பெரி பாணியில் வடக்கே கிருஷாந்தி, ராஜினி கொலை மரணங்கள்

இலங்கை மத்திய வங்கியைக் குண்டு வைத்துத் தகர்த்தது தொடர்பாக 712 குற்றச் சாட்டுக்களுடன் எல்.ரி.ரி.ஈ. அமைப்பின்மீதும் அதன் தலைவர் வே. பிரபாகரன்மீதும் வழக்குத் தாக்கலாகியுள்ளது.

எல்.ரி.ரி.ஈ.அமைப்பை ஒரு பயங்கரவாத அமைப்பென்று சித்தரிக்கும் விதத்திலேயே மத்திய வங்கி தகர்க்கப்பட்ட விவகாரம் சிருஷ்டிக்கப்பட்டுள்ளது.

இது தவிர ஆட்சியாளர்கள் பேசுமிடங்கள், போகுமிடங்களிளெல்லாம் எல்.ரி.ரி.ஈ. ஒரு பயங்கரவாத அமைப்பென்ற வகையிலேயே தீவிர பிரசாரத்தை மேற்கொண்டுவருகின்றனர்.

ஆனால் யார் பயங்கரவாதிகள்? எது பயங்கரவாதம்? என்று வினா எழுப்புமளவுக்கு கடந்தவாரங்களில் வெளிவந்த செய்திகள் விளங்கியிருந்தன.

யாழ்ப்பாணக்குடாநாட்டில் கோண்டாவில் பகுதியில் ராஜினி என்ற யுவதியின் கொலையுண்ட சடலம் மலசல கூடக்குழியொன்றில் இருந்து கண்டெடுக்கப்பட்டது.

இது தொடர்பாக படைவீரர்கள் சிலரும் பொலிசாரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதையடுத்து கைதடிப்பிரதேசத்தில் கிருஷாந்தி குமாரசாமி என்ற மாணவியின் சடலமும், அவரது தாயார் உட்பட மூன்று பேரின் சடலங்கள் புதைகுழிகளிலிருந்து தோண்டி எடுக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவத்திலும் இராணுவத்தையும் பொலிஸையும் சேர்ந்த 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட இரு சம்பவங்களிலும் ஈடுபட்டவர்கள் அரச படைகளைச் சேர்ந்தவர்கள். அத்துடன் அவ்விரு சம்பவங்களும் நீண்டகாலத்துக்குப் பின்னரே வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

சில வாரங்களுக்கு முன்னர் இலங்கை இராணுவத்தின் 47-வது ஆண்டுப்பூர்த்தி கொண்டாடப்பட்டது.

அப்போது உரைநிகழ்த்திய இராணுவத் தளபதி ரொஹான் தலுவத்த இலங்கை இராணுவம் சிறந்த ஒழுக்கக் கட்டுப்பாட்டுடன் வளர்ச்சி பெற்றுள்ளது என்று மார்தட்டினார்.

ஆனால் அவர் குறிப்பிட்ட ஒழுக்கமும், கட்டுப்பாடும் எவ்வளவு தூரம் இருக்கின்றன என்பதற்கு வடக்கே அகழ்ந்தெடுக்கப்பட்ட அப்பாவிகளின் சடலங்கள் நல்ல உதாரணங்களாக இருக்கின்றன.

கோண்டாவிலில் புதையுண்ட ராஜினியையும் கைதடியில் புதையுண்ட கிருஷாந்தியையும் சந்தேகநபர்களான படைவீரர்கள் மூர்க்கத்தனமான முறையில் பாலியல் பலாத்காரம் செய்தபின்னரே குழிதோண்டிப் புதைத்துள்ளனர் என்பது நிரூபணமாகியுள்ளது.

'ஒப்பரேஷன் சூரியக்கதிர்' இராணுவநடவடிக்கை பலாலியிலிருந்து தொடங்கப்பட்டபோது யாழ்ப்பாணத்திலிருந்த எல்.ரி.ரி.ஈ.யினர் படையினர் குறித்து பரந்தளவில் பிரசாரம் செய்தனர்.

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வாழ்வது பாதுகாப்பானதல்ல என்று அச்சுறுத்தும் வகையில்தான் எல்.ரி.ரி.ஈ.யினர் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தனர். மக்களை வெளியேறுமாறும் கோரினார்கள்.

எனவே எல்.ரி.ரி.ஈ. கூறியவற்றில் உண்மை இருக்கவே செய்கின்றது என்பது போலவே வடக்கே அகழப்பட்ட பிணங்களின் கதை விளங்குகின்றது.

கொலை, கொள்ளை, பாலியல்வதை, சித்திரவதை என்பவை குறித்து படையினர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது, இது முதல் தடவையல்ல

கடந்த சில வருடங்களில் நாடு பூராவுமே புதை குழிகள் இருந்துவந்துள்ளதை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்தவர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணியினராவர்.

சூரியக்கந்த என்ற இடத்தில் அகழப்பட்ட புதைகுழியில் காணப்பட்ட மனித உடல்கள் பலவற்றின் உறுப்புகளே ஜனாதிபதி சந்திகாவின் சூறாவளிப் பிரசாரத்துக்கு அடித்தளமிட்டது.

சந்திரிகா சூரியகந்தவுக்கு சென்று சம்பந்தப்பட்ட புதைகுழிக்குள்ளிலிருந்து மனித எலும்புகளும், மண்டை ஓடுகளும் மேலெடுக்கப்பட்டதை நேரிலேயே கண்டார்.

இதையடுத்து ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் காலங்களில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மர்மமான புதைகுழிகள் தோண்டப்பட்டு அவை குறித்த பிரசாரங்களும் விரிவான முறையில் மேற்கொள்ளப்பட்டன.

ஐ.தே.க அரசாங்கத்தில் இடம்பெற்ற படையினரின் அடாவடித்தனமொன்றில் எம்பிலிப்பிட்டிய என்னுமிடத்தில் பாடசாலை மாணவர்கள் பலர் காணாமல் போயிருந்தனர். அவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கலாமென்றே சந்தேகிக்கப்படுகின்றது.

அத்துடன் இந்த எம்பிலிப்பிட்டிய மாணவர்கள் காணாமல்போன விவகாரம் ஒருநீண்ட விசாரணையாக தற்போதுகூட இடம்பெற்றுவருகின்றது.

எம்பிலிப்பிட்டியவில் பாடசாலை மாணவர்கள் காணாமல் போனது குறித்த விசாரணையில் பிரிகேடியர் பரிலியனகே என்ற சிரேஷ்ட இராணுவ அதிகாரி உட்பட படையினர் சிலர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

ஆனால் எம்பிலிப்பிட்டிய விவகார சந்தேக நபரான பிரிகேடியர் பரிலியனகே அவ்விவகாரத்திலிருந்தும் வேறாக்கப்பட்டு யாழ்ப்பாணம் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டார். அத்துடன் இன்றுங்கூட வடக்கே மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளில் அவர் முக்கியபங்கேற்றுமுள்ளார்.

நாடுமுழுதிலும் காணாமல்போனோர் சம்பந்தமாக விசேட ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் விசாரணைகளை நடத்திவருகின்றன.

இவ்விசாரணைக்குழுக்கள் முன்பாகவரும் சாட்சிகள் வழங்கும் தகவல்கள் போலிஸாரையும், படையினரையுமே சாடுவதாக இருக்கின்றன.

நாடுபூராவும் கடந்த காலங்களில் காணாமல் போனவர்களின் எண்ணிக்கை பல்லாயிரமாகும் என்பதும் ஊர்ஜிதமாகியுள்ளது.

வடக்கு-கிழக்கில் படையினரே நேரடியாக கொலைகள், சித்திரவதைகளைப் புரிந்துள்ளனர் என்ற விடயம் அப்பிரதேசங்களைச் சேர்ந்தோர் வழங்கியுள்ள சாட்சியங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

ஆனால் இன்றைய ஆட்சியில் இடம்பெறும் அடாவடித்தனங்கள், அட்டூழியங்கள் என்பவை எவ்விதத்திலும் குறைந்தவையல்ல என்பதையே வடக்கே இடம்பெற்றுள்ள சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

சுமார் 25 வருடங்களுக்கு முன்னர் ஜே.வி.பி. கிளர்ச்சி நடவடிக்கைகள் தென்னிலங்கையின் பல்வேறுபகுதிகளிலும் இடம்பெற்றன.

அப்போது கதிர்காமப்பிரேசத்தில் மனம்பெரி என்ற அழகிய



பெண்ணொருத்தி ஜே.வி.பி. சந்தேக நபர் என்ற ரீதியில் இராணுவத்தினரால் கைதானார்.

மனம்பெரி ஒரு சாதாரண அழகியல்ல; கதிர்காமப் பிரதேசத்தில் அக்காலத்தில் நடத்தப்பட்ட புத்தாண்டு அழகுராணிப் போட்டியொன்றில் அழகியாகத் தெரிவானவரே மனம்பெரி.

அப்பேரழகியைக் கைது செய்து விசாரணை செய்த இளம் இராணுவ லெப்டினன்ட் ஒருவர் அவளைப் பாலியல் பலாத்காரம் செய்தார். அவரோடு சேர்ந்து வேறு படையினரும் மனம்பெரியைத் தமது காமப்பசிக்கு இரையாக்கினர்.

பின்னர் அனைவருமாகச் சேர்ந்து அவளைக்கொன்று புதைத்தனர்.

கதிர்காம அழகி மனம்பெரி கொலை விவகாரம், முக்கியம் பெற்று நீண்ட விசாரணைக்குட்படுத்தப்பட்டது. இறுதியாக அவ்வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட படை அதிகாரி சிறையிடைப்பட்டு பின்னர் அவர் சிறையிலேயே மரணமானார்.

எனவே கதிர்காம அழகி மனம்பெரி பாலியல் வதைக்குள்ளாகி கொலை செய்யப்பட்டதை ஒத்ததாகவே வடக்கே ராஜினி, கிருஷாந்தி ஆகிய இளம் யுவதிகளின் மரணங்களும் இருக்கின்றன.

இந்த இரு சம்பவங்கள் மட்டுமல்ல, வடக்கே வேறுபல கொலை, பாலியல்வதை ஆகியன இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் இடம் பெற்றுள்ளன என்றே அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கே சுமுகநிலையைக் கொண்டுவரவே படையினர் அங்குநிறுத்தப்பட்டுள்ளனர் என்று அரசு கூறுகின்றது.

ஆனால் கிருஷாந்தி, ராஜினி ஆகியோரது மரணங்கள் அரசபடையினரால் ஒரு சுமுக நிலையை ஏற்படுத்த முடியாதென்பதை உணர்த்துகின்றன.

தற்போது யாழ்ப்பாணத்தில் அகழப்பட்ட பிணங்கள் உட்பட நாட்டில் திக்கு, திக்காகப் புதையுண்டுள்ள ஏராளமான மனித உயிர்களின் மரணங்களுக்கு அரச படையினரே பொறுப்பாளிகள் என்பது சந்தேகத்துக்கிடமின்றி உறுதியாகியுள்ளது.

இந்நிலையில் அரசபடையினரே அத்துமீறல்களில் ஈடுபடும்போது அரசாங்கத்தினர் எல்.ரி.ரி.ஈ.யினரை மட்டும் பயங்கரவாதிகள் என்ற வட்டத்துக்குள் வைத்திருக்க முயற்சிப்பது வேடிக்கையானதாகவே இருக்கின்றது.

வடக்கு-கிழக்குப் பிரச்சினை இன்று ஒரு யுத்தமாக வெடித்திருப்பதற்கு அரசியல் பிரச்சினை மட்டும் ஒரு காரணமல்ல. படையினரின் நடவடிக்கைகளும் ஒரு முக்கிய காரணமாகும்.

கிருஷாந்தி அவரது தாய், அயலவர் ஆகியோருக்கும், ராஜினி என்ற மற்றைய பெண்ணுக்கும் நேர்ந்ததைப் போன்ற வேறு சம்பவங்களே ஆயிரமாயிரம் இளைஞர், யுவதிகளை ஆயுதபாணிகளாக்கிவிட்டுள்ளது.

எனவே ஆட்சியதிகாரங்களில் இருப்போர் ஒழுங்காக இருக்காதவரை, சட்டம் ஒழுங்கையோ நீதி நியாயத்தையோ எக்காலத்திலும் எதிர்பார்க்க முடியாதென்பதே வெளிப்படை.

## சுடுகாட்டில் ஒரு புதைகுழி

## கைதுகளும்-காரணங்களும்

கிருஷாந்திக்கு 18 வயது. துடிப்பான மாணவி. கைதடி இராணுவ காவலரண் ஊடாகவே கிருஷாந்தி சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்குச் செல்ல வேண்டும்.

காவலரணில் கடமையில் இருக்கும் இராணுத்தினர் சில சமயங்களில் கிருஷாந்தியை கேலி செய்வார்கள். கிருஷாந்தி துணிச்சலான பெண். இராணுவத்தினரை முறைத்துவிட்டு பதிலுக்கு ஏதாவது காட்டமாகச் சொல்லிவிட்டு சென்றுவிடுவார்.

கிருஷாந்தியின் போக்கால் கோபமடைந்த இராணுவத்தினர் சரியான சந்தர்ப்பம் ஒன்றை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

செப்டம்பர் 7ம் திகதி சனிக்கிழமை கிருஷாந்தி பாடசாலைக்குச் சென்றார். பரீட்சை எழுதிவிட்டு திரும்பிவந்த கிருஷாந்தி இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டார்.

கைதடி காவலரணில் வைத்துத்தான் கிருஷாந்தி கைதுசெய்யப்பட்டார். கிருஷாந்தி இராணுவத்தினரால் கூட்டிச் செல்லப்பட்டதை கிருஷாந்தியை தெரிந்த சிலர் கண்டுவிட்டனர்.

அவர்கள்தான் கிருஷாந்தியின் அம்மாவிடம் போய் தகவல் சொன்னார்.

கிருஷாந்தியை தாம் கூட்டிச் சென்றதை யாரும் காணவில்லை என்று நினைத்த இராணுவத்தினருக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

கிருஷாந்தியின் அம்மாவும் சகோதரனும் (16 வயது) தமது அயலவரான கிருபாமூர்த்தி என்பவருடன் காவலரணுக்கு வந்துவிட்டனர்.

மகள் எங்கே? ஏன் பிடித்தீர்கள்? என்று கேட்டார் தாயார்.

விஷயம் வெளியே தெரிந்துவிட்டது. இவர்களை விட்டால் பிரச்சனை என்று நினைத்த இராணுவத்தினர் மூவரையும் நைசாக கூட்டிச்சென்று கதையை முடித்து விட்டார்கள்.

கிருஷாந்தியை இராணுவ கோப்ரல்கள் இருவர்தான் முதலில் பாலியல் பலாத்காரம் செய்தனர். விஷயம் வெளியே போகாமல் இருக்க கிருஷாந்தி கைதுசெய்யப்பட்டபோது கடமையில் இருந்த ஏனைய இராணுவத்தினருக்கும், மூன்று பொலிசாருக்கும் கிருஷாந்தியை பாலியல் பலாத்காரம் செய்ய வாய்ப்புக் கொடுக்கப்பட்டது.

எல்லாம் முடிந்ததும் கிருஷாந்தியையும் கொன்றுவிட்டு புதைத்துவிட்டனர். செம்மணி மயானத்தில் நான்கு உடல்கள் இரவோடு இரவாகப் புதைக்கப்பட்டன.

புதைக்கும்போது சற்று அஜாக்கிரதையாக நடந்துகொண்டுவிட்டனர். குழியை ஆழமாக வெட்டிக் கொண்டிருக்காமல் மேலோட்டமாக புதைத்துவிட்டனர்.

அத்தோடு கதை முடிந்துவிட்டது என்றுதான் சம்பந்தப்பட்டவர்கள் நினைத்தனர். ஆனால் கிருஷாந்தியின் சகோதரி பிரசாந்தி சும்மா இருக்கவில்லை.

தனது குடும்பத்திற்கு இழைக்கப்பட்ட கொடுமைக்கு நீதி கேட்க ஆரம்பித்தார். பாராளுமன்ற உறுப்பினர் பரராஜசிங்கத்துக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிக்காவுக்கும் பிரசாந்தி விளக்கமாக கடிதம் எழுதினார். மனித உரிமை அமைப்புக்களுக்கும் கடிதம் எழுதினார்.

பாராளுமன்றத்தில் பரராஜசிங்கம் கேள்வி எழுப்பினார். பதில் சொல்ல ஒரு வார கால அவகாசம் கேட்கப்பட்டதே தவிர, பதில் சொல்லப்படவில்லை.

பதில் சொல்லப்படாத விடயத்தை பரராஜசிங்கம் பெரிதாக்கியிருந்தால் அல்லது கட்டாயம் பதில் தேவை என்று ஒரே பிடியாக நின்றிருந்தால் அரசாங்கம் பதில் சொல்லியே ஆக வேண்டியிருந்திருக்கும்.

நமக்குத் தெரியாது என்றோ, அப்படி ஒரு சம்பவமே நடைபெறவில்லை என்றே பதில் சொல்லப்பட்டிருக்குமானால் இப்போது அரசாங்கத்தின் நிலை தர்ம சங்கடமாகியிருக்கும்.

நடைபெறவேயில்லை என்று மறுக்கப்பட்ட சம்பவம் நடைபெற்றிருப்பதை வெளியுலகமும், மனித உரிமைக் குழுக்களும் அறியக்கூடியதாக இருந்திருக்கும்.

எனவே பரராஜசிங்கத்தார் கேள்வி கேட்டதோடு மட்டும் நிறுத்திக்கொண்டமைக்காக அரசாங்கம் அவருக்கு நன்றிதான் சொல்லவேண்டும்.

பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியதால் பரராஜசிங்கத்தாருக்கும் இலாபம். கேள்வி எழுப்பினார் என்று பத்திரிகைகளில் செய்தி வருகிறது. அவர் பதில் தேட பிடிவாதம் பிடிக்காமையால் அரசாங்கத்திற்கும் இலாபம். ஏடாகூடமாகப் பதில் சொல்லி இப்போது கையைப் பிசையும் இக்கட்டு ஏற்படவில்லை.

உண்மையில் கிருஷாந்தி விடயத்தில் அதனை ஒரு மனித உரிமை பிரச்சனையாக முன்னிறுத்தி விடாமல் போராடியவர் அவரது சகோதரிதான்.

பாராட்டப்படவேண்டிய இன்னொருவரும் இருக்கிறார். அவர் சட்டத்தரணி குமார் பொன்னம்பலம். கிருஷாந்தி மற்றும் அவரது தாயார், சகோதரர் மற்றும் அயலவர் ஆகியோரின் உடல்களை கொழும்புக்கு வருவதற்காக கடுமையாகப் போராடியவர் குமார் பொன்னம்பலம்தான்.

பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பி பத்திரிகைகளில் பெயர் வந்ததோடு பரராஜசிங்கம் ஒய்ந்துவிட்டார்.

காட்டமாக ஒரு அறிக்கை விட்டதுடன் கூட்டணி திருப்தியாகிவிட்டது. ஏனைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் கட்சிகளும் மௌனமாகவே இருந்தனர்.

உடல்கள் கொழும்புக்கு கொண்டுவரப்பட்டதற்கு மட்டுமல்ல, உடல்களை உறவினர்களிடம் ஒப்படைக்கச் செய்ததிலும் குமார் பொன்னம்பலம்தான் விடாமல் போராடவேண்டியிருந்தது.

எங்கே குமார் பொன்னம்பலம் பெயரைத் தட்டிக்கொண்டு போய்விடுவாரோ என்று நினைத்து, எல்லாம் முடிந்தபின் நீலன் திருச்செல்வம் ஒரு காட்டமான அறிக்கைவிட்டு அரசைச் சாடியிருக்கிறார்.

நீலன் மனித உரிமைக் குழுக்கள் பலவற்றோடு தொடர்பு உள்ளவர். கிருஷாந்தி காணாமல்போன விவகாரத்தில் நீலன் என்ன செய்தார்? உண்மைகளை வெளிக்கொண்டுவர எத்தகைய முயற்சி செய்தார்? பூச்சியம்தான்.

மறுபுறம் அரசாங்கமும் நல்ல பிள்ளையாக நடந்துகாட்டுகிறது.

"கடும் நடவடிக்கை. இராணுவத்தினரும் பொலிசாரும் கைது. விசாரணை துரிதம்" என்று செய்திகள் வருகின்றன.

கிருஷாந்தியும், மற்றும் மூவரும் காணாமல்போய் ஒன்றரை மாதங்களாகின. எங்கே கைது செய்யப்பட்டனர். எத்தனை மணிக்கு கைதுசெய்யப்பட்டனர் என்ற விபரங்கள் யாவும் ஜனாதிபதி முதற்கொண்டு படை அதிகாரிகள்வரை தெரிவிக்கப்பட்டது.

விசாரணை நடத்த நினைத்திருந்தால் மிகமிக சுலபம். குறிப்பிட்ட காவலரணில், குறிப்பிட்ட நேரத்தில் பணியில் இருந்தவர்களை ஒரு பிடிபிடித்திருந்தால் உண்மை வெளிவந்திருக்கும் இராணுவத்தில் தனியான உளவுப்பிரிவே இருக்கிறது. அதுதவிர தேசிய புலனாய்வுத்துறையும் உண்டு. முடுக்கிவிட்டிருந்தால் விஷயம் வெளிச்சமாகியிருக்கும்.

ஆனால் இப்போது என்ன நடந்திருக்கிறது?

பிணங்களைப் புதைத்தவர்கள் அஜாக்கிரதையாக நடந்துகொண்டதால், செம்மணி மயானப் பக்கமாகச் சென்ற ஒரு சிறுவன் பிணங்களின் கையையோ, காலையோ கண்டுவிட்டு பதறி ஒடி ஊரவருக்குச் சொல்ல செய்தி பரவிவிட்டது. இராணுவத்தினர் வந்து பிணங்களை எடுத்தனர்.

ஏற்கனவே வெளியே அறியப்பட்ட சம்பவம் என்பதால் உடனடி நடவடிக்கை எடுத்தேயாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

பிணங்களை புதைத்தவர்கள் ஜாக்கிரதையாக நடந்திருந்தால் காணாமல் போனோர் பட்டியலில்தான் கொல்லப்பட்டவர்களின் பெயர்கள் இன்றுவரை இருந்திருக்கும்.

இப்போது சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஏற்கனவே ராஜினி என்னும் பெண்ணை பலாத்காரம் செய்ததாகவும் இராணுவத்தினர் கைது செய்யப்பட்டனர். அந்த விவகாரமும் மனித உரிமைக்குழுவுக்கு சென்ற பின்னரே நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று கூறப்படுகிறது.

கைது செய்யப்படுவது மட்டும் போதுமா? கொழும்பில் ஏரிகளில் பிணமாக மிதந்த தமிழ் இளைஞர்களின் கொலைகளுக்கு காரணமானவர்களும் பரபரப்பாக கைது செய்யப்பட்டனர். பத்திரிகைகளுக்கு தலைப்புச் செய்தி கிடைத்தது. அரசாங்கத்திற்கு பாராட்டுக்கள் கிடைத்தன. கைது செய்யப்பட்டவர்கள் இப்போது எங்கே?

கிருஷாந்தி மற்றும் மூவரினது உடல்களை உறவினர்களிடம் ஒப்படைக்கவே மறுக்கப்பட்டது. அதற்கும் குமார் பொன்னம்பலம் சட்டவாதம் செய்யவேண்டி இருந்தது. இரண்டு மணி நேரத்தில் உடல்களை தகனம் செய்யுமாறு கட்டளையிட்டே கடைசியில் ஒப்படைத்தனர்.

இத்தகைய அணுகுமுறைகளில் தவறுக்காக வருந்தும் தன்மையோ, அனுதாபமோ தெரியவில்லை. நிர்ப்பந்தங்கள் காரணமான செயற்பாடுகளே தெரிகின்றன.

இந்நிலையில் சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்பட்ட செய்தி வந்தாலன்றி, கைதுகளுக்காக அரசாங்கத்தின் முதுகில் இப்போதே தட்டிக்கொடுத்துப் பாராட்ட முடியவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

தருவது 16 ரசிகன்

# கொள்ளை ராணி பூலான்தேவி

கிழிந்திருந்த சேலையையும், ரவிக்கையையும் அணிந்து கொண்டேன். ஒரு மூலையில் சாய்ந்து அமர்ந்து கொண்டேன்.

மூக்கு உடைந்து வழிந்த இரத்தத்தை சேலைத் தலைப்பால் துடைத்தபோது விண்விண் என்று வலித்தது.

உடம்பு முழுக்க அங்குலம் அங்குலமாக கத்திக்குத்துப்பட்டதுபோல உயிரைப் பிடுங்கிக் கொண்டிருந்தது.

காலை உணவாக ரொட்டியை ஒரு தட்டில்வைத்து சிறைக்கம்பிகள் ஊடாக உள்ளே தள்ளிவிட்டார்கள். ஒரு குவளையில் தண்ணீர் தரப்பட்டது.

ரொட்டியைப் பார்த்ததும் உடல்வலியால் மறந்துபோயிருந்த பசி மீண்டும் வயிற்றைக்கிள்ளியது.

எழுந்துபோய் குவளையையும், ரொட்டித் தட்டையும் எடுத்துவந்து சாப்பிடத் தயாரானபோதுதான் கவனித்தேன்.

தண்ணீர் சாக்கடைநீர்போல தெரிந்தது. பார்க்கவே வயிற்றைக் குமட்டிக் கொண்டு வந்தது. ரொட்டி கல்லுமாதிரி இருந்தது. நேற்றைய ரொட்டியாக இருக்க வேண்டும்.

பசிதீரவேண்டுமே! ரொட்டியை சாப்பிட்டேன். மென்று தின்ன முடியவில்லை. தாடைகள் வலித்தன. துண்டு துண்டாக விழுங்கினேன்.

விக்கல் எடுத்தது. தண்ணீர் குடித்தேயாக வேண்டும். ஐயோ.. இந்தக் கழிவு நீரையா குடிப்பது? உயிர் இருந்தால்தானே இவர்களையெல்லாம் பழிவாங்க முடியும்? உயிரைப் பிடித்துவைத்திருக்க வேண்டுமானால் சாப்பிடத்தான் வேண்டும். சாக்கடை நீரையும் குடிக்கத்தான் வேண்டும்.


எப்போது இந்தக் கழிசடை நாய்கள் என்னைக் கடித்துக் குதறினவோ அப்போதே நான் செத்து விட்டேன். பழைய பூலான் செத்துப்போய்விட்டாள்.

இப்போது உயிரோடிப்பவள் புதிய பூலான். இந்தப் பூலான் இனி வாழப் போவது பழி தீர்க்க.

ஒரு கிராமத்துப் பெண்ணை, ஏதுமறியாத ஏழை வீட்டுப் பெண்ணை நார் நாராய்க் கிழித்துப் போட்ட நாய்களை விரட்டி விரட்டி பழிதீர்க்கப்போகும் பூலான் பிறந்துவிட்டாள்.

இவள் பிறந்தது பொலிஸ் நிலையத்தில்; இறந்ததும் இங்குதான். புதிதாகப் பிறந்ததும் இங்குதான். பிறக்கவைத்தவர்களை இந்தப் பூலான் இறக்கவைக்கப் போகிறாள்.

பெண்ணைப் பெண்ணாக நடத்தியிருந்தால் இந்தப் பூலான் பிறந்திருக்க மாட்டாள். பெண்ணைத் தாயாக நினைத்திருந்தால் பூலான் என்ற பெண் பின்னாளில் உயிர் குடிக்கும் பத்ரகாளியாக மாறியிருக்கமாட்டாள். நீதி, தர்மம்



என்பதெல்லாம் யாவருக்கும் பொதுவாக இருந்திருந்தால் இந்தப் பூலான் எங்கோ ஒரு ஓரத்தில் புருசன், பிள்ளை குட்டிகள் என்று குடும்பமாக இருந்திருப்பாளேயடா பாவிகளே! விட்டீர்களாடா? விரட்டி, விரட்டி கடித்துத் தின்று மூலையில் எறிந்துவிட்டீர்களேயடா.

விடமாட்டாள். எந்த வேசிமகனும் தப்பமுடியாதடா: நீங்கள் பிறக்கவைத்த பூலான் வாழப்போகிறாள். நீங்கள் சாகப் போகிறீர்களடா. சத்தியமாய் ஒருநாள் கதறிக் கதறிச் சாகப்போகிறீர்கள்.

நினைக்க நினைக்க வலியெல்லாம் பறந்தது. பிடிவாதம் தொற்றிக்கொண்டது.

மூக்கைப் பொத்திக்கொண்டு அந்த கழிவுநீரை– அழுக்குத் தண்ணீரை மடமடவென்று வாய்க்குள் ஊற்றினேன்.

வாழ வேண்டும் என்ற ஆவேசம் வந்துவிட்டதால் மீதி ரொட்டியையும் பிய்த்துப் பிய்த்து வயிற்றுக்குள் தள்ளி முடித்தேன்.

என்னை நீதிமன்றத்துக்கு கொண்டு சென்றார்கள். நீதிபதிக்கு அருகே கண்கள் கட்டப்பட்ட சிலை இருந்தது. அதுதான் நீதி தேவதையாம். எனக்குச் சிரிப்பாக இருந்தது. சேலை கட்டிக்கொண்டு வந்தால் இவளையும் விடமாட்டார்கள். நல்லவேளை, சிலையாக இருப்பதால் தப்பித்துக்கொண்டாள்.

என் பெரியப்பா மகன்– அந்தக் கழுதை மையாதீன் நெற்றியில் பெரிய கட்டோடு வந்திருந்தான். வேண்டுமென்றே கட்டைப் பெரிதாகப் போட்டுக்கொண்டு வந்திருக்கிறான் மூதேவி.

நீதிபதி தனது மூக்குக் கண்ணாடி வழியாக என்னைப் பார்த்தார்.

அவரது கதிரையில் நான் இருந்து

> **கடந்தவாரம்**
>
> ♠ பூலான் தேவியை
> ♠ பொலிஸ் நிலையத்தில் வைத்து
> ♠ பலாத்காரம் செய்கிறார்கள்.
> ♠ பூலான் கோபத்தில்
> ♠ பொலிசாரைத் திட்டுகிறாள்.
> ♠ அதனால் மீண்டும் தாக்கப்படுகிறாள்.
>
> இனி...

கொண்டு, கையில் ஒரு துப்பாக்கியும் வைத்துக்கொண்டு தீர்ப்புகள் சொல்வதுபோல கற்பனை செய்து பார்த்தேன். சந்தோசமாகவும், சிரிப்பாகவும் இருந்தது.

மையாதீன் என்னும் கௌரவமான மனிதரை கல்லால் எறிந்து காயப்படுத்தியது; கிராம அமைதிக்கு கேடு விளைவிப்பது என்று அடுக்கடுக்கான ஐந்து குற்றச்சாட்டுகள் என்மீது சொல்லப்பட்டன.

நீதிபதி என்னை மேலும் கீழுமாக ஆச்சரியமாகப் பார்த்தார். என் தோற்றம் அவருக்குப் பிடிக்கவில்லைப்போலும். முகம் சுளித்தார்.

மையாதீனை பரிவோடு பார்ப்பதுபோல இருந்தது. 'ஒரு பெட்டைக் கழுதையிடமா மண்டையைக் கொடுத்தாய்?' என்று அனுதாபம் காட்டுகிறார் போலும்.

என்ன செய்தாலும் பெண்கள் அடங்கிப் போவதுதான் முறை. புழுவாய் நசித்தாலும் நசிந்துபோகவேண்டியதுதான் பெண்களுக்கு விதி என்று நினைக்கும் கூட்டத்தில் அந்த நீதிபதியும் ஒருவராக இருக்கக்கூடும்.

வழக்கை ஒத்திப்போட்டார். நான் பிணையில் செல்வதானால் 20 ஆயிரம் ரூபா செலுத்தவேண்டுமாம்.

'இந்தச் சிறுக்கி சிறையில் கிடக்கட்டும். அப்போதுதான் புத்திவரும்.' என்று நினைத்தார் போலும். அதனால்தான் அப்படியொரு பிணைத்தொகையை சொல்லியிருக்கிறார்.

கிராம அதிகாரி, பொலிஸ் அதிகாரி, இப்போது இந்த நீதிபதி என்று எல்லோரையும் எனக்குப் புரிந்துவிட்டது. இவர்கள் எல்லோரும் இயலாதவர்களைப் பிழிந்து சாறு குடிப்பதில்தான் இன்பம் காண்கிறார்கள்.

ஒருமாதகாலமாக என்னைச் சிறையில் வைத்திருந்தார்கள்.

ஒருநாள் சிறை அதிகாரி என்னைத் தனியாக அழைத்தார். புத்தியெல்லாம் சொன்னார்.

"இங்கே பார் அம்மா! நீ வாழவேண்டிய பெண். இப்படியெல்லாம் சிறைக்கு வருவதும், பொலிஸ் உன்னைப் பிடித்துச் செல்வதும் உனக்குத்தானே அசிங்கம்? ஒரு ஆண்பிள்ளையை, கல்லால் எறியலாமா நீ? என்னம்மா பேசாமல் நிற்கிறாய்? உன்னைப் பார்த்தால் எனக்கு ரொம்பப் பரிதாபமாக இருக்கும்மா!"

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒரு அதிகாரியிடம் இருந்து அன்பான வார்த்தைகள் வருவதென்றால் என் அனுபவத்தில் ஆச்சரியம்தானே!

அதிகாரி என் அருகே வந்து தலையைத் தடவினார். என் அப்பா வயது இருக்கலாம் அவருக்கு என்று நினைத்தேன்.

தலையைத் தடவிய கைகள் என் முதுகை மென்மையாக வருடத் தொடங்கின.

"எத்தனை வயதும்மா உனக்கு?"

"இரு.. இருபத்தியொன்று ஐயா!"

"பயப்பிடாதே அம்மா. பொலிஸ் நிலையத்தில் உடம்பெல்லாம் நோக அடித்தார்களா?" கேட்டபடியே என் புஜத்தைப் பிடித்து தன் அருகே இழுத்துக் கொண்டார்.

அப்போதுதான் அவரது செய்கை எனக்கு வித்தியாசமாகத் தெரிந்தது. முதுகை வருடிய கரம் பின்புறமாய் இடுப்புக்குக் கீழே இறங்கியது. அங்கேயும் மெதுவாக அவர் கரங்கள் அத்துமீறியபோதுதான் அவரது நோக்கம் புரிந்தது.

"வேண்டாம் ஐயா!"

"எனக்கு வேணுமே!" இப்போது அவர் கைகளில் ஒன்று என் முன்புறமும் பரவ ஆரம்பிக்க நான் பின்னால் நகர்ந்தேன்.

ஆத்திரத்தை அடக்கிக்கொண்டேன். பொலிஸ் நிலையத்தில் ஏற்பட்ட அனுபவத்தில் இருந்து எதிர்த்துப் போராட வழியில்லாத இடத்தில் சண்டை போடக்கூடாது. சண்டை போட்டால் நஷ்டம் எனக்குத்தான் என்று தெரிந்துகொண்டேன்.

"இங்கே பார் பூலான். நீ இங்கே இருக்கும்வரை சந்தோசமாக இரு. உனக்கு தண்டனை கிடைத்தாலும் இங்கே நீ ராணி மாதிரி இருக்கலாம். யாரும் உன்னைத் தொடாமல் நான் பார்த்துக் கொள்கிறேன்." கிட்டவந்து என் தோளில் கை போட்டார்.

இரைதேடும் புலியைப்போல அவரது கண்கள் பளபளத்தன. எப்படி இந்த மிருகத்திடம் இருந்து தப்பிக்கொள்வது என்று யோசித்தேன்.

தோளில் இருந்து அவரது கைகள் சுதந்திரமாக இறங்கிக் கொண்டிருக்க, அட்டை ஊர்வதுபோல கூசிப்போனேன்.

"ஐயா! வேண்டாமய்யா!"

"ஐயோ.. எனக்கு வேணுமே. இன்றிலிருந்து இந்தச் சிறைக்கு நீ ராணி. நான்தான் ராஜா, என்ன?" என் உடம்பெல்லாம் கைகளால் பரவினான். எனக்குள் கட்டுப்படுத்தி வைத்திருந்த கோபமெல்லாம் கட்டறுந்து விடும்போல இருந்தது.

இவனும் ஒரு வேசிமகன்தான் என்று நினைத்துக்கொண்டே: "ஐயா! உங்கள் கருணை கிடைத்தது பாக்கியம் ஐயா!



பூலான்

இன்றைக்கு இது வேண்டாம் ஐயா!"

"ஏன் வேண்டாம்? என்னமாய் இருக்கிறாய் தெரியுமா? மான் குட்டிமாதிரி. காட்டுராணிமாதிரி. முயல் குட்டிகள் மாதிரி இந்த.."

"ஐயா! இன்று வேண்டாம் ஐயா!" என்றேன். 'நாய்க்குப் பிறந்த பயலே! உன்னையும் ஒருநாள் ஒழித்துக் கட்டுவேனடா' என்று மனதில் கறுவிக்கொண்டேன்.

"சரி! வேண்டாம். ஒன்றே ஒன்று மட்டும். மீதி நாளைக்கு என்ன?"

என்னை இறுக்கிக்கொண்டு வாயில் முத்தமிட்டான். நாற்றம் பிடித்த நாய்!

"ஐயா! நான் போகிறேன் ஐயா!"

"ம்.ம்.. நாளைக்கு ஏமாற்றமாட்டாயே?"

"இ.. இல்லை ஐயா!"

மறுநாள் எப்படிச் சமாளிப்பது? என்று யோசிக்க வேண்டியிருந்தது. இரவு முழுக்கத் தூங்க முடியவில்லை.

எனக்கு மட்டும் ஏன் இப்படியாகிறது? எங்கே போனாலும் ஒரு மிருகம், ஒரு நாய் என்முன்னால் வந்து நாக்கைத் தொங்கப் போட்டபடி நிற்கிறதே! ஏன்?

பார்த்துவிடலாம். கெஞ்சிப்பார்க்கலாம். கேட்காவிட்டால் முடிந்தவரை அவனை ஒருவழி பண்ணவேண்டியதுதான். அதிகாலையில்தான் தூங்கிப் போனேன்.

மறுநாள். என் வாழ்க்கையில் முதன் முதலாக ஓர் அதிஷ்டம்.

என்னைப் பிணையில் எடுத்துவிட்டதாக சொல்லி, புறப்படுமாறு சொன்னார்கள்.

முதலில் என் காதுகளையே நம்பமுடியவில்லை. கேலி செய்கிறார்களோ என்று மௌனமாக இருந்தேன்.

20 ஆயிரம் என்பது என் குடும்பத்திற்கு வாழ்நாளில் கிடைக்கவே கிடைக்க முடியாத பணம்.

பின்னர் எப்படி என்னைப் பிணையில் எடுக்க முடியும்? நான் நம்பவில்லை.

பெண்களின் சிறைப்பகுதிக்கு பெண் காவலர்தான் பொறுப்பு. எங்கள் பகுதிக்குப் பொறுப்பாக இருந்த பெண் காவலர்களில் சிலர் கொடுமைக்காரர்களல்ல; அதாவது நல்லவர்களுமல்ல, கெட்டவர்களுமல்ல என்ற ரகம்.

அவர்களில் ஒருத்திதான் செய்தி சொன்னாள். புறப்படு என்று துரிதப்படுத்தினாள். அதனால் தாமதித்து நம்பினேன்.

சிறையில் இருந்து விடுதலையாவதில் இருக்கும் சந்தோசத்தைவிட, எப்படி பிணை கிடைத்தது? 20 ஆயிரம் ரூபா கட்டியது யார் என்பதை அறியவேண்டும் என்ற துடிப்புத்தான் அதிகமாக இருந்தது.

ஒருவேளை சூழ்ச்சியாக இருக்குமோ? என்னும் சந்தேகம் வந்தது.

(தொடர்ந்து வரும்)

# கட்டுடல் நாயகன் குண்டானது எப்படி?



மேக்-அப்பிற்கு முன்

இந்தியன் படத்தில் கமலஹாசனின் மேக்-அப். அவ்வை சண்முகியில் கமலஹாசனின் மேக்-அப் என்று நோக்க நோக்க களியாட்டம். மேக்-அப் கலை முன்னேறி வருவதை தமிழ் பட உலகில் கமல் நன்கு பயன்படுத்திக் கொள்கிறார்.

மேக்-அப் விடயத்தில் எல்லோரையும் தூக்கிச் சாப்பிட்டுவிட்டார் ஒரு ஹொலிவூட் நடிகர். அவரது பெயர் எட்டி மர்பி. ஹொலிவூட் பட உலகின் இளம் கதாநாயகர்.



மேக்-அப்பிற்கு பின்

அஜித்குமார் போல மெல்லிய உடல்வாகு கொண்டவர்.

எட்டி மர்பி சமீபத்தில் நடித்து வெளியாகியுள்ள படம்: 'நட்டி புரொபசர்'. படத்தில் எட்டி மர்பி ஏழு வேடங்களில் தோன்றுகிறார். அதில் ஒரு வேடம்தான் அசத்தலோ அ

காரணம் என்ன தெரியுமா? அந்த வேடத்தில் மகா குண்டராகத் தோன்றுகிறார் எட்டி மர்பி.

இந்திரன்–சந்திரன் படத்தில் கமலும் உடலில் தண்ணீர் பையெல்லாம் கட்டிக் கொண்டு தொந்தியான மேயராக நடித்திருந்தார். மலையாளப் படமான 'அங்கிள் பன்'னில் மோகன்லால் குண்டான உடல் போன்ற கெட்-அப்பில் நடித்திருந்தார்.

ஆனால் உடலை உப்பச் செய்யலாமே தவிர முகத்தை குண்டாக மாற்ற முடியாது. எட்டி மர்பி மாற்றிக்காட்டியிருக்கிறார் என்பதுதான் மகா ஆச்சரியம்.

எட்டி மர்பியின் இரண்டு தோற்றங்களையும் பாருங்கள். நிஜமான குண்டர் போலவே மாறியிருக்கிறார் அல்லவா. அதுதான் ஹொலிவூட் மேக்-அப் சாமர்த்தியம்.



'நட்டி புரபசரி'ல் எட்டி மேர்பி.

எட்டி மர்பியின் குண்டான தோற்றத்துக்கு மேக்-அப் போட தினமும் ஐந்து மணிநேரம் தேவைப்பட்டதாம். அது மட்டுமல்ல படத்தில் ஏழுவேடங்களுக்கு ஏழு மாறுபட்ட குரல்களிலும் பேசி தூள் கிளப்பியிருக்கிறார்.

மேக்-அப்புடன் குண்டான எட்டி மர்பியைப் பார்த்த ரசிகர்கள் நம்பமுடியாமல் மூக்கின் மேல் விரலை வைத்தார்களாம். இங்கு பிரசுரமாகியுள்ள எட்டி மர்பியின் இருவேறு தோற்றங்களையும் பார்க்கும்போது நமக்கும்தான் மூக்கின் மேல் விரல்.

# பூலான்தேவியின் உடன்பிறவா சகோதரி



பேட்டிகள் கொடுப்பதில் வாத்தியாரம்மா ஆகிவிட்டார் பூலான்தேவி. பேட்டி கொடுப்பது எப்படி என்பதை தாராளமாக அவரிடம் கற்றுக் கொள்ளலாம். சமீபத்தில் ஏ.பி.என் தொலைக் காட்சிக்கு பேட்டியளித்தார் பூலான்தேவி. நேர்த்தியான பேட்டி என்று ஏகப்பட்ட பாராட்டுக்கள்.

கேள்விகளுக்கு சுற்றி வளைக்காமல் பட்பட்டென்று பதில் சொன்னார். எதிரிகளைச் சுட்டுத்தள்ளிய கைகள் இப்போது 'மைக்' பிடித்து பேசக் கற்றுக் கொண்டுவிட்டன.

பூலான்தேவியின் பெயர் பரபரப்பாக அடிபட்டுக் கொண்டிருப்பதால் அவரைச் சந்திக்கவும், பேசவும் என்று சகல மட்டத்தினரும் ஆர்வப்படுகின்றனர்.

பூலான் தேவியின் உயிர்த் தோழியாக மாறிவிட்டார் நடிகை ஜெயப்பிரதா. ஹிந்தி நடிகையான ஜெயப்பிரதாவும் எம்.பியாகத்தான் இருக்கிறார். பூலானின் சாகசங்களை அறிந்து அவரது ரசிகையாகிவிட்டாராம் ஜெயப்பிரதா.

"பூலான்தேவி சினிமாவுக்கு வெளியே கதாநாயகி. நான் சினிமாவில் கதாநாயகி இருவரும் நெருங்குவதில் என்ன ஆச்சரியம்?" என்று கேட்கிறார் ஜெயப்பிரதா.

பூலான்தேவி எம்.பியானாலும் முன்னைய கோபமும், வேகமும் அப்படியே இருக்கிறது. பூலானுக்கு பாதுகாப்பாக அவரது விசுவாசிகள்தான் செல்கிறார்கள். கூட்டங்களில் பூலான் பேசும்போது அவரைச் சுற்றி வியூகமாக நிற்கிறார்கள்.

பூலான்தேவியின் பாதுகாவலர் ஒருவருக்கும் பொலிஸ்காரர் ஒருவருக்கும் இடையே சிறு தகராறு ஏற்பட அந்த பொலிஸ்காரரை அடிக்கவே போய் விட்டாராம் பூலான்.

பிரச்சனை பெரிதாகிவிடாமல் இருக்க பூலான்தேவிக்கு நெருக்கமான ஒரு அமைச்சர்தான் பொலிஸ் மேலிடத்துடன் பேசி விஷயத்தை அமுக்க வேண்டி ஏற்பட்டது.


பூலான்தேவி முன்னர் ரயிலை நிறுத்திய விடயத்திலும் குறிப்பிட்ட அமைச்சர் தலையிட்டுத்தான் அதனையும் தீர்த்து வைத்தார் என்பது தெரிந்ததுதானே. பூலான்தேவி முழுதாக மாறுவதற்கு நாளாகும்தான்.



படிப்பகம்

www.padippakam.com

# முகத்தில் பலம் பார்க்கலாம்



உடல் பலத்தை வைத்து உலக சாதனை படைப்பவர்களும் இருக்கிறார்கள். இவரோ தன் முகத்தை வைத்து உலக சாதனை படைத்துள்ளார். இவரது பெயர்: அலெக்ஸ்லாம்பிறெட். ஏழு வயதிலிருந்தே முகத்தில் கூரான வளையங்களைக் குத்தி வேடிக்கை காட்ட ஆரம்பித்தார். முதலில் வேடிக்கையாகச் செய்ய தொடங்கி, அதுவே சாதனை படைக்கும் வெறியாக மாறியது. 40வது வயதில்தான் உலக சாதனை படைக்க முடிந்தது.

படத்தைப் பாருங்கள். மொத்தம் 130 ஸ்ரட்டுக்களையும், வளையங்களையும் குத்திக் கொண்டு என்ன ஜாலியாகப் போஸ் கொடுக்கிறார் பாருங்கள். கிட்டத்தட்ட அரைக்கிலோ பாரத்தை முகம் தாங்கியிருக்கிறது. உடல் முழுவதும் சிருடைபோல பச்சையும் குத்திக் கொண்டார். (துணிச்செலவு மிச்சம்)

பிறரை வருத்தி இன்பம் காண்பவர்கள் மத்தியில் இவர் தன்னை வருத்தி சாதனை படைத்து நம்மையும் வியக்கவைத்துள்ளார். அதற்காகப் பாராட்டலாம்.

முகத்தில் முகம் பார்க்கலாம் என்பது காதலர்களுக்கு பிடித்த பாடல். இவர் சாதனையைக் காதலிப்பவர். முகத்தில் பலம் பார்க்கிறார்.


## எட்டமுடியாத எடை




இதுவும் ஒரு வித்தியாசமான பிராணிதான். இதன் பெயர் 'கொமோடோ 'ட்ராகன்'. பார்வைக்கு உடும்பு போலத் தெரியும். எடை 130 இறாத்தல். நீளம் 2.25 மீட்டர். உணவு தேடும் வேட்டைக்கு இது நம்பியிருப்பது தனது நாக்கைத்தான். நாக்கே இதன் ஆயுதம் கடற்கரையோரம் உள்ள நண்டுகளையும், நத்தைகளையும் விரும்பிச் சுவைக்கும். மிகப் பழைய உயிரினங்களில் ஒன்று. இந்தோனேஷியா நாட்டுக் கடற்கரைகளில் அதிகமாகக் காணப்படும்.

படத்தில் காணப்படுவது உலக அதிசய கொமோடோ ட்ராகன். இதன் நீளம் 3.10 மீட்டர். (12 அடி 2 அங்குலம்) எடைதான் யம்மாடி ரகம். அதாவது 365 இறாத்தல். 1937ல் இந்த அதிசய கொமோடோ ட்ராகன் கண்டுபிடிக்கப்பட்டது. இதுவரை வேறு கொமோடோ எதுவும் இதன் சாதனையை ஒரம்கட்ட முடியவில்லை.

## தகவல் பெட்டி



## மிதக்கும் அரக்கன்



கடல் கண்ணி வெடிகள் பற்றி கேள்விப் பட்டுள்ளீர்கள் அல்லவா. படத்தில் பந்துபோல மிதப்பதுதான் கடல் கண்ணிவெடி.. பார்த்தால் ரொம்பச் சின்னதாகத்தான் தெரியும். ஆனால் வல்லமை பயங்கரம். பிரமாண்டமான கப்பல்களைக்கூட கந்தலாக்கி விடும். கடல் கண்ணிவெடி ஒன்றில் மோதிப் பிளந்த பிரிட்டிஷ் கப்பல் ஒன்றைத்தான் படத்தில் காண்கிறீர்கள். கடல் கண்ணியின் சூரத்தனத்திற்கு சாட்சி கிடைத்துவிட்டதல்லவா! (அதற்காக வழக்கா போடமுடியும். பிடிக்க முடியாததுக்கு ஏன் வழக்கு? என்றா கேட்கிறீர்கள். அதுவும் சரிதான்!)

கடல் கண்ணிகளை கண்டறியும் கருவிகள் இருக்கின்றன. நம்நாட்டிலும் புலிகள் கடல் கண்ணித் தாக்குதல்களை முன்னர் நடத்தியிருந்தனர். இப்போது அதற்கான சாத்தியம் குறைவு. காரணம் கடற்படையினரிடம் கடல் கண்ணிகளை கண்டுபிடிக்கும் கருவிகள் இருக்கின்றன. கடல் கண்ணிவெடிகளை கடலில் பெருந்தொகையாக விதைப்பதும் ஆபத்து. குறியில் மீனவர் படகுகளோ, பயணிகள் கப்பல்களோ மாட்டிக்கொண்டுவிடலாம். கடல் கண்ணிவெடிகளை கடல் அரக்கன் என்றும் சொல்லலாம். கண்ணில்லாத அரக்கன். தன்மேல் பட்டவர் யாராக இருந்தாலும் பட்டென்று பதம்பார்த்துவிடும்.

## புலி பதித்த சுவடுகள்

புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? என்று ஒரு பழமொழி உண்டு. ஆனால் புலிகள் யாவுமே பூனைக் குடும்பத்தைச் சேர்ந்தவைதான். புலிகளில் பெரியது வேங்கைப் புலி. (வரிவரியான உடலோடு காணப்படும்) அதிலும் சைபீரியாவில் வாழும் புலிகளின் பாதங்கள் பெரிதாக இருக்கும்.

படத்தில் இருக்கும் காலடிகள் தான் இதுவரை கண்டறியப்பட்ட வேங்கைப் புலிகளின் பாதச்சுவடுகளில் பெரியவை.





விரலிருந்து அடிப்பாதம் வரை 15 சென்ரி மீட்டர் நீளம். இதன் அகலம் 10 சென்ரி மீட்டர்.

மற்றொரு உலக சாதனைச் செய்தி: 1967ல் இந்தியாவில் வட உத்தரப் பிரதேசப் பகுதியில் ஒரு வேங்கைப் புலி சுடப்பட்டது. உலகிலேயே எடை கூடிய வேங்கைப் புலி அதுதான். அதன் எடை 389 கிலோ. (858 இறாத்தல்) சைபீரியாவில் உள்ள வேங்கைப் புலிகளின் எடை 265 கிலோ மட்டும்தான். (585 இறாத்தல்). சாதனைப் புலிகளானாலும், சாதாரண புலிகளானாலும் வேங்கைகள் என்றாலே வாட்டசாட்டம் தான்.

## எப்படி எப்படி வந்தது எப்படி?



↑ படத்தில் காணப்படும் அதிசய விலங்கை இதற்கு முன்னர் நீங்கள் கண்டதுண்டா? கண்டிருக்க முடியாது. காணவேண்டுமானால் அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல வேண்டும். அங்குதான் இவை காணப்படுகின்றன. 'எறும்பு தின்னி' என்று அழைக்கப்படுகின்றன.

சமீபத்தில் தமிழ்நாட்டில் ஊத்துக்கோட்டை என்னும் இடத்தில் ஒரு இரும்புக் கடை ஒன்றுக்குள் இந்த விலங்கு எப்படியோ வந்து சேர்ந்து விட்டது. இந்தியாவிலேயே இல்லாத இந்த விலங்கு எப்படி அங்கு வந்தது என்பதுதான் தெரியவில்லை. விஷயமறிந்து இந்த அதிசய விலங்கைப் பார்க்கக் கூட்டம் கூடிவிட்டது. பின்னர் வனவிலங்குத் துறையினர் வந்து பிடித்து சென்றுவிட்டனர்.

'எறும்பு தின்னி' பற்றி சில தகவல்கள். இதன் நாக்கு மகா நீளம். புற்றுகளுக்குள் நாக்கை விட்டு எறும்புகளை லபக்கென்று பிடித்து விழுங்கிக்கொள்ளும். நாக்கில் ஒரு விதமான பசை இருப்பதால் எறும்புகள் ஒட்டிக்கொள்ள வேண்டியதுதான். தப்புவதற்கு சான்சே இல்லை. இதன் நீளம் 2 மீட்டர். இரவில்தான் இரைதேடும். உடல் முழுவதும் முட்கள் இருக்கும். வாலைப் பந்துபோல சுருட்டிக் கொள்ளும். முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். குட்டிக்கு பாலூட்டி வளர்க்கும்.

## ஒரு தடவை நடந்தா நூறு தடவை நடந்தமாதிரி



கோடிக்கணக்கான ஆண்டுகளின் முன்னால் பூமியில் வாழ்ந்து மடிந்த ராட்சத விலங்கு டைனோசர். 'ஜுராசிக் பார்க்' என்னும் படத்தில் கம்யூட்டர் மூலம் உருவாக்கப்பட்ட டைனோசரைக் காணவே உலகெங்கும் பலத்த ஆவல். அதனால் படமும் வசூல் மழை பொழிந்தது.

டைனோசரின் ராட்சத உடலின் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு பாதுகாக்கப்படும் கால் ஒன்றின் தோற்றத்தையே இங்கு காண்கிறீர்கள்.

இந்தக் கால்களின் பின்னால் ஒரு கதையே உண்டு. யானையின் காலடித் தடங்களைவிட டைனோசரின் காலடிகள் பெரியவை. அது மட்டுமல்ல இலட்சக் கணக்கான ஆண்டுகள் முன்னால் டைனோசர்கள் மலைகள் வழியாக நடந்து சென்றபோது ஆழப்பதிந்த காலடிச் சுவடுகள் இன்னமும் அப்படியே உள்ளன. அமெரிக்காவில் கொலரேடா மாநிலத்தில் ஃபர் கட்டாயர் என்றொரு நதி இருக்கிறது. அதன் கரையில் டைனோசரின் காலடித் தடயங்களை இப்போதும் காணலாம். அதில் ஒரு காலடிதான் கீழுள்ள படத்தில் காணப்படுகிறது.

சிமெந்து பூசப்பட்ட ஈரமான தரையில் ஒருவர் நடந்தால் காலடிகள் பதிந்துவிடுமல்லவா. அதுபோலவே டைனோசர்கள் நடந்த தரைப் பகுதிகளிலும் மலைப்பகுதிகளிலும் காலடிகள் ஆழப்பதிந்துள்ளன. (டைனோசர் ஒரு தடவை நடந்தா அது நூறு தடவை நடந்த மாதிரியாக்கும்)

அதுமட்டுமல்ல பாறைகளில் சிக்கியிருந்த மாபெரிய கோரைப் பற்களையும் ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். அவையும் டைனோசர்களின் பற்கள்தான். இவற்றையெல்லாம் வைத்துதான் டைனோசர்கள் எப்படி இருந்திருக்கும் என்று ஒரு முடிவுக்கு வர முடிந்தது.





படிப்பகம்

www.padippakam.com

## 'சண்முகி' புடவைகள்!

'அவ்வை சண்முகி' படத்தில் கமலின் பெண்வேடம் பிரபலமாகிவிட்டதல்லவா. படம் தீபாவளிக்கு வெளியாகும் என்று நம்பப்படுகிறது.

படம் வெளிவருவதற்கு இடையே தமிழ் நாட்டில் உள்ள புடவை தயாரிப்பு நிறுவனம் ஒன்று 'அவ்வை சண்முகி' புடவைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. தீபாவளி விற்பனைக்காக அவ்வை சண்முகி டிசைன் புடவைகள் தமிழ் நாட்டில் புடவைக் கடைகளை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன.

## விரிசல்

மலையாளத்தில் கொடி கட்டிப் பறக்கும் இரு நடிகர்கள் மம்முட்டி, மோகன்லால். இருவருமே நல்ல நண்பர்களாக இருந்தனர்.

யார் கண்பட்டதோ தெரியவில்லை. நட்பில் விரிசல் விழுந்துவிட்டது. இப்போது நேர் கண்டாலும் பேசிக்கொள்ளாமல் செல்கிறார்களாம்.

## மினி மினி

* ரஜினியின் 'அருணாச்சலம்' படத்தில் ரஜினிக்கு தம்பியாக விக்னேஷும், தங்கையாக 'பூவே உனக்காக' அஞ்சு அரவிந்தும் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்கள்.
* ஷங்கர் இயக்கிய மூன்று படங்களுக்கும் ஒளிப்பதிவாளராக இருந்தவர் ஜீவா. அடுத்து ஷங்கர் இயக்கும் 'ஜீன்ஸ்' படத்தில் ஜீவா இல்லை. இப்படத்திற்கு அசோக்குமார் ஒளிப்பதிவு செய்கிறார்.
* சிற்பியின் மூலம் 'மேட்டுக்குடி' படத்தில் பாடகியாக அறிமுகமாகியவர் ஏ.ஆர்.ரகுமானின் சகோதரி இஷ்ரத். தொடர்ந்து சிற்பியின் இசையில் 'பெரிய இடத்து மாப்பிள்ளை' படத்திலும் பாடியுள்ள இஷ்ரத் தேவாவின் இசையமைப்பில் 'கோபாலா கோபாலா' படத்திலும் பாடியுள்ளார்.
* தெலுங்கில் சக்கரவர்த்தி- மகேஸ்வரி நடித்த 'குலாபி' சமீபத்தில் 'இதயமே இதயமே' என்ற பெயரில் தமிழில் மொழிமாற்றப்பட்டு வெளியானது. இதைத் தொடர்ந்து சக்கரவர்த்தி- மகேஸ்வரி தெலுங்கில் நடித்த 'தையம்' தமிழில் மொழிமாற்றப்படுகிறது.
* சில வருடங்களுக்கு முன் கார்த்திக் நடிக்க, விக்ரமன் இயக்க 'இனியெல்லாம் சுகமே' என்ற படம் தொடங்கப்பட்டது. சில காரணங்களால் அந்தப்படம் நின்றுவிட்டது. தற்போது அதே பெயரில் புதிய படம் ஒன்று தயாராகிறது.
* தெலுங்குப் படங்களில் வில்லனாக நடி… வரும் ஸ்ரீஹரி, டிஸ்கோ சாந்தியைத் திரும… செய்தார். தற்போது ஸ்ரீஹரி, விஜயகா… நடிக்கும் 'அலெக்ஸாண்டர்' படத்தில் வில்ல… நடிக்கிறார். இவர் நடிக்கும் முதல் தமிழ்பட… இதுதான்.
* இப்ராஹிம் ராவுத்தர் தயாரிக்க லிவிங்ஸ்… கதை, திரைக்கதை எழுதி நடிக்கும் படத்… 'உனக்கும் எனக்கும் கல்யாணம்' எ… பெயரிடப்பட்டுள்ளது. இதில் லிவிங்ஸ்டனு… ஜோடியாக தேவயாணி நடிக்கிறார்.
* பாலுமகேந்திரா இயக்கி வரும் 'ராமன் அப்துல்… படத்தில் மொத்தம் ஆறு பாடல்கள். இந்த … பாடல்களையும் ஆறு கவிஞர்கள் எ… யுள்ளார்கள். இப்படத்திற்கு இசையமைத்… பவர் இசைஞானி இளையராஜா.
* தமிழில் படவாய்ப்புக்கள் எதுவுமின்றி தெலு… மற்றும் கன்னடப்படங்களில் நடித்துவருகி… கஸ்தூரி. அண்மையில் இவர் 'மெருபு' எ… தெலுங்குப் படத்தில் ஒரு பாடல் காட்சி… மட்டும் தோன்றி நடனமாடியுள்ளார்.
* பவித்ரன் இயக்கும் 'மூக்குத்தி காசி' பட… முதலில் சரத்குமார் நடிப்பதாக இருந்… பின்னர் பிரகாஷ்ராஜ் நடிக்கிறார் என்று செ… வெளியானது. இப்போது 'மூக்குத்தி காசி'… டாக்டர் ராஜசேகர் நடிப்பார் என்று தெரிகி…

## நடிகை வீட்டில் தேடுதல்

நடிகை பானுப்பிரியாவின் வீட்டில் முன்னாள் அமைச்சர் ஒருவரைத் தேடி பொலிசார் வேட்டை நடத்தினார்கள். குறிப்பிட்ட முன்னாள் அமைச்சரும் பானுப்பிரியாவும் வெகு நெருக்கம் என்பதை பொலிசார் மோப்பம் பிடித்துவிட்டார்கள்.

சுகன்யாவின் பெயர் மற்றொரு முன்னாள் அமைச்சருடன் பகிரங்கமாக அடிபட்டது. பானுப்பிரியா புத்திசாலி. இரகசியமாகவே ஒரு அமைச்சரை மடக்கி கையில் வைத்திருக்கிறார்.

முன்னாள் அமைச்சர்களுடன் எப்போதாவது நெருக்கமாக இருந்த வேறு சில நடிகைகளும் கலக்கத்தில் இருக்கிறார்களாம்.




சங்கவி
படம்: மன்னவா

## காதோடு சொல்வதீரோம்

மாணிக்கமான படத்தில் நாயகியாக நடித்தவர் 'வனித' நடிகை. அவர் நட்ச… தம்பதிகளின் மகளுமாவார். மாணிக்கமான படத்திற்கு இசையமைத்தவர் 'இ… இசையமைப்பாளரின் புத்திரர். அவருக்கும் வனித நடிகைக்கும் இடையே அடி… சந்திப்புக்கள் நடக்கிறதாம். தொலைபேசியிலும் மணிக்கணக்காகப் பேசுகி…களாம். இரண்டுபேருமே வாரிசுகள்தான். காதலும் வாரிசுகளைத் தருமள… வளருமோ?

நகைச்சுவை மணியுடன் ராசியாக இருந்த கவர்ச்சி ஜோதி… நடிகை மற்றொரு வம்பில் மாட்டிக்கொண்டார். பிரபல பெண் … இயக்குநரின் பள்ளியில் நடனம் பயிலச்சென்றாராம் நடி… அங்கு நடனம் பயின்ற மாணவர் ஒருவருடன் காதல் … பயில ஆரம்பித்தாராம் நடிகை. விஷயம் தெரிந்ததும் … இயக்குநர் சீட்டைக் கிழித்து நடிகையை வீட்… அனுப்பிவிட்டாராம்.

மனம்கோணாமல் நடந்துகொண்ட மூன்றெ… நடிகைக்காக அவரது தங்கைக்கு சிபாரிசு செய்தார் '… நடிகர். இப்போது தங்கை நடிகையும் நடிகரும் '… கொள்ளத் தொடங்கிவிட்டனராம். அதனை அக்கா க… யாரோ சொல்ல, அதற்கு அவர் சொன்னாராம்: "அ… லென்ன அவளும் வாய்ப்புத்தேடும் கலையில் தேறத்த… வேண்டும்." இந்த தத்துவம் சொன்ன நடிகையின் … 'மா' என்ற எழுத்தில் முடிகிறது.

'ரஞ்சித' நடிகை புகழின் உச்சத்தில் இருந்தபோ… பாண்டியமான ராஜ நடிகரை மதிக்கவேயில்லை. இப்போ… மார்க்கெட் டல்லான நிலையில் அவருடன் நடிக்கி… பழசை மறக்காமல் மனதில் வைத்து பழிவாங்குகிறா… நடிகர். நெருக்கமான காட்சிகளும் அதிகமாக இருப்ப… பழிவாங்க வசதியாக இருக்கிறதாம். யானைக்கு ஒரு க… வந்தால்……

## 150வது படம்

'அருணாச்சலம்' படத்தின் கதையைக் கேட்டதும் 54 விதமான டியூன் போட்டு வைத்திருக்கிறார் தேவா. ரஜினிதான் அதில் சிறந்ததைத் தெரிவு செய்யவேண்டும்.

'அருணாச்சலம்' படத்தை அடுத்து ரஜினியின் 150வது படத்தை இயக்குவதற்கு இப்போதே இயக்குநர்கள் பலர் போட்டி போடுகிறார்கள். 150வது படத்திற்கு 'குபேரன்' என்பதுதான் சரியான பெயராக இருக்கும். இது ரஜினி அபிமானிகளின் யோசனை.

முதலில் 'அருணாச்சலம்' முடியட்டும். பின்னர் 150 வது படத்தின் பெயரைத் தீர்மானிக்கலாம் என்றுவிட்டாராம் ரஜினி.

'அருணாச்சலம்' படத்தில் ரஜினியோடு நடிக்கப்போகிறார் ஜெயராம். அநேகமாக அது உறுதியாகிவிட்டதால் சந்தோசத்தில் பூரித்துப்போயிருக்கிறாராம் ஜெயராம்.

## "கைதட்டல் கேட்கும்" விஜயகாந்த் நம்பிக்கை

தீபாவளிக்கு வரப்போகும் விஜயகாந்த் படம் அலெக்ஸாண்டர். முழுக்க, முழுக்க விஜயகாந்த் படப்பாணியில்தான் இருக்கும். படம் பற்றி விஜயகாந்தே சொல்லுகிறார்: "அலெக்ஸாண்டரில் வழக்கமான விஜயகாந்தை நீங்கள் பார்க்கலாம். சண்டைக்காட்சிகள் வழக்கம்போல கைதட்டல் பெறும்" என்கிறார் விஜயகாந்த்.

"மனிதர்கள் உணர்ச்சியின் மொத்த உருவம். அவர்களின் எண்ணங்களைப் பிரதிபலிப்பவர்கள் ஆக்ஷன் ஹீரோக்கள்தான். குழந்தைகள் கூட ஆக்ஷன் ஹீரோக்களைத்தான் விரும்புகிறார்கள்" என்றும் சொல்லியிருக்கிறார்.

## ரம்பா ஓரம்பா

தமிழ் பட ரசிகர்களின் லேட்டஸ்ட் கனவுக் கன்னிகளில் ஒருவர் ரம்பா. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளாமல் இருப்பார்களா தயாரிப்பாளர்கள்.

தெலுங்கில் ரம்பா சற்றும் அஞ்சாமல் கவர்ச்சி காட்டி நடித்த படங்களை மளமள வென்று தமிழுக்கு மொழி மாற்றுகிறார்கள்.

அவ்வாறு மொழி மாற்றப்படும் படங்களில் ஒன்றுக்கு என்ன பெயர் சூட்டியுள்ளார்கள் தெரியுமா? 'ரம்பா ஓரம்பா' என்பதுதான் பெயர்.

ரம்பாவின் ஜோடியாக சுமன் நடிக்கிறார். வாணிஸ்ரீ, ஜெயசித்ரா, கோவை சரளா, பாபு, ஸ்ரீஹரி ஆகியோரும் நடிக்கின்றனர்.

## நடிகையின் மனேஜர்

கிடு கிடுவென்று புதிய படங்களில் ஒப்பந்தமாகிக் கொண்டிருப்பவர் தேவயாணி.

முன்னர் தனது அம்மாவுடன்தான் படப்பிடிப்பில் ஆஜராவர் தேவயாணி. சமீபகாலமாக தேவயாணியுடன் ஒரு தாடிக்காரர் காணப்படுகிறார்.

அவர்தான் தேவயாணியின் மனேஜராம். அவரது தொல்லை தாங்கமுடியவில்லை என்று இயக்குநர்கள் சலித்துக் கொள்கிறார்கள்.

ஏற்கெனவே சில்க் சுமிதாவுக்கு மனேஜராக இருந்து பின்னர் அவரது எஜமானராக மாறியவரும் ஒரு தாடிக்காரர்தான். தேவயாணிக்கும் தெரியும்தானே.

## சமாளிக்க 'ஸ்டூல்'

'புருஷன் பொண்டாட்டி' படத்தில் பாண்டியராஜனின் ஜோடியாக நடிக்கிறார் ரஞ்சிதா. ரஞ்சிதா சரியான உயரம். அவருடன் நெருக்கமான காட்சிகளில் 'ஸ்டூல்' போட்டு சமாளிக்கிறாராம் பாண்டியராஜன்.

படத்தின் தலைப்புக்கு ஏற்ப காட்சிகளிலும் நெருக்கம் வைத்து அசத்துகிறார்களாம்.



## 'வசந்தகால கொலைகள்'

சாதுவான கதாநாயகனாக நடித்துக் கொண்டிருப்பவர் ரமேஷ் அரவிந்த். இப்போது எதிரிகளைப் பிய்த்து உதறும் ஆக்ஷன் ஹீரோவாக நடிக்கும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

படத்தின் பெயர்: 'வசந்தகாலக் கொலைகள்'. கதாநாயகியாக பஞ்சமி நடிக்கிறார். சார்லி, எஸ்.எஸ்.சந்திரன், கோவை சரளா ஆகியோரும் நடிக்கின்றனர்.

தனது தந்தையைக் கொலை செய்த முதலமைச்சரையும், பொலிஸ்துறை அமைச்சரையும் கதாநாயகன் பழிக்குப் பழிவாங்குவதுதான் கதை. இயக்கம்: கே.பி. பிரசாத். இசை: ராஜபாஸ்கர்.

## கனவில் டைசன்

நடிகை வினிதாவின் கனவில் வந்து தொல்லைப்படுத்துகிறாராம் குத்துச் சண்டைவீரர் மைக் டைசன். சண்டைக் காட்சியுள்ள படங்களில் நடித்து விஜயசாந்தி இலவலுக்கு செல்லவேண்டும் என்று துடிக்கிறார் வினிதா. அதுதான் கனவிலும் டைசன் வருவதாக கதையளக்கிறாராம்.

'சிவப்பு நிலா' படத்தில் சண்டைக் காட்சிகளில் வினிதா நடித்தாலும் நடித்தார், உடனே விஜயசாந்தியை மிஞ்சும் ஆசை வந்துவிட்டது. பேராசைதான். ஏங்க யார் யார் எதற்கெல்லாம் ஆசைப்படுவது என்று ஒரு விவஸ்தையே இல்லையா?



உதயகுமார்-மனோரமா
படம்: பெரிய ராமசாமி சின்ன ராமசாமி

## நஷ்…

ராஜ்கிர… என்று பெரு… சரியாக இ… அதனால் த…

இதேபோ… செலவை ஈ… நஷ்டமாம். … இடையே ஏற்… இருந்ததும் …

## சுச…

ஒரு க… படங்கள் அ… டைத்திருக்கி…

ஒரு க… கதையே தே… கதாநாயகி… முடித்துவிட… காட்டி தன… விடலாம். இ… தான் என்ற…



படிப்பகம்

www.padippakam.com

# கனவில் வரும் நடிகை யார்?

## ரஜினியின் சுருக், நறுக் பேட்டி

ரஜினிகாந்த் எப்போதுமே வெளிப்படையாகப் பேசக்கூடியவர். வேஷம் போடுவது நடிப்புக்கு மட்டும்தான். வாழ்க்கையில் நடிக்கத் தெரியாத மனிதர் என்று ரஜினி பாராட்டப்படுவது சரிதான் என்பதற்கு இப்பேட்டியும் ஒரு உதாரணம். பல ஆண்டுகளுக்கு முன்னர் வெளியான ரஜினியின் அசத்தலான பேட்டி இது.

**கேள்வி:- சின்னவயதில் தெருவில் அதிகமாக விளையாடிய விளையாட்டு?**
ரஜினி:- கள்ளன் பொலிஸ். (நான் எப்பவும் திருடன் வேஷம்தான் போடுவேன்)
**கேள்வி:- அப்பா, அம்மா-இவர்களில் யாரிடம் அதிக பயம் வைத்திருந்தீர்கள்?**
ரஜினி:- யாரிடமும் இல்லை.
**கே:- வீட்டில் காசு திருடி சினிமாவுக்கு போனது உண்டா?**
ரஜினி:- நிறைய உண்டு.
**கே:- அரசியல் கூட்டங்களுக்குப் போனதுண்டா?**
ரஜினி:- எப்போதாவது.
**கே:- பெங்களூரில் நீங்கள் அடிக்கடி விரும்பிச் செல்லும் இடம்?**
ரஜினி:- ராமகிருஷ்ண ஆசிரமம்.
**கே:- வகுப்பில் நீங்கள் முதல் வரிசையா? கடைசி பெஞ்சா?**
ரஜினி:- முதன் முதல்லே முன்பெஞ்ச். போகப்போக கடைசி பெஞ்ச்!
**கே:- விவரம் தெரிஞ்ச பிறகு நீங்கள் செய்த ஒரு தவறு?**
ரஜினி:- நிறையத்தவறு.
**கே:- நீங்கள் அதிகமாக அன்பு செலுத்திய ஒரு பெண்?**
ரஜினி:- என் அம்மா.
**கே:- திரும்ப திரும்ப பார்த்த சினிமா?**
ரஜினி:- வீரகேசரி (கன்னடப்படம்)
**கே:- படம் பார்த்துவிட்டு வந்து நண்பர்களிடம் நடித்துக் காட்டும் பழக்கம் உண்டா?**
ரஜினி:- உண்டு.
**கே:- ஹைஸ்கூலில் படிக்கும்போது நீங்கள் எப்படி?**
ரஜினி:- பொறுக்கி
**கே:- திருட்டுத்தனமாக வேறுவிதமான புத்தகங்கள் படித்ததுண்டா?**
ரஜினி:- உண்டு
**கே:- படிக்கும்போது பொக்கெட் மணிக்கு என்ன செய்வீர்கள்?**
ரஜினி:- கேட்பேன். கொடுக்கலேன்னா திருடுவேன்.
**கே:- பள்ளிக்கு எப்படிச் செல்வீர்கள்? பஸ்ஸா? சைக்கிளா?**
ரஜினி:- நடந்து!
**கே:- நீங்கள் முதன் முதலாகப் பார்த்த வேலை?**
ரஜினி:- ஒஃபீஸ் பியூன்.
**கே:- முதலில் வாங்கிய சம்பளம்.**
ரஜினி:- மாதம் அறுபது ரூபாய்.
**கே:- முதல் சம்பளத்தில் பிரியமாக வாங்கிய பொருள்?**
ரஜினி:- சிகரெட் பாக்கெட்.
**கே:- நடத்துநராக இருந்தபோது பீடி பிடித்ததுண்டா?**
ரஜினி:- உண்டு.
**கே:- பயணிகளோடு சண்டைபோட்ட அனுபவம் ஏதாவது?**
ரஜினி:- நிறைய உண்டு. அது பற்றி தொடர் கதையே எழுதலாம்.
**கே:- ஏண்டா சென்னைக்கு வந்தோம் என்று எப்போதாவது தோன்றியதுண்டா?**
ரஜினி:- உண்டு. மதுவிலக்கு அமுலுக்கு வந்தபோது.
**கே:- கமல் நடித்த படங்களில் உங்களுக்குப் பிடித்தது?**
ரஜினி:- அபூர்வ ராகங்கள். புன்னகை மன்னன்.
**கே:- தாங்கமுடியாத பிரிவு?**
ரஜினி:- நடத்துநர் வேலையை விட்டது.
**கே:- செக்ஸ் பற்றி உங்கள் கண்ணோட்டம்?**
ரஜினி:- அது தெய்வீகம்.
**கே:- அதிகம் கோபம் வந்தால் என்ன செய்வீர்கள்?**
ரஜினி:- காரை எடுத்துக்கொண்டு வேகமாய் ஓட்டுவேன்.
**கே:-மாற்றிக்கொள்ள விரும்பாத குணம்?**
ரஜினி:- வெளிப்படையான பேச்சு.
**கே:- உங்கள் கனவில் எந்த நடிகையாவது வருவதுண்டா?**
ரஜினி:- இன்றுவரை இல்லை.

# "இந்தியனை இது மிஞ்சும்"

'அவ்வை சண்முகி' படத்தில் கமல் போட்டுள்ள மாமி வேஷத்தை சிவாஜி வெகுவாகப் பாராட்டி இருக்கிறார். கமலின் மனைவி சரிகாவிடம் கமலைப் பற்றி புகழ்ந்து; "இந்தியாவிலேயே நடிப்புக்காக தன்னை வருத்திக்கொள்ளும் நடிகன் உன் கணவன்தான். இந்தியன் மேக்-அப்பைவிட அவ்வை சண்முகி ஒரு படி மேல்" என்று மனம் திறந்து பாராட்டினாராம் சிவாஜி. "இந்தியாவில் மூன்று பேர் சிறந்த நடிகர்கள். அந்த மூவரில் கமலே சிறந்த நடிகர்" என்றும் கூறியுள்ளார் சிவாஜி.

மீனா, ஜெமினிகணேசன், நாகேஷ், மணிவண்ணன், எஸ்.பி.பாலசுப்பிரமணியம், ஹீரா, நாசர், டெல்லி கணேஷ் என்று ஒரு நட்சத்திரப் பட்டாளமே இருக்கிறது.

மாமி கமலுக்காக பெங்களூர் ரமணியம்மாள் குரலில் ஒரு பாடலைப் பாடிக் காட்டி படப்பிடிப்புக் குழுவினரையும், இயக்குநரையும் அசத்தினராம் கமல்.

இசை: தேவா, பாடல்கள் வாலி. இயக்கம்: கே.எஸ்.ரவிக்குமார். கதைவசனம்: கிரேசி மோகன்.

## ராமராஜனுடன் தேவயாணி

ராமராஜன்-சங்கீதா நடித்து வெற்றி பெற்றபடம் 'அம்மன் கோவில் வாசலிலே.' குறைந்த செலவில் போதியலாபம் கிடைத்த படம். எனவே அந்தப் படத்தை தயாரித்த நிறுவனம் தமது புதிய படத்திலும் ராமராஜனை நடிக்க வைத்துள்ளது. கதை, திரைக்கதை எழுதி படத்தை இயக்கும் பொறுப்பையும் ராமராஜனிடமே ஒப்படைத்துள்ளது.


படத்திற்கு 'விவசாயி மகன்' என்று பெயர் சூட்டியுள்ளனர். 'காதல் கோட்டை' படத்தின் பின்னர் பிரபலமாகிவிட்டவர் தேவயாணி. அவர்தான் ராமராஜனுக்கு ஜோடியாக நடிக்கிறார். கே.ஆர்.விஜயா, காந்திமதி, ராஜீவ் ஆகியோரும் நடிக்கின்றனர். இசை: சிற்பி.

## புதிய நட்சத்திர அலை

பெரிய நடிகர்கள் நடித்த படங்கள் எதுவும் சமீபகாலமாகச் சரியாகவே ஓடவில்லை. கையைச் சுட்டுக்கொண்ட தயாரிப்பாளர்களின் பார்வை புதிய நட்சத்திரங்கள்மீது திரும்பியிருக்கிறது.

அஜித்குமார், அப்பாஸ், விஜய், மூவரும் படு பிஸியாக இருக்கிறார்கள். மூவரும் தலா அரைடஜன் படங்களை கையில் வைத்திருக்கிறார்கள்.

இன்னொரு ஆச்சரியமான செய்தி. 'இந்தியன்' படம் வெற்றிப்படம்தான். ஆனாலும் செலவுகளோடு ஒப்பிட்டால் 'இந்தியன்' படத்தைவிட 'காதல் கோட்டை' படத்தயாரிப்பாளர்தான் சுளையாக லாபம் சம்பாதித்திருக்கிறார். அதுதான் அஜித்குமார் போன்ற புதிய நட்சத்திரங்களின் மவுசு உயர்ந்திருக்கிறது.



விஜயகாந்த்-சங்கீதா
படம்: அலெக்ஸாண்டர்

## தீபாவளி வெளியீடு

கார்த்திக் நடித்து தீபாவளி வெளியீடாக வரப்போகும் படம் கோகுலத்தில் சீதை. கார்த்திக் ஜோடிகளாக சுவலட்சுமியும், சொர்ணாவும் நடிக்கின்றனர்.

'கோகுலத்தில் சீதை' படத்துக்கு பலத்த எதிர்பார்ப்பு இருக்கிறது. எதிர்பார்ப்புக்கு காரணம் படத்தை இயக்குவது அகத்தியன். 'காதல் கோட்டை' பட இயக்குநர்தான் அகத்தியன். எதிர்பார்ப்புக்கு ஏற்ப அமையவேண்டுமே என்று பம்பரமாகச் சுழன்று கொண்டிருக்கிறார் அகத்தியன்.

## 'கல்கி' நாயகி

கன்னடப்பட உலகில் தற்போது நம்பர் வன் இடத்தில் இருப்பவர் சுருதி.

தமிழில் பாலசந்தர் இயக்கும் 'கல்கி' படம்மூலம் தமிழ் பட ரசிகர்களையும் கவரவருகிறார் சுருதி.

கன்னடத்தில் நம்பர்வன் இடத்தில் இருந்தவர் மாலாஸ்ரீ. அவரைத்தான் ஓரம் கட்டினார் சுருதி. தமிழில் யாரை ஓரம் கட்டப்போகிறாரோ?

## குஷ்பு உண்ணாவிரதம்

'கோபாலா, கோபாலா' படத்தில் மீண்டும் முடிந்தளவுக்கு கவர்ச்சி காட்டியிருக்கிறார் குஷ்பு. அதற்காகவே உண்ணாவிரதம் இருந்து உடலை மெலித்தாராம். குஷ்பு உண்ணாமல் இருந்தபோது பாவம் சுந்தர்தான் உருகிப்போனாராம்.

எக்கச்சக்கமான படங்கள் குஷ்புவின் கையில். குஷ்புவோடு நடிக்க வந்தவர்கள் பலர் காணாமல் போய்விட்டார்கள். குஷ்பு மட்டும் தொடர்ந்து நடித்துக் கொண்டிருக்கிறார். குஷ்பு என்றால் குஷ்புதானுங்க.

## சினிவிசிட்



அஜித்குமார்
படம் உல்லாசம்

ரோமா ராம்கி ஊர்வசி
படம்:- மகான்



பிரசாந்த்-சங்கவி
படம்: மன்னவா

## ...மோ நஷ்டம்

...டித்தால் படம் பிய்த்துக்கொண்டு ஓடும் ...வில் தயாரிக்கப்பட்ட படம் மாணிக்கம். கதை ...தால் படம் வெளியாகிப் படுத்துவிட்டது. ...பாளருக்கு நஷ்டம் 90 இலட்சம் ரூபாய்கள். ...ர்ஜுன் நடித்த 'சுபாஷ்' படமும் தயாரிப்புச் ...யவில்லை. அதனால் 40 இலட்சம் ரூபாய் ...நர் ஆர்.வி.உதயகுமாருக்கும் அர்ஜுனுக்கும் ...ரச்சனைகளால் படம் நீண்டநாள் தயாரிப்பில் ...திற்கு காரணமாம்.

## ...மான கதை

...கன் இரண்டு கதாநாயகிகள் நடிக்கும் ...கிவருகின்றன. அதன் இரகசியத்தை போட்டு ...ஒரு கதாசிரியர்.

...கன் இரண்டு கதாநாயகிகள் என்றால் ...லை. கதாநாயகனைக் கைக்குள் போடுவதற்கு ...யாளும் விந்தைகளை காட்டியே படத்தை ... கவர்ச்சியையும் கதையோடு ஒட்டியதாய் ... குழுவின் கண்களிலும் மண்ணைத்தூவி ...ட்டு. நாலு சண்டை ரசிகர்களுக்கு அல்வா ...ரிதர். கில்லாடிகள்தான்.

## கதாநாயகி வேட்டை

'ஜீன்ஸ்' என்றால் இரட்டையர்களைக் குறிக்கிறது. 'ஜீன்ஸ்' படத்தில் பிரசாந்த் இரட்டை வேடத்தில் நடிக்கிறார். கதை ரெடி. கதாநாயகன் ரெடி. கதாநாயகிமட்டும் இன்னமும் கிடைக்கவில்லை. இயக்குநர் ஷங்கர் மும்பாய்போயிருக்கிறார். கதாநாயகி வேட்டை நடக்கிறது.

## பெயர் மாற்றம்

பாலுமகேந்திராவின் இயக்கத்தில் மத ஒற்றுமைக் கருத்துள்ள படமாக வளரும் படம் 'அப்துல்ராமன்'. இப்பெயர் தாம் நினைத்த கருத்தை சரியாக வெளிப்படுத்தவில்லை என்று நினைத்தார் பாலுமகேந்திரா. அதனால் படத்தின் பெயரை, ராமன் அப்துல்லா என்று மாற்றிவிட்டார்.


படிப்பகம்

www.padippakam.com

# அழகன் – அழகன் ஆண் அழகன்
## இது ஓர் ஆடவர் ஸ்பெஷல்

ஆண, பெண் இருபாலாருக்கும் தலையில் பல மில்லியன் கணக்கில் முடிகள் இருக்கின்றன. இதில் நாளொன்றுக்கு 80ல் இருந்து 100 முடிகள் வரை உதிரும்-வளரும்; இதற்காகக் கவலை தேவையில்லை.

ஆண்களைப் பொறுத்தமட்டில், தலைமுடியில் அவர்கள் அதிக கவனம் செலுத்துவதில்லை. சிறுவயது முதலே தலைமுடியைப் பராமரிப்பதில் தனிக்கவனம் செலுத்த வேண்டும்.

வாரம் இருமுறை எண்ணெய் தேய்த்துக் குளிக்கலாம். தினமும் சிறிதளவாவது தலைக்கு ஏதாவது ஒரு எண்ணெய் தடவி வர வேண்டும். குறிப்பாகத் தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய் அல்லது மூலிகை எண்ணெய்களையும் தடவி வரலாம். உடல் குளிர்ச்சியுள்ளவர்கள் மூலிகை எண்ணெயைப் பயன்படுத்த வேண்டாம். அவர்கள் தேங்காய் எண்ணெயை மட்டும் பயன்படுத்தினாலே போதும்.

இந்தக் காலத்தில் சிலர், "பத்து வருடங்களாக நான் தலைக்கு எண்ணெய் தேய்ப்பதில்லை. என் முடி நன்றாக இருக்கிறது," என்பார்கள். அது காலப்போக்கில் சிரமத்தைக் கொடுக்கும். உடலை விட நமது தலை எப்போதும் சூடாக இருக்கும். அதைக் குளிர்ச்சியாக வைத்துக் கொள்ள எண்ணெய்



தடவுவது அவசியம்.

தலைக்குக் குளிக்கும் போது சீயக்காய், வெந்தயம் போன்றவற்றைப் பயன்படுத்த வேண்டும். ஷம்பு உபயோகிப்பவர்கள் கெமிக்கல் குறைவான அளவு இருப்பதையே பயன்படுத்த வேண்டும். அதையும் ஒரு கப் தண்ணீரில் நன்றாக நுரை வரும் வரை கலக்கி வைத்துக்கொண்டு இருமுறை தேய்த்துக் குளித்தால் தலைமுடி சுத்தமாகும்.

சிலருக்கு இளம் வயதிலேயே முடி நரைத்துக் காணப்படும். இதற்குப் பல காரணங்கள் உண்டு. பரம்பரை காரணமாகச் சிலருக்கு நரை முடி வரலாம். கல்லீரல் கோளாறு இருப்பவர்களுக்கு இளம் வயதிலேயே பித்த நரை விழும். இரும்புச் சத்துக் குறைவாக இருந்தாலும் விட்டமின் 'பி' கொம்பிளெக்ஸ் சத்துக்குறைவாக இருந்தாலும் ஒரு சிலருக்கு நரை முடி தோன்றும். டென்ஷன் அதிகமாக இருந்தாலும் விரைவில் முடி நரைத்து விடும்.

இப்படிப்பட்டவர்கள் பித்த உணவுப் பதார்த்தங்களை, எளிதில் சமிபாடடைய இயலாத கடின உணவு வகைகளைத் தவிர்க்க வேண்டும். மனதை எப்போதும் இயல்பாக வைத்துக் கொள்ள வேண்டும்.

தலைமுடியையும், முகத்தையும் நாம் நல்ல முறையில் பராமரிக்காவிட்டால், ஒருவித அழகற்ற தோற்றம் ஏற்பட்டுப் பார்ப்பவர்களை அருவருப்படையச் செய்யும். எனவே ஆண்டவன் நமக்கு அளித்த அழகை நாம் போற்றிப் பாதுகாத்தல் அவசியமாகும்.

அதிக கெமிக்கல் கலந்த முடிச்சாயம் (HAIR DYE) உபயோகிக்கக் கூடாது. எந்த எண்ணெய் தேய்த்தாலும் அதை லேசாகச் சூடு பண்ணித் தேய்ப்பது நல்லது. வாரம் மூன்று முறை தலைக்கு சீயக்காய், வெந்தயம் அல்லது ஷம்பு வைத்து சுத்தம் செய்து வந்தால் நல்லது.

# இனியது- இனியது இல்லம்
## இல்லம் சிறப்பாக அரிய யோசனைகள்

✪ இல்லம் எந்த அளவில் இருந்தாலும் சரி, நுழைவாயில்ல் கட்டாயம் ஒரு மிதியடி போட வேண்டும். மேலும் அதில் தலைமுடி, நூல் போன்ற சிறுசிறு குப்பைகளைச் சேர விடாமல் அடிக்கடி சுத்தப்படுத்த வேண்டும்.

✪ வரவேற்பு அறையில் உள்ள சோபா செட்களில் கீறல் விழுந்தால் ஏறத்தாழ அதே நிறமுள்ள உதட்டுச் சாயத்தைத் தேய்த்து, ஒரு துணியால் துடைத்தால் கீறல் மறைந்து விடும்.

✪ தொலைபேசியைத் துடைக்கும் போது, ஒரு சிறுதுண்டு பஞ்சில் சிறிது வாசனைத் திரவியத்தை நனைத்துத் துடைத்தால் தொலைபேசி என்ன- அந்த அறையே மணம் வீசும்.

✪ வரவேற்பு அறையை அலங்காரமாக வைத்திருக்க வேண்டும் என்பது அனைவருக்கும் விருப்பமே. ஆனால் இது அனைவராலும் முடியாத ஒன்று. ஆதலால் கூடிய வரையில் அநாவசியமான பொருட்களைச் சேர்க்காமல், சுத்தமாக வைத்திருப்பதும் ஒருவித அழகுதான்.

✪ வீட்டிலுள்ள வெண்கலம், பித்தளை மற்றும் செப்புப் பாத்திரங்களை எலுமிச்சம் பழத் தோலைக் கொண்டு துலக்கினால் பளபளவென்று மின்னும்.

✪ வீட்டை 15 நாட்களுக்கு ஒருமுறை சுத்தப்படுத்தினால், குப்பை அதிகம் சேர்ந்து வேலைப்பளு நம்மை அழுத்தாது.

✪ 10-15 வருடங்களுக்கு ஒருமுறையாவது வீட்டில் நாம் உபயோகிக்காத பொருட்களைத் தேவையானவர்களுக்கு தானமாகவோ, விலைக்கோ கொடுத்துவிட்டால் வீட்டில் அநாவசியமான சாமான்கள் சேர்வதைத் தவிர்க்கலாம்.

✪ ஒரு வீடு என்பது அனைவருக்கும் பொதுவான ஒன்று. ஆதலால் வீட்டின் அங்கத்தினர்கள் அனைவரும் இது நம்வீடு என்ற உணர்வோடு ஒரு ஈடுபாட்டுடன் வீட்டைச் சுத்தமாக வைத்திருக்க உதவ வேண்டும்.

✪ வீட்டில் உள்ள மரச்சாமான்களின் மேல் தூசிபடியாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். தூசிப்படலம், மரச்சாமான்களின் மேல் உள்ள பொலிஷை மங்க வைத்து விடும்.

✪ ரப்பர் பாண்டுகளை வைத்திருக்கும் டப்பாவில் சிறிது டல்கம் பவுடரைத் தூவி வைத்தால், அவை ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்ளாது.

✪ பொலிஷ் செய்யப்பட்ட மரச்சாமான்களின் மேல் உள்ள கறைகளை 1/2 லிட்டர் இளஞ்சூடான தண்ணீரில் 2 மேசைக்கரண்டி வினிகரைக் கலந்து துடைத்தால் மறைந்து விடும்.

✪ பிரம்பு நாற்காலிகள் தொய்ந்து போகாமல் இருக்க, முதலில் சிறிது சோப்பு நீரால் நன்கு துடைத்து, பிறகு இளஞ்சூடான உப்பு நீரால் துடைத்து, வெயிலில் காயவைத்தால் பழைய வடிவத்திற்கு வந்துவிடும்.

# "'கற்பழிப்பு' என்பது கண்டிக்கப்பட வேண்டிய வார்த்தை"

'கற்பு-கற்பழிப்பு'

இந்த வார்த்தைகள் சம்பந்தா சம்பந்தம் இல்லாத இடங்களில் எல்லாம் பாவிக்கப்பட்டு தம் கற்பை இழந்துகொண்டிருக்கின்றன.

கற்பழிப்பு என்ற வார்த்தை பத்திரிகையாளர்களுக்கு மிகப் பிடித்தமான ஒரு வார்த்தையாகிவிட்டது.

பொருள் புரியாமல், அர்த்தம் தெரியாமல் பிரயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

முதலில் கற்பு என்றால் என்ன? அது பெண் உறுப்பு சம்பந்தப்பட்ட ஒரு விடயமாகவே விளங்கிக் கொள்ளப்படுகிறது.

"கற்பு என்பதை ஆணுக்கும், பெண்ணுக்கும் பொதுவில் வைப்போம்" என்றார்



பாரதியார்.

கற்பு என்பது மனது சம்பந்தப்பட்டது. ஆணும், பெண்ணும் ஒருவருக்கொருவர் துரோகம் செய்யாமல், ஒருவருக்கொருவர் விசுவாசமாக வாழ்வது குடும்ப வாழ்வில் கற்பு எனப்படலாம்.

யாருடைய கற்பையும் யாரும் அழிக்க முடியாது. அவரவர்கள் தாமாக அழித்துக் கொண்டால்தான் சாத்தியம்.

தற்போது யாழ் குடாநாட்டில் பெண்கள் காணாமல் போயுள்ளனர். பாலியல் பலாத்காரத்துக்கும் உள்ளாகியுள்ளனர்.

ஆனால் பத்திரிகைகளோ குறிப்பிட்ட பெண்கள் கற்பழிக்கப்பட்டதாக செய்தி வெளியிடுகின்றன.

கற்பு புனிதமானது எனில், பலாத்காரமாக பலப்பிரயோகம் மூலமாக உறவு கொள்ளப்பட்ட அப்பாவி பெண்கள் புனிதம் கெட்டவர்கள் என்று அர்த்தமா? அவர்களுக்கு இனி கற்பே இல்லையா? என்ன கொடுமை ஐயா இது? அப்பாவிப் பெண்களை பாலியல் வதை செய்த கொடியவர்களைவிட, அவர்கள் கற்பிழந்தனர், கற்பு அழிக்கப்பட்டனர் என்று கூறுவதுதான் அதைவிடக் கொடுமை.

அது மட்டுமா? இப்படியும் ஒரு செய்தி: "அப்பெண்ணைப் பல தடவைகள் கற்பழித்தனர்!"

எதையும் ஒரு தடவைதானே அழிக்க முடியும்? அதென்ன பல தடவை கற்பை அழிப்பது?

தவறு ஐயா தவறு! எங்கள் பெண்கள் கற்போடுதான் உள்ளனர்.

அவர்களில் சிலர் காமப்பசிக்கு பலாத்காரமாக இரையாக்கப்படலாம். அதற்கு அவர்கள் கற்பிழந்தனர் என்று அர்த்தம் அல்ல.

எங்கள் பெண்களின் கற்பை மட்டுமல்ல எந்தப் பெண்ணின் கற்பையும் எவரும் அழிக்க முடியாது.

வியட்நாமில் அமெரிக்கப் படைகள் வியட்நாம் பெண்களை பாலியல் பலாத்காரம் செய்தன. அதன் அர்த்தம் அந்த வியட்நாம் பெண்கள் கற்பை இழந்தனர் என்பதல்ல.

யாழ் குடாநாட்டில் கிருஷாந்தி,ராஜினி என்னும் பெண்கள் பாலியல் வதையால் உயிரிழந்தனர். கற்போடுதான் மடிந்தனர். மனதளவில் சபலம் உள்ளவர்களாக இருந்திருந்தால் பலாத்காரம் செய்யப்படும் தேவையே இருந்திருக்காது அல்லவா?

எனவே பத்திரிகையாளர்களே! தயவு செய்து பிரயோகிக்க சுலபமான வார்த்தை என்பதற்காக பெண்களை கற்பிழந்தவராக்காதீர்.

விடுதலைப் புலிகளின் பத்திரிகைகள் மற்றும் வன்னியிலிருந்து வெளிவரும் ஈழநாதம் போன்ற பத்திரிகைகளில் 'பாலியல் பலாத்காரம்' என்ற வார்த்தைகள்தான் பயன்படுத்தப்படுகின்றன.

ஏனைய தமிழ் பத்திரிகைகளும் அதனைப் பின்பற்றினால் என்ன?

முதலில் முரசாவது இதனைக் கருத்தில் கொள்ளவேண்டும். கொள்ளுமா?

-பவானி சங்கர், கொழும்பு-6.

**ஆசிரியர் குறிப்பு:-** தங்கள் கருத்து மிகவும் சரியானதே. முரசும் கற்பழிப்பு என்ற பதப் பிரயோகத்தை பாவிப்பதில்லை. ஒரே ஒரு தடவை மட்டும் அப்பிரயோகம் ஒரு செய்தியில் இடம்பெற்றுவிட்டது. அதற்காக வருந்துகிறோம்.

# வேலஸ் ஸ்பெஷல்
## கிரிக்கெட் உலகில்
## பெண்களின் சாதனை

'கிரிக்கெட் விளையாட்டுக்குத்தான் இப்போது பயங்கரமான மவுசு. கிரிக்கெட் நட்சத்திரங்களுக்கும் அமர்க்களமான வரவேற்பு. கிரிக்கெட் போட்டிகளைக் காண ஆண்கள் மட்டுமே படையெடுத்தகாலம் மலையேறிவிட்டது. பெண் இரசிகைகளும் நேரடியாகவே சென்று உற்சாகத்தில் துள்ளிக் குதிக்கிறார்கள்.

ஆண்கள் பங்குகொள்ளும் 'கிரிக்கெட்' போட்டிகளே பிரபலமாக இருந்தாலும், பெண்களுக்கான பெண்கள் விளையாடும் 'கிரிக்கெட்' போட்டிகளும் அதிக சத்தமில்லாமல் வளர்ந்துவருகின்றன. போதிய ஊக்குவிப்பும், விளம்பரங்களும் இல்லாமையால் 'பெண்கள் கிரிக்கெட்' பிரபலமாகவில்லை.

பெண்களும் 'கிரிக்கெட்' சாதனைகளைப் படைப்பதில் சளைத்தவர்களல்ல. இந்தப் பட்டியலைப் பாருங்கள் தெரியும். 'பெண்கள் கிரிக்கெட்' போட்டிகளின் சாதனைகள் மட்டுமே இவை.

### டெஸ்ட் போட்டிகள்

ஒரு இன்னிங்சில் 204 ஓட்டங்களை பெற்று சாதனை படைத்த வீராங்கனையின் பெயர் கேஸ்டி ஃபிளேவெல். இவர் நியுஸிலாந்து அணியைச் சேர்ந்தவர். இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்டில் 1996 பெப்ரவரி 22ல் வெளுத்துவாங்கினார்.

டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்களை பெற்றிருப்பவர் ரக்கல் ஃபிளின்ட். இங்கிலாந்துப் புயல். 1960 முதல் 1979 வரை மொத்தம் 22 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 1594 ஓட்டங்களை சேகரித்துள்ளார். இந்தப் புயலின் சராசரி ஓட்டம் 45.54.

டெஸ்ட் போட்டியில் அதிக ஓட்டங்களைக் குவித்து பிரமிக்க வைத்த அணியென்ற பெருமையை அவுஸ்திரேலிய அணி பெறுகிறது. இந்திய அணிக்கெதிராக 1984ம் ஆண்டு அகமதாபாத்தில் நடைபெற்ற போட்டியில் அவுஸ்திரேலிய அணி பெற்ற ஓட்டங்கள் 525.

டெஸ்ட் போட்டியில் ஆகக் குறைந்த ஓட்டங்கள் பெற்று பரிதாபமாகச் சுருண்டு அனுதாபவாக்கைப் பெறுவது இங்கிலாந்து அணி. 1958ல் அவுஸ்திரேலிய அணியை எதிர்த்தாடிய இங்கிலாந்து அணி மொத்தமாக எடுத்த ஓட்டங்கள் ஆக 35.

அந்தப் போட்டியில் இங்கிலாந்து அணி பரிதாபமாகச் சுருண்டபோதும், சந்தோசப்படக்கூடிய ஒரு சமாச்சாரமும் நடந்தது. அவுஸ்திரேலிய அணியை தனது பந்து வீச்சால் கிடுகிடுக்க வைத்தார் இங்கிலாந்து வீராங்கனை மேரி பிட்ரைஸ். ஆறு ஓட்டங்களை மட்டுமே கொடுத்து ஏழு விக்கெட்டுக்களை மளமளவென்று சரித்தும் போட்டுவிட்டார். இதுவரை முறியடிக்கப்படாத சாதனை அது.

டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியவரும் மேரி பிட்ரைஸ்தான். 1949 முதல் 1963 வரை 17 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 77 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

அவுஸ்திரேலிய வீராங்கனையான பெட்டி வில்சன் ஒரு சகலகலாவல்லி. கின்னஸில் இவரது படமே இடம் பெற்றுள்ளது. டெஸ்ட் போட்டி ஒன்றில் 10 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். அதே போட்டியில் செஞ்சரி போட்டும் அசத்தினார். இங்கிலாந்துக்கு எதிராக 1958ல் நடைபெற்ற போட்டியில் இச்சாதனை படைக்கப்பட்டது.



பெட்டி வில்சன்

### ஒருநாள் போட்டிகள்

பெண்களுக்கான சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் இதுவரை ஐந்து தடவைகள் நடைபெற்றுள்ளன. 1973, 1978, 1982, 1988, 1993 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்றன.

1973, 1993 ஆகிய ஆண்டுகளில் இங்கிலாந்து அணியும், ஏனைய மூன்று போட்டிகளில் அவுஸ்திரேலிய அணியும் வெற்றிபெற்றன.

சர்வதேச ஒருநாள் போட்டிகளில் அதிக ஓட்டங்களைக் குவித்தவர் லின்சே றீலர். இவர் ஒரு அவுஸ்திரேலியப் புயல். 1988 நவம்பரில் நெதர்லாந்து அணிக்கெதிராக ஆட்டமிழக்காமல் 143 ஓட்டங்களைக் குவித்தார்.

அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியவர் அவுஸ்திரேலிய வீராங்கனை லின் ஃபுல்ஸ்டன். மொத்தம் 39 விக்கெட்டுக்களை சாய்த்துள்ளார்.

நம்நாட்டில் பெண்கள் பாடசாலைகள் பலவற்றில் கிரிக்கெட் விளையாட்டில் பெண்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். ஊக்கம் கொடுத்தால் நம் பெண்களும் அசத்து வார்கள்.

## சமைப்போம் சுவைப்போம்
### தொகுத்துத் தருவது சுகந்தினி

### பாசிப்பயறு சுண்டல்

**தேவையானவை:**

பாசிப்பயறு - 200 கிராம்
தேங்காய்த் துருவல் - 4 கரண்டி
கடுகு - 1 கரண்டி
பச்சை மிளகாய் - 4
வெங்காயம் - 1
உளுத்தம் பருப்பு - 1 கரண்டி
பெருங்காயம் - சிறு துண்டு
உப்பு, எண்ணெய் - தேவையான அளவு.

**செய்முறை:**

பாசிப்பயறைத் தண்ணீரில் ஊறவைத்து வடிகட்டி வேகவைக்கவும். வாணலியில் எண்ணெய்விட்டு கடுகு, உளுத்தம்பருப்பு சேர்த்துத் தாளித்துப் பெருங்காயம் சேர்த்து வெந்த பயறு, வதக்கிய வெங்காயம், பச்சைமிளகாய், தேங்காய்த் துருவல், உப்பு சேர்த்துக் கிளறி இறக்கவேண்டும்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்
## மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** AO

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

கையொப்பம்:..............................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 09-11-1996
அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## கம்பளை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

**செல்வி ஆர். குசலகுமாரி**
**இல-65, பள்ளேவளை, கம்பளை.**

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசகவாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# இதைக் கொஞ்சம் கேளுங்கள்

முதலிரவில் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று ஒரு அமெரிக்க மனோதத்துவ டாக்டர் யோசனை சொல்லியிருக்கிறார்.

சில ஆண்கள் எடுத்த எடுப்பில் முரட்டுத்தனமாக நடக்க ஆரம்பித்து விடுகிறார்கள். அதனால் பெண் பயந்து நடுங்கி தாம்பத்திய வாழ்வின் மீதே வெறுப்புக் கொள்ளவும் தொடங்கிவிடுகிறாள்.

இதனை பெண் நினைத்தால் வென்றுவிடலாம். முன் ஜாக்கிரதையாக இருந்தால்போதும் என்கிறார் அந்த மனோதத்துவ டாக்டர். அது என்ன முன்ஜாக்கிரதை?



புன்னகையுடன் கணவருடன் பேசத் தொடங்குங்கள். திருமண நிகழ்ச்சிகளைப் பற்றி பேசுங்கள். நண்பர்கள் உறவினர்கள் பற்றிப் பேசுங்கள். அதன் மூலம் நிதானமும் இயல்பான மனநிலையும் ஏற்படச் செய்யுங்கள். பின்னர் என்ன சந்தோசத் திருவிழாதான் என்கிறார் அந்த டாக்டர். நல்ல யோசனைதானே!



படிப்பகம்

www.padippakam.com

# உறவாடும் உரையாடல்

**மலர்:-**
என்னைப் போல்
இருக்கிறாய்....
நீயும்
மலரா?

**விழி:-**
உன்னை
தொடாமலே...
என் மேனி
உன்னில்
படாமலே....
உன்னைப் பருகும்
வண்டு நான்!
**

**உயிர்:-**
நீ
என்னை சுவாசிக்கும்
அரக்கன்!

**போர்:-**
தெரிந்துகொள்!
மரணங்கள்
என் உணவு;
அழிவுகள்
நான் நேசிக்கும்
உணர்வு!
**

**இதழ்:-**
நான்
முத்தமிடும் போது
உன்முகம்
சிவக்கிறதே...
நாணமா?
காமமா?

**சிகரட்:-**
உன்
உயிர் சிந்தும்
இரத்தத்துளி
நான்!
அதுவா
என்
சிரிப்பு...?
ரசிப்பு!
**

**துப்பாக்கி:-**
நான்
புறப்படவேண்டும்:
என்னை
வழியனுப்பி வை!

**சுண்டுவிரல்:-**
நீ புயலைவிட
பலமானவன்:
பூகம்பத்தைப் போல்
கொடியவன்...!
பேசாமல்
மூலையில் கிட!
**

**விரல்கள்:-**
உன்னை
பலாத்காரப் படுத்தும்போது
காகிதத்திடம்
முறையிடுகிறாயே...!
காகிதம்
உன் காவலனா?

**பேனா:-**
காகிதம்
என் காதலன்!
நான்
என்னை இழந்து
மோட்சமடைவது
அவனால்தான்!
**

**மழை:-**
நான்
முத்தமிட்டதும்
எட்டியெட்டி
பார்க்கிறாயே...!
யார் நீ?

**விதை:-**
உறக்கம்
கலைந்தவன்-
உன்
முத்தம்பட்டு,
என்னால்தான்
உனக்கு
இங்கே மரியாதை!
**

**நினைவு:-**
நீ
என் தாய்!
பேயும் நீயே!

**இதயம்:-**
நான் வானம்:
வர்ணவில் நீ!
உன்னை
உருவாக்கும்
அற்புதக்கிணறும்
நான்தான்!
**

**காது:-**
கடல்
நதியைத்தேடி
வந்தால்
என்னை நான்
இழந்தேன்!

**இசை:-**
காற்று
என்வில்!
நான்
அம்பு!
என்குறி
நீதானே!

நிந்ததாசன்.

# சாமத்தால் ஒரு விதிசெய்து....!

மேற்கு சிவக்கும்
அந்திம நேரத்தில்-
யாரோ அவிழ்த்துப் போட்டிருப்பார்கள்
உன் தாவணியை-
அடிவானக் கரையில்...!
▫▫
அந்த அஸ்தமனத்தில்
மெல்லியதாய் இருட்டுக் கசியும்;
என் மனசுக்குள்ளும்
உன் நினைவு வெள்ளியொன்று
பூக்கும்.
▫▫
நான் பேனாவை எடுத்து
கவிதை எழுத
உன் நினைவை
யாசிப்பேன்.
▫▫
மலைமுகடுகளின் பின்னாலோ
களப்புக்கட்டு சேற்றுக்குள்ளோ
அந்த சூரியன் விழுந்து
புதைந்து போகலாம்.
▫▫
ஆனாலும்....
வெட்ட வெட்ட முளைக்கும்
நகம் மாதிரி-
அந்த சூரியன்
நாளைக்கும் உதிக்கும்.
▫▫
இப்படித்தான்
உன் நினைவும்;
புரிகிறதா-
உன் முற்றத்து தென்றலின் வாசம்...?
▫▫
ஒளியில் இருக்கும் வரை
ஒரு 'அஸ்தமனத்தின் அர்த்தம்'
புரியவில்லைதான்...!
▫▫
ஒரு உதிர்வில்தானே
ஒரு உதிப்பும் இருக்கிறது!
நிலா எரிய வேண்டுமானால்
அந்த சூரியன்-
அணைந்துதானே ஆகவேண்டும்...!
▫▫
விடை கொடு காதலி!
என் வாலிபத்துக்குள்
நான் இறந்து போய்,
ஒரு வயோதிபனாய்
பிறக்க வேண்டும்-
நிறைய அனுபவங்களுடன்...!

சிந்தனைப் பித்தன் – பொத்துவில்-02.

# மனசு!

உச்சாணிக் கொப்பில்
சிக்கிய பட்டமாய்க்
கிழிந்து தொங்கியது மனசு!
0–0
யாருக்கும் தெரியாமல்
தூக்கிட்டு மரணித்த
சில்க் சுமிதா போல்
பரிதாபமாய் கிடந்தது!
0–0
ஷெல்லடி பட்டிருந்தால்கூட
இத்தனை வலி இருந்திருக்காது;
அத்தனை சிக்கல்கள்...!
அத்தனை குழப்பங்கள்...!
0–0
மறுபடி மறுபடி–மனிதன்
சோகச் சேற்றிற்குள்
எருமையாய்க் கிடப்பதற்கு
இந்த மனசுதானே காரணம்?
0–0
மனிதராய்ப் பிறந்த எம்மை
குரங்குகளாய் மாற்றியது
இந்த மனசுதான்!
இல்லையேல், நீகூட
இன்று ஒரு மனசுள்ள
மனிதனாய் இருந்திருப்பாய்!!

எம்.க.ரேஷ்.

# தேன் கிண்ணம்

# முகங்களுள்ளவர் யார்?

மனிதர்களுக்கு முகங்களிருப்பதாய்,
யார் சொன்னது?
சொன்னவனை இழுத்து வாருங்கள்,
அவனை நான் பார்க்க வேண்டும்.
***
உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கும்,
அந்த வட்ட வடிவ,
தசைப்பிண்டம் முகமேயல்ல.
***
சோகங்களைச் சுமந்து,
நெஞ்சு கனத்துப் போகும்போது,
அது ஒரு பாறை.
***
அடுத்தவனின்
திண்டாட்டம் கண்டு
மகிழ்ச்சிகாணும்போது,
அது பேய்க் குகை.
***
பொதுச் சொத்துக்களை,
சுருட்டிவிட்டு,
இறுமாந்திருக்கும்போது,
பதுங்கு குழியாகும்.
***
யாருக்காவது முகமிருந்தால்,
எனக்குக் காட்டுங்கள்;
பாசிச் சாயத்தாள்கள் கொண்டு,
நான் பரிசோதனை செய்ய வேண்டும்!
***

சம்மாந்துறை மஷூறா.

யார் அந்த
பழைய கணங்களை
மீண்டும் தருவார்?
மீட்டுத் தருவார்?
**
சின்ன வயதுக்
காதல் கதையை
எங்கே ஒளிப்பது?
எதனுள் வைப்பது?
**

புழுதி மண்ணில்
முழங்கால் தேய்த்து
எச்சில் தடவியது
எப்படி மறக்கும்?
**
அவள் தந்த
தேரடிப் பொங்கல்
தொண்டையில் நிற்கும்.
இனி யார் தருவார்?
**

காதலிகைகளை
விரல்களால் அழுத்தி
விடை பெற்றதை
எதனால் அழிப்பது?
**
போர்கள் ஓய்ந்து
பாட்டுகள் கேட்கையில்
நீயிருப்பாயா?
நான் இருப்பேனா?
**

"நாடு மட்டும்
தனித்திருக்கும்!"
**
சுபா வரன், கண்டி.

# குட்டிக் கவிகள்

பொதிகையில்
பிறந்தவன் அகத்தியன்!
அகதி முகாமில்
பிறந்தவன் அகதியன்!
*

கறியோடு...
கலந்தது புளி?
கைதியோடு...
கலந்தது புலி!
*
தமிழினி...
மெல்லச் சாகும்!
"டமில்" இனி
நீண்டு வாழும்!
*

குமரியில்
கூந்தலில் "கருப்பூ"
கிழவியின்
கூந்தலில் "நரைப்பூ"!
*

சோ. ஸ்ரீதரன்,
பொகவந்தலாவை.

↓ சிவாஜிகணேசன் நடித்த நாடகங்களில் ஒன்று 'ஹாங்கீர்' அந்த நாடக ஒப்பனையோடு மனைவி கமலாவுடன் போஸ் கொடுக்கிறார். அது அந்தக் காலம். அடுத்த படத்தைப் பாருங்கள், சிவாஜியும் மனைவியும் சமீபத்தில் அமெரிக்கா சென்றார்கள் அல்லவா. அங்கு குதிரைச் சவாரி செய்து மகிழ்ந்தார் சிவாஜி. மனைவியோடு போஸ் கொடுக்கிறார். அந்தநாள் நினைவுகள் நெஞ்சில் நிழலாடியிருக்குமோ?





# அந்த நாள் ஞாபகம்





↑ ரஜினியின் மடியில் அமர்ந்திருக்கும் குழந்தையைப் பாருங்கள். இப்போது ரஜினிக்கே ஜோடியாக நடிக்குமளவுக்கு வளர்ந்துவிட்ட நடிகை தான் அது. யார் தெரிகிறதா? ரேஷ்மா. கிழக்கு முகம் படத்தில் கார்த்திக்கின் ஜோடியாக நடித்த ரேஷ்மாதான். நேற்று பேபி. இன்று ஜோடி.

↓ முழித்துப்பார்க்கும் இந்த பாப்பாக்களைப் பார்க்க நடிகை மோகினிக்கு வெட்கமாக இருக்கிறதாம். ஏன் தெரியுமோ? குட்டிப் பாப்பாக்கள் எல்லாமே மோகினியின் குழந்தைகள்... மன்னிக்கவும் மோகினியின் குழந்தைக்காலப் படங்கள்.









# இந்த வாரம் உங்கள் பலன்

(03.11.96 தொடக்கம் 09.11.96 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| துலாம் | - சூரியன், புதன். |
| தனு | - வியாழன். |
| கும்பம் | - சனி. |
| மீனம் | - கேது. |
| கன்னி | - வெள்ளி, இராகு, செவ்வாய். |

சுபநேரம் புதிய நேரப்படி கணிக்கப்படுகிறது

சந்திரன்- கடகம், சிம்மம், கன்னி ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- பிரயாணம், உறவினரால் கவலை. | பி.ப. 1.30 மணி |
| **திங்கள்**- புதிய முயற்சி, செலவு மிகுதி. | மு.ப. 9.30 மணி |
| **செவ்வாய்**- பயனுள்ள செயல், மன மகிழ்ச்சி. | பி.ப. 12.30 மணி |
| **புதன்**- பொருள் வரவு, மனக்குறை நீங்கும். | பகல் 10.30 மணி |
| **வியாழன்**- வெளியிட வாழ்க்கை, துயர் நீங்கும். | பி.ப. 2.30 மணி |
| **வெள்ளி**- இனசன நன்மை, தொழில் விருத்தி. | பகல் 11.30 மணி |
| **சனி**- அந்நியர் உதவி, தேகசுக நன்மை. | மு.ப. 9.30 மணி |

அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- முயற்சி பலிதம், பொருள் வரவு. | பி.ப. 12.30 மணி |
| **திங்கள்**- தொழில் விருத்தி, அந்நியர் உதவி. | மு.ப. 9.30 மணி |
| **செவ்வாய்**- இனசன நன்மை, கௌரவம். | பி.ப. 1.30 மணி |
| **புதன்**- உயர்ந்த நிலை, வெளியிட வாழ்க்கை. | மு.ப. 8.30 மணி |
| **வியாழன்**- பலவித பேறு, மன மகிழ்ச்சி. | பி.ப. 2.30 மணி |
| **வெள்ளி**- தொழில் மந்தம், கடன் தொல்லை. | பி.ப. 12.30 மணி |
| **சனி**- உறவினர் உதவி, தேகசுக நன்மை. | பகல் 11.30 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- பிரயாண மிகுதி, மன மகிழ்ச்சி. | மு.ப. 9.30 மணி |
| **திங்கள்**- உயர்ந்த நிலை, பெரியோர் உதவி. | பகல் 11.30 மணி |
| **செவ்வாய்**- காரியானுகூலம், பொருள் வரவு. | பி.ப. 1.30 மணி |
| **புதன்**- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பி.ப. 2.30 மணி |
| **வியாழன்**- புதிய முயற்சி, கௌரவ மிகுதி. | மு.ப. 1.30 மணி |
| **வெள்ளி**- பெரியோர் உதவி, முயற்சி பலிதம். | பி.ப. 12.30 மணி |
| **சனி**- தொழில் மந்தம், கடன் தொல்லை. | மு.ப. 8.30 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- செலவு மிகுதி, கடன் படல். | பி.ப. 1.30 மணி |
| **திங்கள்**- இனசன நன்மை, மனக்குறை நீங்கும். | பகல் 11.30 மணி |
| **செவ்வாய்**- பிரயாணக் கஷ்டம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 2.30 மணி |
| **புதன்**- மன மகிழ்ச்சி, பொருள் வரவு. | மு.ப. 9.30 மணி |
| **வியாழன்**- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பி.ப. 8.30 மணி |
| **வெள்ளி**- அந்நியர் சகவாசம், கௌரவக் கேடு. | பி.ப. 1.30 மணி |
| **சனி**- பொருள் வரவு, காரியானுகூலம். | பகல் 10.30 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- மன மகிழ்ச்சி, பொருள் பேறு. | பி.ப. 2.30 மணி |
| **திங்கள்**- தொழில் மந்தம், செலவு மிகுதி. | மு.ப. 9.30 மணி |
| **செவ்வாய்**- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பகல் 10.30 மணி |
| **புதன்**- இனசன நன்மை, தொழில் விருத்தி. | மு.ப. 8.30 மணி |
| **வியாழன்**- மனக்குறை நீங்கும், செய்தொழில் நன்மை. | பி.ப. 1.30 மணி |
| **வெள்ளி**- பயனுள்ள செயல், பெரியோர் உதவி. | பி.ப. 3.30 மணி |
| **சனி**- காரியானுகூலம், தொழில் உயர்ச்சி. | பகல் 10.30 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- உயர்ந்த நிலை, பெரியோர் நட்பு. | பி.ப. 2.30 மணி |
| **திங்கள்**- பயனுள்ள செயல், காரியசித்தி. | மு.ப. 9.30 மணி |
| **செவ்வாய்**- அந்நியர் நட்பு, தொழில் பேறு. | பி.ப. 1.30 மணி |
| **புதன்**- உறவினரால் தொல்லை, பணக் கஷ்டம். | மு.ப. 9.30 மணி |
| **வியாழன்**- மனக்குறை நீங்கும், வெளியிட வாழ்க்கை. | பி.ப. 2.30 மணி |
| **வெள்ளி**- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | மு.ப. 9.30 மணி |
| **சனி**- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பகல் 11.30 மணி |

அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- தொழில் உயர்ச்சி, பொருள் வரவு. | பி.ப. 3.30 மணி |
| **திங்கள்**- பலவித பேறு, காரியானுகூலம். | மு.ப. 9.30 மணி |
| **செவ்வாய்**- அந்நியர் பகை, செலவு மிகுதி. | பி.ப. 12.30 மணி |
| **புதன்** - முயற்சி பலிதம், குடும்ப நன்மை. | பகல் 11.30 மணி |
| **வியாழன்**- மன மகிழ்ச்சி, பொருள் வரவு. | பி.ப. 2.30 மணி |
| **வெள்ளி**- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | மு.ப. 9.30 மணி |
| **சனி**- உயர்ந்த நிலை, கௌரவம். | பகல் 11.30 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- கடன் தொல்லை, கௌரவக் குறைவு. | பி.ப. 12.30 மணி |
| **திங்கள்**- முயற்சி பலிதம், இனசன நன்மை. | மு.ப. 9.30 மணி |
| **செவ்வாய்**- தொழில் விருத்தி, பொருள் வரவு. | பி.ப. 2.30 மணி |
| **புதன்**- மனக்குறை நீங்கும், அந்நியர் உதவி. | மு.ப. 9.30 மணி |
| **வியாழன்**- புதிய முயற்சி, வெளியிட வாழ்க்கை. | பி.ப. 1.30 மணி |
| **வெள்ளி**- பிரயாண மிகுதி, உறவினர் உதவி. | பகல் 11.30 மணி |
| **சனி**- முயற்சித் தடை, மனக் கலக்கம். | பி.ப. 1.30 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | பி.ப. 1.30 மணி |
| **திங்கள்**- அந்நியர் உதவி, தொழில் சிறப்பு. | பி.ப. 3.30 மணி |
| **செவ்வாய்**- வெளியிடப் பயணம், உயர்ந்த நிலை. | மு.ப. 9.30 மணி |
| **புதன்**- பலவித பேறு, தொழில் நன்மை. | பி.ப. 2.30 மணி |
| **வியாழன்**- மனக்குறை நீங்கும், பண வரவு. | மு.ப. 8.30 மணி |
| **வெள்ளி**- உறவினர் உதவி, தொழில் சிறப்பு. | பி.ப. 12.30 மணி |
| **சனி**- காரிய நஷ்டம், மனக் கலக்கம். | பி.ப. 2.30 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் நட்பு, பண வரவு. | பி.ப. 2.30 மணி |
| **திங்கள்**- மனக்குறை நீங்கும், வெளியிட பயணம். | பகல் 11.30 மணி |
| **செவ்வாய்**- அந்நியர் நட்பு, காரிய சித்தி. | பி.ப. 1.30 மணி |
| **புதன்**- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பகல் 10.30 மணி |
| **வியாழன்**- கௌரவம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 1.30 மணி |
| **வெள்ளி**- காரியானுகூலம், தொழில் பேறு. | மு.ப. 9.30 மணி |
| **சனி**- பயனுள்ள செயல், பொருள் பேறு. | பி.ப. 1.30 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- தொழில் உயர்ச்சி, மனக் கலக்கம். | பி.ப. 12.30 மணி |
| **திங்கள்**- பலவித நன்மை, காரியானுகூலம். | மு.ப. 8.30 மணி |
| **செவ்வாய்**- உயர்ந்த நிலை, பொருள் வரவு. | பகல் 11.30 மணி |
| **புதன்**- காரியானுகூலம், பெரியோர் உதவி. | மு.ப. 9.30 மணி |
| **வியாழன்**- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 1.30 மணி |
| **வெள்ளி**- இனசன விரோதம், மனக்கவலை. | பி.ப. 2.30 மணி |
| **சனி**- பலவித பேறு, மனக்குறை நீங்கும். | பகல் 11.30 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 1.30 மணி |
| **திங்கள்**- காரிய சித்தி, பொருள் வரவு. | .பி.ப. 12.30 மணி |
| **செவ்வாய்**- முயற்சித் தடை, மனக் கலக்கம். | பி.ப. 2.30 மணி |
| **புதன்**- உறவினர் தொல்லை, பலவித கஷ்டம். | மு.ப. 8.30 மணி |
| **வியாழன்**- அந்நியர் உதவி, பண வரவு. | பி.ப. 3.30 மணி |
| **வெள்ளி**- காரியானுகூலம், தொழில் சிறப்பு. | பகல் 11.30 மணி |
| **சனி**- முயற்சி பலிதம், மன மகிழ்ச்சி. | பகல் 10.30 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-9


படிப்பகம்

www.padippakam.com





## மழலைகள் நாங்கள்

மானிட மொழிகள் பலவென்றாலும்
மழலை மொழிகள் ஒன்று:
பயமறியாத பருவம் இதுவே
பாலகர் இளமைக் கன்று.
**
மண்ணில் வந்த மழலைகள் எங்கள்
மனதில் எண்ணம் ஒன்று:
பட்டாம் பூச்சி பறப்பது போல
பறப்போம் உலகை வென்று.
**
சண்டை இல்லை சாந்தி நன்றே
சத்தியம் இதுவும் ஒன்று:
சிந்தனை வானில் தெளிவைத்தேடி
சிறகை விரிப்போம் நன்று.
**
பொய்யும் புரட்டும் மனதில் இல்லை
பொங்கும் மங்களம் ஒன்று:
அன்பும் அறமும் கூடிய வாழ்வில்
அமைதி காண்போம் இன்று.

மிருதுபாஷினி-பதுளை.

தெய்வம் பலப்பல சொல்லிப்-பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்:
உய்வதனைத்திலும் ஒன்றாய்-எங்கும்
ஓர் பொருளானது தெய்வம்.
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# கர்வம்

அது ஓர் ஓலைக்குடிசை. அடுப்பு எரிந்து கொண்டிருந்தது. பக்கத்தில் ஒரு வாளியில் தண்ணீர் இருந்தது.

"என்னைப் பார்...என் அழகைப் பார்" என்று கர்வத்தோடு சிரித்துக் கொண்டு சொன்னது நெருப்பு.

"பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன் நண்பா," என்றது தண்ணீர்.

"நான் இல்லாமல் இந்த மனிதனால் ஒன்றும் செய்ய முடியாது. நான் இல்லையேல் அவனில்லை" என்றது நெருப்பு.

"உருசியான உணவைச் சமைக்கவும், சூடான தேனீரைப் பருகவும் நான் அவனுக்குத் தேவை."

"உண்மைதான்" என்றது தண்ணீர்.

"உலோகங்களை வளைக்கவும், நகைகளைச் செய்யவும் நான் அவனுக்கு உதவுகிறேன். குளிரில் புகை பிடிப்பதற்குக் கூட நான் அவனுக்குத் தேவை!" என்று சிரித்துக்கொண்டே சொன்னது நெருப்பு.

"உண்மைதான்" என்று மறுபடியும் ஆமோதித்தது தண்ணீர்.

"ரயிலை ஓட்டுவதற்குக் கூட நான் தேவை. என் உதவி இல்லாமல் நீராவி எஞ்சின் எப்படி ஓடும்?" என்று கேள்வி கேட்டது நெருப்பு.

"அதுவும் உண்மைதான்," என்று பதில் சொன்னது தண்ணீர்.

"நான் இல்லாவிட்டால் அவனால் உயிர் வாழ முடியாது. நான்தான் அவனுக்கு எல்லாம்," என்று நெருப்பு தன்னைப்பற்றி அடுக்கிக் கொண்டே போனது.

அப்போது-

பலமான காற்று வீசியது. காற்றினால் சிறு தீப்பொறி ஒன்று பறந்து, ஓலைக்குடிசையின் மீது பட்டது. உடனே குடிசையில் தீப்பற்றியது.

தரையில் அமர்ந்து, கூடை பின்னிக் கொண்டிருந்த அந்தக் குடிசையின் சொந்தக்காரன் குடிசை தீப்பற்றி எரிவதைக் கண்டான்.

மறுகணம்-

திடீரென்று இருந்த இடத்தை விட்டு எழுந்து, பக்கத்தில் இருந்த வாளியில் உள்ள தண்ணீரை எடுத்தான். எரிந்து கொண்டிருந்த குடிசையின் மேல் தண்ணீரை ஊற்றினான்.

நெருப்பு மெல்ல மெல்ல அணைந்தது. "ம்" என்ற முனகல் ஒலி மெல்ல எழுந்து வந்து கொண்டிருந்தது, நெருப்பிடம் இருந்து.



"நண்பா" என்று மெதுவாக அழைத்தது தண்ணீர்.

"ம்" என்றது நெருப்பு.

"மனிதனுக்கு எல்லாமே நான்தான் என்றாய் அல்லவா? இப்போது பார்," என்று சொன்ன தண்ணீர்,

"இந்த மனிதன் என்னால் உன்னை அழித்துவிட்டான் பார்த்தாயா?" என்றது.

"ம்" என்று முனகியது நெருப்பு.

"இப்போதாவது புரிந்து கொள்.... நான் என்னும் கர்வம் இறுதியில் அழிவில்தான் முடியும்!" என்றது தண்ணீர்.

"நீ சொல்வது முற்றிலும் உண்மை." என்று சொன்ன நெருப்பு, தனது கர்வத்தை நினைத்து வருந்தியது.



## வாரம் ஒரு நாடு

### சிங்கப்பூர்

தலைநகர்-சிங்கப்பூர் நகரம்
பரப்பு-616.3 சதுரகிலோமீட்டர்.
மக்கள் தொகை- 28 இலட்சம்
மொழி-மலாய், சீனம், தமிழ், ஆங்கிலம்.
எழுத்தறிவு- 85%
சமயம்- பௌத்தம், இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம், டாவேசியம்.
நாணயம்-சிங்கப்பூர் டொலர்.
தனிநபர் வருமானம்-15,750 டொலர்.

**அமைவிடம்:**

மலாய் தீபகற்பத்தின் தென் முனையில் உள்ள 54 சிறுதீவுகளை உள்ளடக்கிய சிறுதீவு சிங்கப்பூர். மலாய் தீபகற்பத்தோடு பள்ளச் சதுப்பு நிலத்தினூடே உயர்த்திய பாதையினால் இணைக்கப்பட்டுள்ளது.

**வரலாறு:**

1800ம் ஆண்டின் ஆரம்பத்தில் தான் சிங்கப்பூர் அறிமுகமானது. 1946ல் பிரிட்டனின் ஆதிக்கத்தில் இருந்து விடுபட்டது. 1959ல் பொதுநலவாய அமைப்பிற்கு உட்பட்ட சுய ஆட்சி நாடாயிற்று. 1963ல் மலேசியாவுடன் சேர்ந்தது. 1965 ஆகஸ்ட் மாதம் சிங்கப்பூர் தனியான சுதந்திரக் குடியரசானது. பாராளுமன்றம் உள்ளது.

**பொருளாதாரம்:**

மொத்தத் தொழிலாளர்களில் ஒரு சதவீதத்தினர் மட்டும் விவசாயம் சார்ந்துள்ளனர். பெரும்பாலான உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. தொழிற்துறையில் முன்னேற்றம் கண்டுள்ளது. மூலப்பொருட்களை இறக்குமதி செய்து பல பொருட்களை உற்பத்தி ஏற்றுமதி செய்கிறது.

## கழுதைப்புலி

மலை, கணவாய்ப் பகுதிகளில் வாழும் ஒரு விலங்கு கழுதைப்புலி, இதற்குக் கழுதைக்குடத்தி என்ற பெயரும் உண்டு. இது பார்ப்பதற்கு ஓநாய் போன்று இருக்கும். இதன் உடலில் புலிக்கு இருப்பது போன்று வரிகள் இருக்கும். சிலவற்றின் உடல்களில் வரிகளுடன் புள்ளிகளும் இருக்கும். இதன் பின்னங்கால்களை விட முன்னங்கால்கள் நீளமானவை.


கழுதைப்புலி மாமிசங்களை உண்ணும். இரையாகும் மிருகங்களின் உடலைக் கிழிப்பதற்கு ஏற்றவாறு இதற்கு வலிமையான தாடையும், பற்களும் அமைந்துள்ளன. மாடு, எருமை போன்றவற்றின் உறுதியான எலும்பைக்கூட இது கடித்து முறித்துவிடும்.

கழுதைப்புலி வளைகளிலும், குகைகளிலும், அதிகமாக வாழும். பகல் முழுவதும் மறைந்திருந்து, இரவில் தான் இரைதேடச் செல்லும். இது ஒரு கொடிய விலங்கு. மிகவும்பலம் பொருந்தியது. இதன் குரல் கேட்கப் பயங்கரமாக இருக்கும். இவை கூட்டமாகச் சேர்ந்தே இரை தேடச் செல்லும்.



இவற்றை இளம் பருவத்திலிருந்தே வளர்க்கலாம். நாயைப் போல இதுவும் நன்றாகப் பழகி அன்போடும், நன்றியோடும் இருக்கும். இந்தியா, தென்மேற்கு ஆசியா, வட ஆபிரிக்கா ஆகிய இடங்களில் இவை வாழ்கின்றன.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 09.11.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 165
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 163

பரிசுக்குரியவர்:
பாத்திமா பர்வின்,
வத்தேகம.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| கே. வினோத், பாலர் பாடசாலை, தெனியாய. | நிப்ராஸ் அகமட் றிஸா, டீ.எஸ். சேனநாயக்க கல்லூரி, கொழும்பு-7. |
| செல்வி ஜெயந்தி, டில்லிக்கூல்ட்றி த.வி. லிண்டுல. | எம். ஆர். றிமாஸ் மொஹமட், சாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம். |
| லஷான்த் வித்தியாதரன், திருத்துவ கல்லூரி, கண்டி. | சி. வீணாதேவி, சென் மேரிஸ் மத்திய கல்லூரி, பொகவந்தலாவ. |
| றிஸ்னா அம்சர்தீன், அமீனா மகா வித்தியாலயம், மாத்தளை. | எச். ஆர். எப். ஹஸ்லா பானு, மன்னார் வீதி, புத்தளம். |
| டி. கே. என். ரிஷாதா, தமிழ் மகளிர் மகா வித்தியாலயம், பதுளை. | செல்வி ஐதா இராஜகிளி, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். |

## மாவீரன் நெப்போலியன்

ஏழைக்குடும்பத்தில் பிறந்து ஃபிரான்ஸ் நாட்டின் பேரரசராக உயர்ந்தவர் நெப்போலியன். இவருடைய முழுப்பெயர் நெப்போலியன் போனபார்ட்.

இவர் கோர்சிக்கா என்ற தீவில் பிறந்தார். பத்தாம் வகுப்பில் பாரிசில் உள்ள இராணுவப் பள்ளியில் சேர்ந்தார். 1785ல் படையில் சேர்ந்து, விரைவிலேயே படை அதிகாரியாக உயர்ந்தார். 1789ல் ஃபிரெஞ்சு மக்கள் தங்கள் அரசருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். இதை 'ஃபிரெஞ்சுப் புரட்சி' என்பர்.

நெப்போலியன் புரட்சிப் படையில் சேர்ந்து போரிட்டார். புரட்சியின் இறுதியில் அரசனும், அரசியும் அவர்களை ஆதரித்த



பிரபுக்களும் சிரச்சேதம் செய்யப்பட்டனர். ஃபிரான்ஸ் ஒரு குடியரசானது. ஆனால் சில ஆண்டுகளில் இக்குடியரசுக்கு எதிராக மீண்டும் சிலர் கிளர்ச்சியில் இறங்கினார்கள்.

இவர் தனது ஃபிரெஞ்சுப் படைக்குத் தலைமை தாங்கி இக்கிளர்ச்சியை ஒடுக்கி அமைதியை நிலை நாட்டினார்.

பின்னர் அண்டை நாடுகளின் மீது நெப்போலியன் படையெடுத்தார். முதலில் இத்தாலியைக் கைப்பற்றினார். பின்னர் 10 ஆண்டுகளுக்குள் ரஷ்யாவைத் தவிர பல ஐரோப்பிய நாடுகள் அனைத்தையும் தன்வசப் படுத்தினார்.

1803ல் இங்கிலாந்தைக் கைப்பற்றப் போர் தொடுத்தார். ஆனால் ரஷ்யாவும், ஒஸ்ற்றியாவும், சுவீடனும் இங்கிலாந்துடன் சேரவே இவருடைய முயற்சி வெற்றிபெறவில்லை. 1804ல் நெப்போலியன் ஃபிரான்சின் பேரரசராக முடிசூட்டிக் கொண்டார்.

தம் ஆதிக்கத்தைப் பெருக்க விரும்பிய நெப்போலியன் 1812ல் ரஷ்யா மீது படையெடுத்து, மொஸ்கோவரை முன்னேறினார். ஆனால் அங்கு அப்பொழுது குளிர்காலம் தொடங்கவே, குளிர் தாங்காமல் இவரின் படையின் பெரும் பகுதி அழிந்தது.

எஞ்சிய படையும் ரஷ்யாவிடம் தோல்வியுற்றுத் திரும்பியது. 1813ல் ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் ஒன்றாகச் சேர்ந்து நெப்போலியனைத் தோற்கடித்தன. இதனால் நெப்போலியனின் செல்வாக்குக் குறைந்து, எதிர்ப்புக் கிளம்பியது.

1814ல் இவர் தம் பதவியைத் துறக்க நேர்ந்தது. எல்பா என்ற தீவுக்கு நாடு கடத்தப்பட்டார். 1815ல் அங்கிருந்து இவர் தப்பி ஒரு படையைத் திரட்டிக் கொண்டு, பாரிசைக் கைப்பற்றச் சென்றார்.

ஆனால் வோட்டர்லூ என்ற இடத்தில் நடைபெற்ற போரில் தோல்வியடைந்தார். ஆங்கிலேயப்படை இவரைக் கைது செய்து செண்ட் ஹெலினா என்ற தீவில் சிறை வைத்தது. நெப்போலியன் பின்னர் அங்கேயே இறந்தார்.

## ஹரா கிரி



* **ஹரா கிரி என்றால் என்ன?**
தலையை வெட்டி தற்கொலை செய்து கொள்வது. ஜப்பான் நாட்டின் சமுராய் பழங்குடியினர் இவ்வாறு செய்வார்கள்.

* **சமுராய் என்பவர்கள் யார்?**
ஜப்பான் மக்களில் போர் புரிபவர்கள் சமுராய் எனப்படுவர்.

* **ஏன் இவர்கள் ஹரா கிரி செய்து கொள்வார்கள்?**
போரில் தோல்வியால் ஏற்பட்ட அவமானத்தைத் தாங்க முடியாமலும், போர்த் தலைவருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும் ஹரா கிரி செய்வார்கள்.

* **தாமாகவே விரும்பி அவ்வாறு செய்வார்களா?**
இல்லை. மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களும் அவ்வாறு செய்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

* **இப்போதும் யாராவது ஹரா கிரி செய்து கொள்கின்றார்களா?**
ஆம். இப்போது கூட பலர் செய்து கொள்கின்றனர். ஆனால், அது ஒரு மூடப்பழக்கம் எனப் பலர் இதை வெறுக்கின்றனர்.

## ஒருவரிச் செய்திகள்

* கண்ணீர்ப்புகைக் குண்டு குதிரைகளுக்கு எவ்வித விளைவையும் ஏற்படுத்தாது.
* கறுப்பு நிறத் தந்தமுடைய யானைகள் ஆபிரிக்காவில் உள்ளன.
* ஜப்பான் நாட்டின் தேசிய கீதம் நான்கு வரிகளைக் கொண்டது.
* உலகத்திலேயே கால்நடைகள் அதிகம் உள்ள நாடு இந்தியா.
* உப்பு நிறைந்த கடல்நீரைப் பருகும் ஒரே பறவையினம் பென்குவின் ஆகும்.
* திமிங்கிலங்களால் வாசனையை அறிய முடியாது.
* முதன் முதலில் நினைவு அஞ்சல் தலை (முத்திரை) வெளியிட்ட நாடு பெரு.
* புளூட்டோ கிரகத்தைக் கண்டு பிடித்தவர் கிளைட் வில்லியம் டம்பா.
* உயில் எழுதும் பழக்கத்தை முதலில் ஏற்படுத்தியவர்கள் ரோமானியர்கள்.
* அந்தமான் தீவுகளில் உள்ள மொத்தத் தீவுகள் 204.


படிப்பகம்

www.padippakam.com

**இதுவரை** மதன்–கீதா காதலர்கள். கடற்கரையில் சந்திக்கின்றனர். அதே நாளில் கடற்கரையில் மரியகீதா என்னும் பெண் கொலை செய்யப்பட்டு பிணமாகக் கிடக்கிறாள். கொலைப்பழி மதன் மீது விழுகிறது.

காதலி கீதா சாட்சி சொன்னால் மதன் விடுதலையாகிவிடலாம். கீதாவோ தந்தைக்குப் பயந்து காதலை மறைக்கிறாள்.

சட்டத்தரணியின் திறமையால் மதன் விடுதலையாகிறான். அதே கடற்கரையில் காதலி கீதாவை அழைத்து கொலைசெய்கிறான். பொலிஸில் சரணடைகிறான்.

நீதிமன்றத்தில் வழக்கு நடக்கிறது. சட்டத்தரணியின் புத்திசாலித்தனமான வாதங்கள் மூலமாக மதன் விடுதலையாகிறான்.

மதனுக்கு மனச்சாட்சி உறுத்துகிறது. காதலி கீதா கொலைக்கு மரியகீதாவின் கொலைதான் மூலகாரணம். அந்தக் கொலைகாரனைக் கண்டுபிடித்தால் மட்டுமே மன நிம்மதி கிடைக்கும் எனக்கூறும் மதன் துப்பறியும் நிறுவனம் ஒன்றின் உதவியுடன் முயற்சியில் இறங்குகிறான்.

இனி....




மர்மக்கதை மன்னன் பட்டுக்கோட்டை பிரபாகர்

**அசத்தல் 08**

"போலிஸ்ல இந்த விபரங்களை ஏன் சொல்லலை?"

"நல்லா இருக்கே... சம்மந்தமே இல்லாத எவனையோ பிடிச்சே போலிஸ் கேஸ் போட்டுச்சி. கொலை செஞ்சவன் காதலனா இருக்கலாம்னு போலிஸ் சந்தேகப்படறப்போ.... நான் தான் சார் அந்தக் காதலன், ஆனா நான் கொலை செய்யலைன்னு சொன்னா நம்புவாங்களா?"

"நிஜமா நீங்க......"

"அட! என்ன சார் நீங்க.....கொலை செய்றது என்ன சின்ன விஷயமா? நான் இல்லைசார். நீங்க வேற என்னை மாட்டி விட்டுடாதிங்க. தமிழ் சினிமால எவ்வளவோ சாதிக்க வேண்டியிருக்கு......"

"கொலை நடந்த அன்னிக்கு மரியகீதா தன் அக்காகிட்டே அஷ்டலக்ஷ்மி கோவில்ல உங்களை சந்திக்கிறதா சொல்லிருக்கா. நீங்க சந்திச்சிங்களா?"

"இல்லவே இல்லை. அன்னிக்கு நாங்க அப்படி சந்திக்கிறதா புரோக்ராமே இல்லை. சந்திக்கறதுக்குன்னு நாங்க பொது இடம் எல்லாம் தேடறதே இல்லை. நேரா இங்கே ரூமுக்கே வந்துடுவா."

"அப்போ மரியகீதா வயத்திலே...."

"அய்யோ! அதுவும் நான் இல்லை. ஒரே ஒரு தடவை அவளை லிப்ஸ்ல கிஸ் செஞ்சதோட சரி. தப்பு பண்ண அவ தயாராதான் இருந்தா. எனக்குதான் பிடிக்கலை."

"எனக்கென்னவோ நீங்க திறமையா பொய் சொல்றிங்களோன்னு தோணுது."

"மிஸ்டர் பரத், இதான் எல்லை. பொறுமையா, உண்மையா பதில் சொன்னது தப்பாப் போச்சு. மரியகீதாவோட கர்ப்பத்துக்கோ, கொலைக்கோ சத்தியமா நான் காரணம் இல்லை. உங்களுக்கு சாமிமேல நம்பிக்கை இருந்தா, எந்தக் கோயிலை வேணும்னாலும் சொல்லுங்க.... அங்கே வந்து கற்பூரம் அணைக்கிறேன்."

"அதெல்லாம் கோர்ட்ல செல்லாது பிரதர். கொஞ்சம் ஆதாரத்தோட வந்து விலாவரியா பேசறேன். வரட்டுமா?"

"எவ்வளவு சொல்லியும் நம்ப மாட்டிங்கன்னா....போங்க. ஐ டோண்ட் மைண்ட். தப்பு செஞ்சவனுக்குத்தானே பயம் இருக்கும்?"

"அப்புறம்?"

"பாபு என்கிற சுபாஷைப் பார்த்துப் பேசினதுக்கப்புறம் நேரா அந்த மருந்துக் கடைக்குப் போனேன். பில்லைக் காட்டி விசாரிச்சேன். இது கர்ப்பம் கலைக்கிறதுக்கு உள்ளதுதான்னு சொன்னாங்க."

"அதான் நானே சொன்னேனே பரத்..."

"ரெண்டு மாசத்து முந்தைய பில்லுங்கறதாலே சுத்தமா நினைவில்லைன்னுட்டாங்க. நியாயம்தான். எப்படி நினைவிருக்கும்? என்னாச்சு மாம்பலம் எட்ரஸ்?"

"இதோ...."

"ஒரு பேப்பர் கூட கிடைக்கலையா? உள்ளங்கைல எழுதிக்கிட்டு வந்திருக்கியே...."

"நாளைக்குக் காலைல முதல் வேலையா...."

"பல்லுத் தேய்க்கணும்."

"அதுக்கப்புறம் இந்த அட்ரசுக்குப் போகணும். என்ன நினைக்கிறே நீ? உன் அபிப்பிராயத்தைச் சொல்லவே இல்லையே."

"முதல் நாற்பது பக்கம் போர். அதுக்கப்புறம் தான் சூடு பிடிக்குது பரத். அந்த தொழிலதிபர் தியாகராஜன் என்ன செய்றான், ஆரஞ்சு ஜுஸ்ன்னு சொல்லிட்டு ஃபாரின் விஸ்கி குடுத்துடறான். நம்ம மாலாவும் குடிச்சிட்டு சிரிக்கிறா"

"பொம்பளையா நீ? பேசாம எதாச்சும் ஆபரேஷன் பண்ணிக்கிட்டு எனக்கு ஃபிரெண்டாய்டு. சுசீந்திரன்னு பேர் வச்சுக்கலாமா?"

"அப்போ நீங்க ப்ரீதியாய்டறிங்களா?"

"ராஜசேகரையும் சந்தேகப்படறேன். சுபாஷையும் சந்தேகப்படறேன். இதிலே யாரு? எப்படி நிரூபிக்கிறது?

"நீங்க மண்டையை உடைச்சுக்கங்க. எனக்கு தூக்கம் வருது. நான் புறப்படறேன்."

"நீ இருக்கிறதை விட இல்லாததே பெட்டர். போய்டு."

"காலைல பல்லு தேச்சதும் வந்துடறேன். குட்நைட்."

□□□

"நிறுத்துங்க பரத். விசாரிச்சுக்கலாம். ஏன்ப்பா தம்பி, உங்க வீட்டு நம்பர் என்ன?"

"பதினேழு."

"ரைட். அப்போ அடுத்ததுதான் பதினெட்டு. எருமைமாடு போய்டட்டும்."

"என்னைத் தவிர எல்லா உயிரினங்களுக்கும் பயப்படுறே சுசி. இறங்கு."

"பரத், இதே மாதிரி நம்ம வீட்டு வாசல்லையும் விசிறி வாழை வைப்பமா?"

"முதல்ல கேசை முடிப்போம். எங்கே இருக்கு பெல்லு?"

"பெல்லு இங்கே இருக்காது பரத், சுட்சுதான் இருக்கும்."

"அதையும் காணமே....மாடிப் போர்ஷன் தான் ராஜசேகர் வாடகைக்கு எடுத்திருக்கணும்னு நினைக்கிறேன். சார்! வீட்ல யாரு? சார்!"

"யாருங்க வேணும்?"

"ஏன் பாப்பா, வீட்ல பெரியவங்க யாருமில்லையா?"

"பாப்பாவா? எனக்கு வயசு பதினெட்டு."

"சரி மிஸ். வீட்ல பெரியவங்க யாரு இருக்கா?"

"அம்மா! அம்மா! இருங்க வருவாங்க!"

"வளர்ச்சி பத்தாது. இல்லை சுசி?"

"என்னங்க வேணும்?"

"அம்மா, மாடி போர்ஷன் காலியா இருக்குன்னு கேள்விப்பட்டோம்."

"காலியா இருக்குன்னு யார் சொன்னது?"

"புரோக்கர் கிருஷ்ணன் சொன்னாரு."

"வரட்டும் அந்தாளு. மூஞ்சிலேயே சாணித் தண்ணி ஊத்தறேன்."

"ஏன்ங்க. எதுவும் அப்படி வேண்டுதலா?"

"இல்லைங்க தம்பி. ஆறு மாசத்துக்கு முன்னாடி ஒரு பார்ட்டி கூட்டிக்கிட்டு வந்தான். இருநூறு ரூபா வாடகை, நானூறு ரூபா அட்வான்சுன்னு பேச்சு. அட்வான்ஸ் கொடுத்தான். அவ்வளவுதான். ஆள் குடி வரவும் இல்லை. இன்னிவரைக்கும் வாடகையும் வரலை. அவனோட பூட்டை வேற போட்டுட்டுப் போய்ட்டான். எனக்கு என்ன பண்றதுன்னே தெரியலை."

"கிருஷ்ணன் விபரமா சொன்னாரும்மா."

"என்ன சொன்னாரு?"

"அந்த பார்ட்டியை பார்த்து பேசினாராம். அவன் அந்த போர்ஷன் எனக்குத் தேவையில்லை, யாருக்காவது விட்டுக்கச் சொல்லுன்னு சொல்லிட்டானாம். அதை கிருஷ்ணனே வந்து சொன்னா நீங்க சத்தம் போடுவீங்கன்னு விலாசம் கொடுத்து எங்களையே கேக்கச் சொன்னார்."

"நிஜமாவா? உள்ளே எந்த சாமானும் இல்லைதான். ஆனா அவனோட பூட்டுப் போட்டிருக்குதே...."

"கிருஷ்ணன் ஒரு கொத்து சாவி கொடுத்தனுப்பிச்சார். திறந்துக்கச் சொன்னார். அந்த பார்ட்டி சரின்னு சொல்லிட்டானாம்."

"போலிஸ் பிரச்சனை எதுவும் வராதே தம்பி?"

"எப்படிங்க வரும்? நான் யாரு?"

"தெரியாதுங்களே..."

"தெரிஞ்சுக்கங்க. ஐ.ஜி. வீட்டுக்கு அடுத்த வீட்ல இருந்தவன். நல்ல தோஸ்த்து. ஒரே டீயை மாத்தி மாத்தி சாப்பிடுவோம். ஒரு சைக்கிள் புதுசா வாங்கினேன். பாதுகாப்பா இல்லையேன்னு சொன்னேன். மறுநாள் லேர்ந்து அதுக்கு பாதுகாப்புக்கு ரெண்டு கான்ஸ்டபிள்ஸ் போட்டுட்டார். அவ்வளவு ஃப்ரெண்ட்ஸ் நாங்க. வெளிப்பக்கம் இருக்கிற படிதானே மாடிக்கு? வாங்க. போலாம்."

"நானும் எத்தனை மாசம்தான் பொறுமையா இருக்கிறது? என்ன ஆனாலும்சரி. வாங்க நீங்க பூட்டைத் திறங்க. வர்றது வரட்டும்."

"அட்வான்ஸ் கொடுத்துட்டுப் போனதுக்கப்புறம் அந்த பார்ட்டி வரவே இல்லையா?"

"ராத்திரி ஒம்போதுக்கெல்லாம் கீழே நாங்க தூங்கிடுவோம். அதுக்கு அப்புறம் ரெண்டு, மூணு தடவை வந்துட்டு விடியறதுக்குள்ளே போய்டுவான்னு நினைக்கிறேன். ஏன்னா....ரெண்டு, மூணு தடவை மேல் போர்ஷன்ல ராத்திரி லைட் எரிஞ்சுதும்மான்னு எதிர்த்த வீட்டுக்காரங்க சொல்லுவாங்க."

"இதென்ன பிரமாதமான பூட்டுன்னு மாட்டியிருக்கான்? இதுக்கு சாவிக்கொத்தே வேணாங்க. சுசி, உன் ஹேர்ப்பின் கொடு. இதோ பாருங்க. இவ்வளவுதான் வேலை. திறந்தாச்சு."

"ஜன்னல் திறந்தாத்தான் வெளிச்சம் வரும்."

"ஏன்ம்மா....அந்தாளு சாமான் எதுவுமே இல்லைன்னு சொன்னிங்க. இந்த பாய் யாரோடது?" இந்த தலையணை யாரோடது?

"அந்தாளுதுதான்னு நினைக்கிறேன்."

"சுசி, இவ்வளவு சிகரெட் துண்டு கிடக்கு....அதென்னது அவ்வளவு குப்பை ஒதுங்கியிருக்கு?"

"குப்பை இல்லைங்க பரத், காஞ்சு போன மல்லிகைப்பூ."

"வெரிகுட். இப்போ படம் தெளிவா இருக்கு."

"என்ன தம்பி சொல்றிங்க?"

"நாங்க போய் அந்த கிருஷ்ணனை கூட்டிட்டு வந்தே வாடகை பேசிக்கிறோம். பாய், தலைகாணி எல்லாம் கிடக்கிறதாலே, அந்தாள் நாளைக்கு பிரச்சனை பண்ணிடக் கூடாது பாருங்க."

"அதுவும் சரிதான். கிருஷ்ணனை கூட்டிட்டு வந்துடுங்க."

"தேதிகூட கிழிக்கிறதில்லையா பரத்? சொல்லுங்க. என்ன படம் தெளிவா இருக்கு?"

"நான் சொல்றது சரியா வருதான்னு பாரு சுசி. ராஜசேகருக்கு மரியகீதாவை பிடிச்சுப் போச்சு. எப்படியோ வளைச்சுப் போட்டுட்டார். ரோஸ்லினுக்கு தெரியாம லீலை செய்றதுக்காக இந்த வீட்டைப் பிடிச்சார். நாடகம், ரிகர்சல்ன்னு சொல்லிட்டு மரியகீதா வெளில போய்ட வேண்டியது. இவர் டூர்ன்னு சொல்லிட்டு அப்பப்போ இங்கே வந்துடுவார். மரிய கீதாவும் வந்துடுவா. ரெண்டு பேரும் உல்லாசமா இருந்துட்டுப் போய்டுவாங்க. இதிலே மரியகீதா கர்ப்பம் ஆனதும், 'ரகசியம் வேணாம், அக்கா கிட்டே தைரியமா சொல்லிட்டு ரெண்டாம் கல்யாணம் பண்ணிக்கங்க'ன்னு சொன்னா. ராஜசேகருக்கு ரோஸ்லினை பகைச்சுக்க இஷ்டமில்லை. அதனால மாத்திரை வாங்கிக் கொடுத்தார். அதை அவள் சாப்பிட்டாளோ, இல்லையோ... ஆனா இனிமே மரியகீதாவை விட்டு வச்சா, நம்ம குடும்ப வாழ்க்கையோட நிம்மதி கெட்டுப் போய்டும்ன்னு தீர்மானிச்சு தீர்த்துட முடிவு செஞ்சார். காதலனை பார்க்கப்போறேன்னு சொல்லிட்டு அஷ்டலக்ஷ்மி கோவிலுக்குவரச் சொன்னார். போய் கொலை செஞ்சிட்டு கும்பகோணம் போய்ட்டார். முன் தேதியில அங்கே இருந்த மாதிரி ஏதோ கோல்மால் பண்ணி அலிபி உருவாக்கிட்டார்."

"எல்லாம் சரி, அந்த அலிபியை எப்படி உடைப்பிங்க?"

"இதுவரைக்கும் கண்டுபிடிச்சதை போலிஸ்ல சொல்லிட்டா, அந்த வேலையை அவங்க பார்த்துக்குவாங்க. இன்ஸ்பெக்டர் அசோகனுக்கு போன் பண்ணு சுசி."

"ஹலோ, இன்ஸ்பெக்டர் அசோகன்? ஒன்மினிட். இந்தாங்க பரத்."

"ஹலோ, நான் பரத், குட் மார்னிங்."

"குட் மார்னிங்."

"மரியகீதா கொலை சம்பந்தமா கொஞ்சம் டெவலப்மெண்ட்ஸ் இருக்கு. நேர்ல பேசணும். வரட்டுமா?"

"நான் வெளில புறப்பட்டுகிட்டிருக்கேன். நேரா உங்க வீட்டுக்கு வர்றேனே இப்போ. அங்கேயே இருங்க. பேசலாம்."

"ரைட் சார். சுசி, ராஜசேகருக்குதான் மோடிவ் இருக்கு. வாங்க மதன், உக்காருங்க. நீங்க நேத்து வந்துட்டுப் போனதிலேர்ந்து உங்க வேலையாதான் அலைச்சல். இப்பகூட அதான் பேசிட்டிருக்கோம்."

"கண்டுபிடிச்சிட்டிங்களா?"

"கிட்டத்தட்ட. இன்னும் உறுதியாகலை."

"யாரு?"

"மரியகீதாவோட அக்கா புருஷன் ராஜசேகர், ஏன் அவரை சந்தேகப்படறேன்னா.................................................. ஸோ, பாபுவை விட ராஜசேகரை அதிகமா சந்தேகப்படறேன்."

"சார், போலிஸ் ஜீப் வந்து நிக்குது?"

"வாங்க சார். என்ன சாப்பிடறீங்க?"

"ஒண்ணும் வேணாம். இவர்தானே முற்பிறவி கண்ட மதன்?"

(தொடர்ந்து வரும்)






**பேனா நண்பர் அரங்கம்**








பெயர்: ரமீஸ் பதூர்தீன்.
வயது: 17
முகவரி: பெரியகிண்ணியா, கிண்ணியா-5.
பொழுது போக்கு: பத்திரிகை, பேனாநட்பு.

பெயர்: முகமட் நஸீர்.
வயது: 22
முகவரி: கச்சிவத்தை, குருநாகல் வீதி, அநுராதபுரம்.
பொழுது போக்கு: வானொலி, கிரிக்கெட்.

பெயர்: எஸ். அந்தனி.
வயது: 23
முகவரி: சீன் மேற்பிரிவு, பூண்டுலோயா.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: எம். அஸ்ஹத்.
வயது: 25
முகவரி: 25ஏ, இந்திரிலி கொட, மக்கொன.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், பத்திரிகை.

பெயர்: எஸ். ரவி.
வயது: 24
முகவரி: ROOM NO-C.2.D, I.D.NO-15373, P.O.BOX-20942, RIYADH-11465, K.S.A.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், பத்திரிகை.

பெயர்: ஆர். மகேஸ்வரன்.
வயது: 21
முகவரி: 141, கிறின்ஸ் வீதி, நீர்கொழும்பு.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: எம். நஸீர்.
வயது: 18
முகவரி: 211, எம்பக்க, ஹந்தஸ்ஸ, கண்டி.
பொழுது போக்கு: புத்தகம், பத்திரிகை.

பெயர்: எம். இபாம்.
வயது: 28
முகவரி: P.O.BOX-1255, AL-FINTAS, KUWAIT.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: ஆர். ராஜா.
வயது: 26
முகவரி: .P.O.BOX-40366, DOHA, QATAR.
பொழுது போக்கு: ரீ.வி, பத்திரிகை.

பெயர்: என். ஈஸ்வரநாதன்.
வயது: 24
முகவரி: சென்கூம்ஸ் எஸ்டேட், தலவாக்கலை.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எஸ். சுந்தர்.
வயது: 20
முகவரி: 189/72, ரொறிங்டன் அவனியு, கொழும்பு-07.
பொழுது போக்கு: பேனாநட்பு, வானொலி.

பெயர்: ஐ. மொஹமட் பாஹிர்.
வயது: 26
முகவரி: 52/1, ஸாவியா லேன், மட்டக்குளி, கொழும்பு-15.
பொழுது போக்கு: வழமையானவை.



படிப்பகம்

www.padippakam.com

# 100

# மக்சீம் கார்க்கி



# தாய்

"எடுத்துக் கொள்ளுங்கள், எடுத்துக் கொள்ளுங்கள்" என்று குனிந்து கொண்டே சொன்னாள் தாய்.

"கலைந்து போங்கள்!" என்று சத்தமிட்டுக்கொண்டே பொலிஸ்காரர்கள் கூட்டத்தைத் தள்ளிக்கொண்டு வந்து கொண்டிருந்தார்கள். அந்த ஜனங்கள் வேண்டா வெறுப்பாக வழி விட்டு, அந்தப் பொலிஸ்காரர்களை முன்னேற விடாமல், தம்மையறியாமலேயே அவர்களை நெருக்கித் தள்ளினார்கள். அகன்று விரிந்த பிரகாசமான கண்களோடு அந்த

> "அவர்கள் மறு பிறவி எடுத்த என் ஆத்மாவைக் கொல்லவே முடியாது!"
> "அவர்கள் நம் அறிவை இரத்தமயமாக்க முடியாது!"
> "இரத்த சமுத்திரமே திரண்டு வந்தாலும் சத்தியத்தை மூழ்கடிக்க முடியாது!"
> "ஜனங்களே ஒன்று திரளுங்கள். ஓரணியில் பலத்த மாபெருஞ் சக்தியாகத் திரண்டு நில்லுங்கள்!"
> —தாய்

அன்புருவான கிழவியைக் கண்டு எல்லோரும் தவிர்க்க முடியாதபடி கவர்ச்சி கொண்டார்கள். வாழ்க்கையில் புறக்கணிக்கப்பட்டு, ஒருவருக்கொருவர் ஒட்டின்றிப் பிளந்து போயிருந்த அந்த ஜனங்கள், அந்தப் பொழுதில் தாங்கள் அனைவரும் ஒரே இனமாக மாறிவிட்டதுபோல் உணர்ந்தார்கள். அந்த உத்வேகமான வார்த்தைகளை ஆழ்ந்த மன உணர்ச்சியோடு கேட்டார்கள். அந்த வார்த்தைகள் தான் வாழ்க்கையில் அநீதியால் துன்பத்துக்காளான எண்ணற்ற இதயங்கள் எவ்வளவோ காலமாகத் தேடித் திரிந்த வார்த்தைகளாக ஒலித்தன. தாய்க்கு அருகில் நின்ற ஜனங்கள் மௌனமாக நின்றார்கள்; அவளையே விழுங்கி விடுவதுபோல் இமை கொட்டாமல் பார்த்தார்கள்; அவர்களது உஷ்ண மூச்சுக் காற்றுக் கூடத் தன் முகத்தில் உறைப்பதை அவள் உணர்ந்தாள்.

"ஏ, கிழவி, போய்விடு!"

"அவர்கள் உன்னை ஒரு நிமிஷத்தில் பிடித்து விடுவார்கள்!"

"இவளுக்குத் தான் என்ன தைரியம்?"

"போங்கள் இங்கிருந்து! கலைந்து போங்கள்!" என்று கத்திக் கொண்டே பொலிஸ்காரர்கள் மேலும் நெருங்கி வந்தார்கள். தாய்க்கு எதிராக நின்ற ஜனங்கள் ஆடியசைந்து ஒருவரையொருவர் பிடித்துக் கொண்டார்கள்.

அவர்கள் தன்னை நம்பவும், தான் சொல்வதைப் புரிந்து கொள்ளவும் தயாராயிருப்பதாகத் தோன்றியது. எனவே அவள் அவசரமாக, தனக்குத் தெரிந்த சகல விஷயங்களையும், தனது அனுபவத்தால் கண்டறிந்த சகல எண்ணங்களையும் அவர்களுக்குச் சொல்லித் தீர்த்துவிட எண்ணினாள்.

அந்த எண்ணங்கள் அவளது இதயத்தின் அடித்தளத்திலிருந்து லாகவமாகப் பிறந்தெழுந்து, கவிதா சொரூபமாக இசைத்துக் கொண்டு வெளியேறின; ஆனால் அந்தக் கவிதையை தன்னால் பாடிக்காட்ட முடியவில்லையே என்று அவள் வேதனைப்பட்டாள். அவளது குரல் நடுநடுங்கி உடைந்து கரகரத்து ஒலித்தது.

"தனது ஆன்மாவை விற்றுவிடாத ஒரு தொழிலாளியின் நேர்மை நிறைந்த பேச்சுத்தான் என் மகனின் பேச்சு. நேர்மையான வாசகம்! அந்த வாசகத்தின் தைரியத்தைக் கொண்டே நீங்கள் அதை அறிந்து கொள்வீர்கள்!"

ஒரு இளைஞனது இரண்டு கண்களும் அவளைப் பயத்தோடும் வியப்போடும் பார்த்துக் கொண்டேயிருந்தன.

யாரோ அவளது மார்பில் தாக்கினார்கள். அவள் பெஞ்சின் மீது விழுந்தாள். ஜனக் கூட்டத்துக்கு மேலாக பொலிஸ்காரர்களின் கைகள் தெரிந்தன. ஜனங்களைத் தோளைப் பிடித்தும் கழுத்தைப் பிடித்தும் தள்ளிக் கொண்டும் தொப்பிகளைப் பிடுங்கியெறிந்து கொண்டும் அவர்கள் முன்னேறி வந்தார்கள். தாயின் கண்களில் எல்லாமே இருண்டு மங்கித் தோன்றின. அவள் தனது ஆயாசத்தை உள்ளடக்கி வென்றுகொண்டே, தனது தொண்டையில் மிஞ்சி நின்ற சக்தியோடு உரத்துக் கத்தமுனைந்தாள்.

"ஜனங்களே ஒன்று திரளுங்கள். ஓரணியில் பலத்த மாபெருஞ் சக்தியாகத் திரண்டு நில்லுங்கள்!"

ஒரு பொலிஸ்காரன் தனது கொழுத்த பெருங் கையினால் அவளது கழுத்தை எட்டிப்பிடித்து உலுக்கினான்:

"வாயை மூடு!"

அவளது தலை சுவரில் மோதியது. ஒரு கண நேரம் அவளது இதயத்திலே பயம் சூழ்ந்து இருண்டது: ஆனால் மறு கணமே அந்தப் பயம் நீங்கி ஒரு ஜோதி வெள்ளம் பொங்கியெழுந்து அந்த இருளை அப்பால் துரத்தியடித்தது.

"போ, போ" என்று சொன்னான் அந்தப் பொலிஸ்காரன்.

"எதைக் கண்டும் நீங்கள் பயப்படாதீர்கள்! நீங்கள் இப்போது வாழ்கின்ற வாழ்க்கையைவிட எதுவும் கொடுமை வாய்ந்ததாக இருக்கப்போவதில்லை..."

"வாயை மூடு, நான் சொல்லுகிறேன், வாயை மூடு!"

அந்தப் பொலிஸ்காரன் அவள் கையைப் பிடித்து, வெடுக்கென்று இழுத்தான். இன்னொரு பொலிஸ்காரன் அவளது மற்றொரு கையைப் பிடித்துக் கொண்டான்: இருவருமாக அவளை இழுத்துச் சென்றனர்.

"உங்களது இதயத்தையே தின்று கொண்டிருக்கும் கசப்பைவிட தினம்தினம் உங்களது நெஞ்சையே சுவைத்துக்கடிக்கும் கொடுமையை விட.."

அந்த உளவாளி அவளை நோக்கி ஓடி வந்தான். தனது முஷ்டியை அவளது முகத்துக்கு நேராக உயர்த்திக் காட்டிக் கத்தினான்:

"ஏ, நாயே! வாயை மூடு!"

அவளது கண்கள் அகன்று விரிந்து பிரகாசித்தன: அவளது தாடை துடிதுடித்தது. வழுக்கலான கல் தரையின் மீது காலைப் பலமாக ஊன்றிக் கொண்டு அவள் மேலும் கத்தினாள்:

"அவர்கள் மறுபிறவி எடுத்த என் ஆத்மாவைக் கொல்லவே முடியாது!"

"ஏ, நாயே!"

அந்த உளவாளி அவளது முகத்தில் அறைந்தான்.

"வேண்டும், அந்தக் கிழவிக்கு!" என்று யாரோ வெறுப்போடு கத்தினார்கள்.

ஒரே கணத்தில் சிவப்பாகவும் கறுப்பாகவும் இருந்த ஏதோ ஒன்றால் அவள் கண்கள் இருண்டன. இரத்தத்தின் உப்புக்கரிக்கும் ருசி அவள் வாயில் தட்டுப்பட்டது.

அவளைச் சுற்றிலும் எழுந்த ஆவேசக் குரல்களால் தாய் மீண்டும் உணர்ச்சி பெற்று விழிப்புற்றாள்.

"அவளைத் தொடாதே!"

"வாருங்களடா பயல்களா!"

"டே போக்கிரி. உன்னைத்தான்!"

"அவனை உதையடா!"

"அவர்கள் நம் அறிவை இரத்தமயமாக்க முடியாது!"

அவர்கள் அவளைப் பின்னாலிருந்து கழுத்தில் கை கொடுத்துத் தள்ளினார்கள்; அவளது தலையிலும் தோளிலும் அறைந்தார்கள். கூச்சலும் கும்மாளமும் அலறலும் விசில் சப்தமும் ஒன்றோடொன்று குழம்பியொலித்த குழப்பத்தில் அவள் கண் முன்னால் பளிச்சிட்டுத் தோன்றி எல்லாம் சுழல ஆரம்பித்தன; அந்தக் கூக்குரல்கள் அவள் காதைச் செவிடுபடச் செய்தன. அவளது தொண்டை அடைத்தது; திணறியது; அவளது காலடியிலே இருந்த நிலம் நழுவி இறங்கியது; அவள் கால்கள் தள்ளாடின; உடம்பு வேதனையின் குத்தல் உணர்ச்சியால் பளுவேறி உழலாடி, ஆதரவற்றுத் தடுமாறியது. எனினும் அவளது கண்கள் மட்டும் தமது பிரகாசத்தை இழக்கவில்லை. அந்தக் கண்கள் மற்ற கண்களை, நெருப்பாகக் கனன்றெரியும் கண்களை, தனக்குப் பழக்கமான துணிவாற்றலின் ஜோதியோடு ஒளி செய்யும் கண்களை, தனது இதயத்துக்கு மிகவும் அருமையாகத் தோன்றிய கண்களைக் கண்டு களித்தன.

அவர்கள் தாயை வாசற்புறமாகத் தள்ளிக் கொண்டு சென்றார்கள்.

அவள் ஒரு கையைப் பிடுங்கி விடுவித்துக் கொண்டு கதவின் கைப்பிடியை எட்டிப் பிடித்தாள்.

"இரத்த சமுத்திரமே திரண்டு வந்தாலும் சத்தியத்தை மூழ்கடிக்க முடியாது!"

அவர்கள் அவள் கையில் பட்டென்று அறைந்தார்கள்.

"ஏ, முட்டாள்களே! நீங்கள் வீணாக எங்கள் பழியைத் தான் தேடிக் கொள்கிறீர்கள். உங்களது கொடுமைகளெல்லாம் ஒரு நாள் உங்கள் தலையிலேயே வந்து விடியப் போகின்றன!"

ஒரு பொலிஸ்காரன் அவளது தொண்டையைப் பிடித்து அவளது குரல் வளையை நெரித்துத் திணறடித்தான்.

"அதிருஷ்டங்கெட்ட பிறவிகளே!..." என்று அவள் திணறினாள்.

யாரோ ஓர் உரத்த தேம்பலால் அதற்குப் பதில் அளித்தார்கள்.


(முற்றும்)


முரசில் வருகிறது

தூக்கு மேடைக் குறிப்பு

ஒரு போராளியின் பூகம்ப வாழ்க்கை!
வீரம்-தியாகம்-காதல் மூன்றும் கலந்து
வாரா வாரம் உங்கள் இதயத்தைத் தொடப்போகும் உணர்ச்சியான தொடர்!

அடுத்த முரசில் ஆரம்பம்




**வடபகுதியிலிருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டு ஆறு வருடங்களாகிவிட்டன. வெளியேறியவர்களின் ஏக்கப் பெருமூச்சுக்களில் ஒரு மூச்சு இது.**

# வெளியேற்றம்



கம்மல்துறையிலிருந்து
திருமதி பௌஸியா நவாஸ்

"உம்மா யாழ்ப்பாணமெண்டா என்னம்மா? அது எங்கே இருக்கு?" ஐந்து வயது மகன் பயாஸின் கேள்வியால் ஏதோ சிந்தனை வயப்பட்டிருந்த நான் "ஓ..... யாழ்ப்பாணமா? அதுதாண்டா ராஜா எமது சொந்த ஊர்.

"உன்னோட உம்மா, வாப்பா பிறந்து வளர்ந்து படித்து விளையாடி பெரியவங்களானதெல்லாம் இந்த யாழ்ப்பாணத்திலேதானடா. அதுதான் மகன் நம்மோட சொந்த ஊர்."

"அப்படின்னா ஏனம்மா நாம இங்கேயிருக்கிறோம்? நாங்க அங்க போவமா? வாங்கம்மா போயிட்டு வருவம்." கண்களில் ஆவலோடு என் கைகளைப் பற்றிக்கொள்ளும் அன்பு மகனுக்கு என்ன பதில் சொல்வது என்ற தடுமாற்றத்தில் நான்.

1990 ஒக்டோபர் 30ல் நாம் அந்த இரண்டு மணி நேரத்தில்– சொந்த மண்ணைவிட்டு– பிறந்த தாயகத்தை விட்டு, சொல்லும் தோறும்– நினைக்கும் தோறும் நாவில் தேனூறும் எமது யாழ்ப்பாணத்தை விட்டும் வீடிழந்து, வாசலிழந்து, உணர்விழந்து, உடமையையிழந்து உயிரை மட்டும் கூட்டில் சுமந்தவர்களாக– ஆடு மாடுகளைப் போல் லொறியில் ஏற்றப்பட்டு ஒவ்வோர் ஊராய் அகதி முத்திரை பொறிக்கப்பட்டவர்களாய் இறக்கப்பட்டு உண்ண உணவின்றி, உறங்க இடமின்றி உடுக்க உடையின்றி உற்றமும் சுற்றமும் எங்கெங்கோ பிரிந்து.... வானுக்கும் பூமிக்குமிடையில் சிக்குண்டு, சீரழிந்து இன்று மனிதப் பொம்மைகளாக எப்படியோ ஏதோ ஒரு வரையறையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோமே அதைச் சொல்லவா?

அல்லது சொந்த மண்ணில் வாழ்ந்திருந்த வேளையில் யுத்தமுனையின் அகோரப் பிடி ஒரு பக்கம்– வானில் வல்லூறாய் வட்டமிடும் பொம்பரின் மரண வீச்சு மறுபக்கம். இதன் மத்தியில் பங்கரில உன் தாயும் தந்தையும் உறவுகளும் உயிர்காக்க அபயம் தேடியதையும், அதுவும் தாக்குப் பிடிக்க முடியாமல் இதன் தாக்கங்களிலிருந்தும் சற்று ஒதுங்கி இடம் தேடி வட்டுக் கோட்டைக்கு தள்ளாடித் தள்ளாடி நடக்க முடியாமல் கால் நடையாகவே எட்டு மைல் நடந்தபோது நீ என் வயிற்றில் ஏழு மாதக் குழந்தையடா என்று சொல்லவா?

எப்படிச் சொன்னால் புரிந்து கொள்வான். என் கண்களில் வழிந்தோடும் கண்ணீர் அவன் இதயத்தைச் சுட்டிருக்க வேண்டும்.

"ஏனம்மா அழறீங்க. யாழ்ப்பாணத்துக்குப் போவமான்னு தானே கேட்டேன். நான் கேட்டது தப்பாம்மா?..." என்றவாறு கண்களைத் துடைத்துவிட்ட அந்தப் பிஞ்சு விரல்களை என் கன்னத்தில் சேர்த்தவாறே "இல்ல மகன் நாங்களெல்லாம் ஒரு நாளைக்கு நம் யாழ்ப்பாணத்துக்குப்போவம். அங்கே போய் சந்தோஷமா வாழும் காலம் வரும், சரியா. அதுவரைக்கும் இங்கே இருப்பம்," என அன்பு மகனைச் சமாளித்தவாறு, "இப்போ நீங்க தம்பியோட விளையாடுங்க" என்றவாறு எழுந்து சென்று மல்லிகைப் பந்தலின் கீழ் உட்கார்ந்து கொள்கிறேன்.

என் நினைவலைகள் எங்கோ... எங்கோ.... இப்படித்தான் எமது வீட்டின் பின்புறத்தில் ஒரு வேப்பமரம். அந்த மரத்திற்கு "நூறு வயசிருக்கும்" என்று வீட்டில் பெரியவர்கள் சொல்லிக் கொள்வார்கள். அந்த வேப்பமரம்தான் என் கற்பனையின் வடிகால். பத்திரிகைக்கும் வானொலிக்கும் கவியும் கதையும் உருவாக்கித்தந்ததே அந்த வேம்புதான்.

சித்திரையில் அக்கக்கோ குருவிகளின் சோகராகம் இங்கே தான் ஆரம்பமாகும். அதைத்தான் மறக்கமுடியுமா? அல்லது.... சின்னஞ்சிறுமியாய் நடைபயின்றதும் மணல் வீடு கட்டி விளையாடியதும், கூட்டாஞ் சோறாக்கியதும்...... கல்விகற்ற நாளையில் படிப்பிலும் சுட்டித்தனத்திலும் கெட்டிக்காரியென்று பேர் வாங்கிச் சிரித்ததும் மறக்கக் கூடியதா? புவியியல் பாடம்படிப்பித்த ஆசிரியை மிஸிஸ் கிருஷ்ண ராஜாவை மறப்பதா? வரலாறு படிப்பித்த மிஸிஸ் சங்கரப் பிள்ளையை மறப்பதா? முஸ்லிம் மகளிர் கல்லூரியில் இனவேறு பாடின்றி ஐக்கியமாக அறிவுப் பாலூட்டிய அவர்கள் எங்கே?

"பர்தா...பர்தா...." குரல் கேட்டு சுய நினைவு மீண்ட நான் "ஓ....ஷாமிலா ஏது இந்தப்பக்கம்?" என்றவாறு அவளை உள்ளே அழைத்துச் செல்கிறேன். மன்னாரைப் பிறப்பிடமாகக் கொண்டவள்; செல்வச்செழிப்பில் சிலிர்த்தவள்; பஞ்சம் பசி என்றால் அர்த்தம் புரியாதவள்; அழகுக்கு உவமையானவள். இன்று அகதி வாழ்வு தந்த வெகுமதி வாடி வதங்கி அழகுச் சிலையிவள்– அவலச் சிலையாகி..... ஓ.... ஷாமிலா...என் இதயம் கனக்கிறது.

"பர்தா எங்காவது குறைந்த வாடகைக்கு வீடு கிடைக்குமா? இப்போது நாங்களிருக்கும் வீட்டுக்கு இரண்டு வருஷத்துக்குக் கொடுத்த எட்வான்சும் முடிந்துவிட்டது. வீட்டைக் கொடுத்துவிட்டு வேறு வீடு பார்க்கணும். ரெண்டு வருஷத்துக்கல்லே ரொக்கமா கேட்கிறாங்க. மாசாமாசமெண்டா ஏதோ ஒரு வழி பண்ணிக்கலாம். வந்த இடத்தில ஏதோ கஞ்சித் தண்ணி ஊத்தறது இவரோட கூலி வேலைதான். அதுவும் நிரந்தரமாயில்லே. இதுக்குள்ள எப்படி வீட்டுக்கு எட்வான்ஸ் குடுக்க? சாப்பிடறதா அல்லது வீட்டில் அடுக்கடுக்காய் இருக்கும் பெண் பிள்ளைகளுக்கு சேர்க்கவா? அது தான் போகட்டும்; பூவைப்போல் என்னை வளர்த்த என் பெற்றோரின் இந்தத் தள்ளாத வயதில் அவர்களைப் பசியில்லாமல் கவனிக்கவா? என்ன தான் செய்வதோ? தலையில் கைவைத்தவாறு அங்கலாய்க்கும் அவள் விழியில் மழை கொட்டுகிறது.

பணக்கார வீட்டுப்பிள்ளையான அவளைப் பெற்றோர் அவளின் 16 வயதினிலேயே மணப்பெண்ணாகப் பார்க்க ஆசைப்பட்டு, இன்று அடுக்கடுக்காக ஐந்து பெண்பிள்ளைகளுக்குத் தாயாகி நிற்கிறாள். கணவனோ அவளுக்கு நிகரான அழகும் அந்தஸ்தும் படிப்பும் பணமும் நிறைந்த ஆண்மகன். ஆனால் இன்று– அந்த இரண்டு மணி நேரத்தில்– பொருளாதாரத்தையெல்லாம் இழந்து போனதால் பசித்த வயிற்றுக்கு வழி தேடி, வெட்கத்தைவிட்டு ஒரு கூலித் தொழிலாளியாக....என் கதியும் அதேகதி தான்! எனக்கோ கையாலாகாத நிலை. அகதிகள் படும் அவதி பெரும் அவதி. அதற்குள் யார் முகத்தை யார் பார்க்க....."



படிப்பகம்

www.padippakam.com

# பட்டினிச் சாவு

மழை லேசாகத் தூறத் தொடங்கியது, வடக்குப் பக்கமாக கரும் முகில்கள் திரண்டு வர ஆரம்பித்தன. வானம் பிளந்து விழும் போல இடி இடித்தது. மின்னல் மின்சாரத்தைக் கொட்டிக் கொட்டி எரித்து பிளந்தது. "மழைவந்தால் எங்கை போறது?" வதனா பதறினாள். இரண்டு குழந்தைகள்: மூத்தவளுக்கு எட்டு வயது, இரண்டாவதுக்கு மூன்றரை வயது. பிள்ளைகள் இரண்டும் தாயின் மடியில் வந்து முகத்தைப் புதைத்துக் கொண்டன. 'இண்டைக்கு சோனாவாரி பெய்யும் போல...' தனக்குள் கூறிக்கொண்டாள்.

ஒட்டுசுட்டான் கனிஷ்ட வித்தியாலயம் நிறைந்து வழிய, கொக்காவிலில் இருந்து வந்த மிதிக் குடும்பங்களை வேறு எங்காவது போகச் சொல்லி விட்டார்கள். வதனா ஒரு இளம் ஆசிரியை. எத்தனை பிள்ளைகளுக்கு "பொறுத்தார் அரசாள்வார்" என்று பாடம் சொல்லிக் கொடுத்திருப்பாள்! அவள் பொறுமையில்லாமல் துவண்டு போனாள். எத்தனை நாளைக்கென்று பசிக்கிடப்பது?

"அம்மா... அம்மா... அம்..மா" விம்மி அழும் குழந்தைகளுக்கு என்ன கொடுப்பது? வதனாவின் கண்கள் பனித்துவிட்டன. உடம்பு முழுக்க நடுக்கமெடுத்தது. இப்போது மூன்று நாட்களாக எதுவும் சாப்பிடவில்லை. சாப்பிடுவதற்கு ஒன்றுமில்லை. ஒருகிழமை சாப்பிடாதவர்களும் இருந்தனர். பத்துக் குடும்பங்களை அந்த ஆலமரம் தாங்கி நின்றது. விசாலமான அதன் நிழலில் மறைப்புகளற்ற திறந்த பூமியில் எங்கள் மக்கள் கண்ணீரும் கம்பலையுமாய்- ஆதரவற்ற அனாதைகளாய் யுத்தம்-துரத்திய அகதிகளாய் பரிதவித்துக் கொண்டிருந்தனர். எத்தனை மரங்கள் எங்கள் மக்களைத் தாங்கிக் கொண்டு நிற்கின்றன!

"அம்மா நான் சாகப் போறன்; எனக்குத் தாங்கேலாது," வதனாவின் நெஞ்சில் இதயத்தை யாரோ திருகி முறிப்பதாக வலியேற்பட்டது.

"என்ன செல்வி சொல்லுறாய்?" மூத்தவள் செல்வி இப்படி ஒரு நாளும் பேசியதில்லை. பசியின் தாக்கம்- அதன் கொடுமை.

"என்ரை குஞ்சு.. உப்பிடிச் சொல்லாதையெணை, அம்மாக்கு தாங்கேலாது." வரும் போதுகூட ஒன்றும் இருக்கவில்லை. வன்னி விளாங்குளம் பக்கம் போவோமென்று யார் நினைத்தார்கள். ஏதோ பள்ளிக் கூடத்திலையாவது எல்லோரையும் சேர்த்து வைத்து செஞ்சிலுவைச் சங்கமாவது சாப்பாடு தரும் என்ற எண்ணத்தில் வந்தவர்கள் அவர்கள். யாருக்குத் தெரியும் இப்படி ஆகுமென்று! காடுகளுக்குப் பழக்கமில்லாத குஞ்சு குருமன்கள் என்ன பாடுபடுகுதுகள். மழை வந்தால் எங்கை போறது? எல்லோரும் நனைந்து தோய வேண்டியதுதான். கூரையில்லாத புகலிடம் மரவடி வாழ்க்கை. செல்வியை மடியில் இருந்து தூக்கியெடுத்து நெஞ்சோடு அணைத்தபடி கதறி அழுதாள் வதனா.

"என்ரை குஞ்சு.. என்ன சொன்னனி..? இனிமேல் உப்பிடிச் சொன்னியெண்டால் அம்மா செத்திடுவன் ஓ..." தாயிதயத்தால்

**பத்துக் குடும்பங்களை அந்த ஆலமரம் தாங்கி நின்றது. "அம்மா நான் சாகப் போறன்.... எனக்குத் தாங்கேலாது" "என்ரை குஞ்சு உப்பிடிச் சொல்லாதையெணை?"**



**மானுடபுத்ரன்**

தாங்க முடியவில்லை.

வதனாவின் கணவன் வரதன் ஒரு சங்கீதப் பட்டதாரி ஆசிரியர். இரண்டு கண்ணும் குருடு. வெளிச்சமே இல்லாத அவன் விழிகளுக்கு வதனா வாழ்க்கை ஒளி ஏற்றினாள். வதனா வரதனைக் காதலித்தாள். அழகான அவளுக்கு எத்தனையோ வரன்கள் வலிய வந்தும் வரதனுக்காய் அனைத்தையும் தட்டிக்கழித்தாள். வரதன் அழகானவன். முகக் கண்ணாடி அவனது அந்தகத்தை இல்லாமலாக்கியது. உணவு ஊட்டி விடுவதில் இருந்து ஆடை அணிவித்து அழகு பார்ப்பது. வெளியிடங்களுக்கு கச்சேரிக்கு அழைத்துச் செல்வது எல்லாம் வதனா. அவனோடு என்றும் வதனா இணைந்து இணைந்தே... துணையாய் நின்றாள்.

வரதனின் மனதுக்கு இசைந்த மனைவியாக, பாடசாலையில் மாணவர்களுக்கு ஏற்ற ஆசிரியையாக, வீட்டில் குழந்தைகளின் அன்புத் தாயாக வதனாதான், எவ்வளவு அனுபவம் பெற்றிருந்தாள்.

இரண்டாவது நிதர்ஷனாவும் அழுது கொண்டிருந்தாள். பசிக் கொடுமை. வரதனும் மூன்று நாட்களாக எதுவுமில்லாமல் ஒட்டி உலர்ந்து போயிருந்தான். பச்சைக் குழந்தைகளின் அழுகையைத் தாங்கிக் கொள்ளத் திராணி அற்றவனாய் ஒரு புற்றுக்குப் பக்கத்தில் சாக்கொன்றைப் போட்டுப் படுத்துக் கொண்டிருந்தான். நேற்றுப் பெய்த மழையில் சாக்கும் ஈரமாகிக் கிடந்தது.

வதனா நிதர்ஷனாவை இடுப்பில் இடுக்கிக் கொண்டு வரதன் படுத்திருந்த இடத்திற்குப்போனாள். "வரதன் அப்படியே சாக்கிலை பிள்ளையள் இரண்டையும் வைச்சிருங்கோ. உதிலை விளா மரம் ஒண்டு இருக்காம் பாத்திட்டுவாறன்."

★●★

இரண்டு பேரும் கை நிறையச் சம்பளம் எடுத்தவர்கள். வசதியான வீடு, இரண்டு அறைகள், ஒரு ஹோல், ஒரு குசினி, ஒரு சாப்பாட்டு அறை என்று விசாலம். எந்தக் கரைச்சலும் இல்லாமல் இருந்ததுக்குத் தான் யுத்தப் பிசாசு வந்து இந்தக் குருவிகளின் கூடுகளைப் பிய்த்துதறியதோ?

□●□

வரதன் தன் இரு செல்வங்களையும் அணைத்துக் கொண்டான். செல்வி நடுங்கினாள். மேலில் பலமில்லை.

அதுகள் என்ன செய்யும்? அழுவதை மட்டுமே அறிந்த பிஞ்சுகள், வன்னியிலை இருக்கிறவையும் என்ன செய்வது எல்லோருக்கும் உணவுத்தடை.

விளாமரத்தில் பத்துப் பதினைந்து செங்காய்கள் இருந்தன. அதனை தடியால் ஓங்கி அடிப்பதற்கு திராணியில்லாத நாலைந்து பேர் அண்ணாந்து பார்த்து விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தனர். 'ஒண்டையாவது அடிச் செடுத்தால் செல்விக்குக் குடுக்கலாம்.' வதனா நினைத்தாள். சமயம் பார்த்து தொப்பென்று ஒரு பழம் விழுந்தது. ஓடிப்போய் எடுத்தாள். விளாத்தி மரம் அவளது நினைவுகளைக் கிளறிவிட்டது.

★★★

ஷாம்பூ போட்டுத் தோய்த்த கூந்தலைப் பரத்திப் போட்டபடி ஸ்ரீயின் மடியில் வதனா படுத்திருந்தாள். "ஏய் வதனா சிரிக்காதை... உன்ரை பொன்னதரங்கள் வலிக்கப் போகுது..." கெக்கட்டம் போட்டுச்சிரித்தாள். திடீரென்று கட்டிப்பிடித்து ஸ்ரீயின் கன்னத்தில் ஈரமான இதழ் இறுக்கினாள். இனித்தது... இனித்தது... இன்பித்த பொழுதுகள் மறக்க முடியாதவை. "வதனா.. இண்டைக்கு ஒரு பந்தயம் வைப்பமா?"

"ஆ... நான் ரெடி" ஒரு ஆள் இன்னொரு ஆளிட்டை ஐஞ்சு கேள்வி கேக்கிறது. ஐஞ்சு கேள்விக்கும் சரியா பதில் சொல்ல வேணும், கேள்வியள் எல்லாம் தமிழிலை தான், பிழைவிட்டால்- அது ஒரு பிழை எண்டாலும் தோற்கிறவர் இந்த பச்சை விளாங்காய் இரண்டை முண்டி விழுங்க வேணும் சரியா..?"

பந்தயம் ரெடி... வதனாதான் ஸ்ரீயிடம் முதலில் கேள்விகளைக் கேட்டாள். ஸ்ரீ எல்லாக் கேள்விகளுக்கும் விடைகளைச் சரியாய்ச் சொன்னான். அடுத்தது வதனா பதில் சொல்லும் முறை. நான்கு கேள்விகள் சரி... வதனாவிற்கு திருப்தி.

ஐந்தாவது கேட்டான். "அப்பு" என்ற சொல்லின் ஒத்த கருத்து என்ன...?" வதனாவிற்குத் தெரியாமல்விட.. தோல்வி! இரண்டு பச்சை விளாங்காயை உடைத்துப் பாதியாக்கி வதனாவின் முன் வைத்தான். புளி என்றால் வயிற்றையே குமட்டிக் கொண்டு வரும், அவளுக்கு. கண்ணால் காட்டேலாத சமாச்சாரம் புளி. என்ன செய்வது தோல்வியே! தின்றே ஆக வேண்டுமே...! கொஞ்சத்தைக் கடித்துப் பார்த்தாள். சத்தி வரும் போல இருந்தது. அழுதாள். முடியவில்லை, வாய் விட்டு அழுதாள்.

"அப்ப பின்னை கொஞ்சம் லேசாக்குவம் எனக்கு ஐம்பது கிஸ் தா."

சின்ன வயதிலேயே யுத்தம் ஸ்ரீயைப் பலி கொண்டபோது அவள் துடித்துத் தான் போனாள். நெஞ்சம் நினைவுகளை நெருடியது.

❁ ❁ ❁

"செல்வி இஞ்சை வாங்கோ. இதிலை ஒரு விளாம்பழம் இருக்கு சாப்பிடுங்கோ." செல்வி ஆவலுடன் ஓடிவந்தாள். பாதியை மூத்த பிள்ளைக்கும் மற்றப் பாதியை இரண்டாவதற்கும் கொடுத்தாள்.

கம்பஸில் படிக்கும் போதுதான் வதனாவிற்கு வரதனின் பழக்கம் ஏற்பட்டது. கண் பார்வை அவர்களின் அன்புக்கு முன்னால் அவசியமற்றதாகிவிட்டது.

"வதனா..... இஞ்சை கொஞ்சம் வாருமன்."

"என்ன வரதன்."

"என்னாலை இனியெண்டால் தாங்கேலாதாம். பசிக்குது. என்னவாவது ஆரிட்டையாவது கேக்கேலாதே செல்லம்."

"வரதன் இஞ்சை இருக்கிறவையெல்லாம் உப்பிடித்தான் இருக்கினம். என்ரை ராசா உங்களுக்கு நான் என்னத்தை ஆரிட்டை வாங்கித்தாறது?" தன் அன்பான கணவனை ஆதரவாக தனது மடியில் படுக்க வைத்தாள் வதனா.

"வதனா உங்கை எங்கையாவது தண்ணியாவது கிடைக்குமே?"

"மழை நேற்று முந்தநாள் என்று பெய்கிறது. ஆனால் அந்தத் தண்ணீரையாவது சேர்த்து வைப்பதற்கு ஒரு ஏதனம் ஒன்றுமில்லாமல் இருக்கிறது. அல்லோலகல்லோலமாய் ஓடி வந்த மக்களிவர்கள். என்னதான் எடுத்து வந்தார்கள்?"

"என்ரை தொண்டை காஞ்சு போய்க் கிடக்கம்மா..."

"வரதன் இருங்கோ இங்கை காட்டுக்குள்ளை எங்கையெண்டாலும் தண்ணிக் கொடி இருக்குதோ எண்டு தேடிப் பார்த்திட்டு வாறன். நீங்க இந்த இடத்தை விட்டு ஒழும்ப வேண்டாம் சரியா? செல்விக்கும் லேசாக் காச்சல் காயுது."

நுளம்புகளும் தம் பங்குக்கு மலேரியாவைப் பரப்புகின்றன.

மருந்துகளில்லை. உணவில்லை. எங்கே போவார்கள் இந்த மக்கள்? வதனா நடுங்கிய கால்களுடன் தண்ணிக் கொடியைத் தேடிப் போகிறாள்.

வதனா போய் ஒரு மணித்தியாலத்திற்கும் மேலாகிவிட்டது. லேசாகத் தலை சுற்றியது. தாகம், பசி- தொண்டையை நனைக்கக்கூட ஒன்றுமில்லை. வரதன் விரித்திருந்த ஈரமான சாக்கில் சாய்ந்து கொண்டான். வதனா இல்லை. தண்ணீருக்கு அனுப்பியதை மறந்து வதனாவைக் கூப்பிட்டான் வரதன்.

"வதனா....வதனா....இஞ்சை கொஞ்சம் வாம்மா....என்னாலை தாங்க முடியேல்லைம்மா...."

நாக்கு இறுகியது. நெஞ்சு மூச்செடுக்க முடியாமல் அந்தரப்பட்டு அடைத்தது. பசிக் கொடுமை.. செகிடம் இழுப்பது போல இருந்தது. "வா....த...னா...." இதுதான் வரதனின் கடைசி வார்த்தை. பசி அவனைப் பலியெடுத்துவிட்டதை வதனா எவ்வாறு தான் தாங்கப் போகிறாள்? அவளது ஆருயிர் ஜீவன் செத்துவிட்டதைக்கூட யாரும் இதுவரை அறியவில்லை. ஏனெனில் இந்தக் காட்டில் அகதிகளாய் அந்தரிக்கும் எல்லோருமே சாவின் விளிம்பிலேதான் ஊசலாடிக் கொண்டிருக்கிறார்கள்.

மலேரியாக் காய்ச்சல் எக்கணம் செல்வியையும் பலியெடுத்திடுமோ. யுத்தமும் நோய்களும் பட்டினியும் தாக்கித் தொலைக்கும் அவலமான இறப்புக்களின் நடுவிலே இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் சீவித்திருப்பது.....?

# நட்பு

"ஏய் அனு, எழும்படி இன்னுமா தூக்கம்?" எழுப்பிய நண்பி சுஜியை தூக்கக்கலக்கத்திலூடே முறைத்துப் பார்த்தாள் அனு. "ரெம்பத்தான் முறைக்காதே வயசு போயிடும்." என்று கூறிய நண்பியை அடிப்பதாக எழுவது போல் பாவனை செய்தாள் அனு. பதிலுக்கு தானும் பயப்படுவது போல் ஓடினாள் சுஜி. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்தார்கள்.

"சரி, சரி ஒஃபீசுக்கு நேரமாச்சு சுறுக்காக்



குளிச்சிட்டுக் கிளம்பு. நான் குளிச்சிட்டன்."

"நீ எப்பயடி எழுந்தாய்? எப்ப குளிச்சாய்? வர்றவருக்கு பிரச்சனையில்லையப்பா." கூறிவிட்டு அனு ஒரே ஓட்டமாக பாத்றூமிற்குள் நுழைந்தாள்.

அனுவும் சுஜியும் யாழ்ப்பாணத்தில் ஒரே பள்ளியில்- ஒரே வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் போதே இருவருக்குமிடையில் நெருங்கிய நட்பு நிலவியது. 'ஓர் உயிர் ஈருடல்' போல் இருவரும் அன்பாகப் பழகினார்கள். பாடசாலையோடு இவர்களது நட்பு முடிவடையவில்லை. இருவரின் நட்பின் காரணமாக இவர்களது குடும்பங்களும் நன்றாகப் பழக்கமாயின. பரீட்சை எடுத்து முடிந்ததும் முடிவை எதிர்ப்பார்த்திருந்தார்கள். அனுவும், சுஜியும் முன்கூட்டியே தங்களின் பெற்றோரிடம் சம்மதம் கேட்டு வைத்தார்கள். அதாவது 'எந்த ஊரில் வேலை கிடைத்தாலும் இருவரும் ஒரே ரூமில் தங்கியிருந்துதான் வேலைக்குச் செல்வோம்' என்று. அதன்படியே இருவரின் பரீட்சை முடிவுகள் நன்றாக அமைய கொழும்பில் ஒரு ரூம் வாடகைக்கு எடுத்து அதில் தங்கி வேலைக்குச் செல்கின்றார்கள்.

"ஹாய் சுஜி" குரல் கேட்டு இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். பிரதீப் வந்து கொண்டிருந்தான். பிரதீப்பும் இவர்கள் வேலை செய்யும் ஒஃபிசில் தான் மனேஜராக இருக்கின்றான். மூவருமாக பஸ்தரிப்பிற்கு வந்தார்கள். இடையிடையே பிரதீப் அனுவைக் கவனித்தான். என்னவோ தெரியவில்லை. அவனுக்கு அனுவைப் பார்க்கும் போதெல்லாம் ஓர் இனம் புரியாத தவிப்பு.

அவனின் மனம் அனுவின்மேல் அன்பு கொண்டது. ஆனால் அனுவோ தானுண்டு தன்வேலையுண்டு என்று இருப்பவள். அவளுக்கு இந்தக் காதல் கத்தரிக்காய் எல்லாம் பிடிக்காத விசயம். ஆனால், சுஜியின் மனம் பிரதீப்பை நாடியது. அவன் மீது அன்பு கொண்டது. பஸ் வந்ததும் மூவரும் தொற்றிக்கொண்டார்கள்.

மாலையில் திரும்பும் போதும் மூவரும் ஒன்றாகவே பஸ்சில் வந்தனர்.

**அ. அனித்தா**

"ஏய் அனு நான் கடைக்குப்போய் ரவை வாங்கி வருகிறேன்; கொஞ்சம் இரு." என்றுவிட்டு சுஜி கடைக்குச் சென்று விட்டாள். புத்தகங்களை அடுக்குவதில் மும்முரமாக இருந்த அனுவின் கண்ணில் பட்டது அந்த டயறி. சுஜியினுடையது. திறந்த நிலையில் விழுந்திருந்த டயறியின் பக்கத்தில் அந்த வரிகள் இருந்தன. 'எனது உள்ளம் ஏனோ தெரியவில்லை. பிரதீப்பை நாடுகின்றது. ஆனால்...' மீதியை வாசிக்காமலே டயறியை மூடி வைத்துவிட்டு சிந்தித்தாள்.

அதற்குள் சுஜி கடையிலிருந்து வந்துவிட்டாள். "அனு நான் உப்பு வாங்க மறந்திட்டேன். கொஞ்சம் வாங்கி வாவன்," என்று கேட்ட நண்பியிடம் காசைவாங்கிக் கொண்டு கடைவீதிக்குச் சென்றாள். அங்கே பிரதீப்பைப் பார்த்ததும் மிகுந்த மகிழ்ச்சியாக இருந்தது.

"ஹலோ பிரதீப்! உங்க கூட கொஞ்சம் போசணும்" என்று கூறிய அனுவைப் பார்த்து பிரதீப் மகிழ்ந்து போனான். "என்ன விசயம் அனு?" என்று கேட்டவனின் மனதில் பெரும் தவிப்பு. ஆனால் அனு கூறிய ஒவ்வொரு வார்த்தையும் நெஞ்சில் அம்பாய்ப் பாய்ந்தது.

"அனு நீங்க உங்க மனசில என்ன நினைக்கிறிங்களோ தெரியாது. ஆனால் என் மனசில இருக்கிறத சொல்லுறன். நான் மனசாலகூட சுஜியை நினைக்கவில்லை. உங்களத்தான் நான் விரும்..." வார்த்தைகள் வரமுடியாது தவித்தான்.

அனுவிற்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. "மிஸ்ரர் பிரதீப்! நான் உங்களை ஒரு நல்ல நண்பனாத்தான் நினைச்சேன். தயவு செய்து என்னை மறந்திடுங்க. என் நண்பிக்குக் கிடைக்காத, அதுவும் அவள் விரும்பிய நீங்கள் அவளுக்குத்தான் சொந்தம். அவளுக்குரியதை நான் எடுத்துக் கொள்ள மாட்டேன். குட்பை!" என்று கூறி விட்டுப் போகும் அனுவையே வைத்தகண் வாங்காது பார்த்துக்கொண்டிருந்தான் பிரதீப்.

# தாலி

அன்று ஞாயிற்றுக்கிழமை. இன்னும் ஒரு மணிநேரத்தில் நடக்கப்போகும் நாடகத்துக்காகத் தன்னை ஒப்பனை செய்து கொண்டிருந்தாள் சத்யா.

அவளைப் பெண்பார்க்கும் படலம். இத்தோடு ஆறாவது முறை- அவள் அலுத்துப் போனாள். இந்தக் காட்சியின் கடைசி முடிவு சோகம் என்பது அவளுக்கு மட்டுமல்ல, அவள் குடும்பத்துக்கே தெரிந்த விஷயம்.

சத்யா ஒரு ஆசிரியை. அவள் வருமானத்தில்தான் குடும்பவண்டி ஓடுகிறது. வயதான அப்பா; வாய் பேசமுடியாத ஊமைத் தங்கை; வீட்டுக் கொல்லையில் இருந்து வள் வள் என்று அடிக்கடி குரல் கொடுக்கும் நாய்; இதைத் தவிர வேறு ஜீவன்கள் இல்லை. சத்யாவைக் கலியாணம் பண்ணி வைத்துவிட்டால் குடும்ப நிலை ஆட்டங்காணும் என்று இராமநாதனுக்குத் தெரிந்தாலும் மகளைக் கலியாணம் செய்து வைக்காமல் இருக்க முடியுமா என்ன?

பிரபு அவளைப் பெண்பார்க்கத் தன் நண்பனோடு வந்தான். அவனுடைய உடை நடை பாவனை, வந்திறங்கிய வாகனம் அவனது அந்தஸ்துக்குக் கட்டியங் கூறின. இராமநாதன் பூரித்துப்போனார். சத்யா நிலம்பார்த்துத் தேவதையாய் நடந்து வந்து நமஸ்கரித்துச் சென்றாள். பிரபு என்ன சொல்லப்போகிறானோ என்று இதயம் படபடக்க இருந்த இராமநாதனுக்குப் பிரபுவின் பதில் வயிற்றில் பாலை வார்த்தது.

"எனக்கு இந்தக் கலியாணத்தில் பூரண சம்மதம்; சீர் வரிசை என்று நான் கேட்கப்போவதில்லை. சொந்த பந்தங்கள் என்று சொல்லக்கூடியதாக எனக்கு இங்கு யாருமில்லை. அமைதியான சடங்குகள் போதும்."

ஐயர் வேதம் ஓத, கெட்டி மேளம் ஒலிக்க அக்கினி சாட்சியாக அம்பாள் கோயிலில் சத்யாவின் கழுத்தில் தாலி கட்டித் தன் மனைவியாக்கிக் கொண்டான்.

✱✱✱

**சத்யாவின் கண்கள் தன்னை ஊடுருவிப் பார்ப்பதை உணர்ந்தான். தன் அந்தரங்கத்தை மூடிமறைக்க அவன் விரும்பவில்லை.**

பாடசாலைவிட்டு வந்த சத்யா சிறிது நேரம் தோட்டப் பக்கம் பார்வையைச் செலுத்தினாள்.

பருத்திக் காய்கள் வெடித்துக் காற்றில் பஞ்சாகப்பறப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள் அவள் தங்கை.

வேப்பமரத்தின் ஒரு தாழ்ந்த கிளையில் கட்டியிருந்த ஊஞ்சலில் உட்கார்ந்து ஆடவேண்டும் போல் இருந்தது சத்யாவுக்கு.

கிர்.....கிர்.....

ஊஞ்சல் ஆடியது.

சத்யாவின் சிந்தனை தன் முதலிரவை அசை போடுவதில் தீவிரமடைந்தது.

ஒரு வித்தியாசமான முதலிரவைச் சந்தித்த அனுபவம் அவளுக்கு. அந்த இரவுக்கு நாணிக்கோணி நின்றவள் அந்தப் பள்ளி அறையிலும் பாடசாலை மாணவனைப் போல் தலைகுனிந்திருந்த பிரபுவைக் கண்டு வியப்படைந்தாள். நீண்ட நேர மௌனத்தை அவனே கலைத்தான்.

"உன் அப்பாவுக்குச் சொன்னதுபோல் நான் ஒரு கடைக்குச் சொந்தக்காரனில்லை. சிறு வயதில் இருந்தே சூதாட்டத்துக்கு அடிமையாகிப்போனேன். இந்த உடை நடை எல்லாம் ஊரை ஏமாற்றிப் பிழைக்க நான் போட்ட வேஷங்கள். இதற்குத் துணையாக இருந்தவன் என் நண்பன்."

சத்யா அசையவில்லை. அவன் தொடர்ந்தான்.

"பத்திரிகையில் உன் அப்பா போட்ட விளம்பரத்துக்கு என்னைப்பற்றி நானே உசத்தியாக எழுதினேன். அவரும் நம்பிவிட்டார். என்னைப் பற்றி அறிந்து கொள்வது கடினம். இடத்துக்கும் ஆட்களுக்கும் அமைய என் பெயரும் வேறுபடும்."

பிரபு நிமிர்ந்தபோது சத்யாவின் கண்கள் தன்னை ஊடுருவுவதுபோல் உணர்ந்தான். தன் அந்தரங்கத்தை மூடிமறைக்க அவன் விரும்பவில்லை.

"இன்னும் சொல்லப்போனால் கிழிந்த பாய்களிலும் பட்டுமெத்தைகளிலும் நான் செய்த பாவங்கள் கணக்கிலடங்கா. நேற்று வரை நான் இப்படித்தான். நாளை என்னாகும் என்று சொல்லமுடியாது. ஏன் என்றால் நான் ஆம்பிளை. என்னை அனுசரித்துப் போகவேண்டியது நீதான்!" பிரபு சொல்லி முடித்துக்கொண்டு அவளைப்பார்த்தான். அவள் கழுத்து சுருக்கில் மாட்டிவிட்டது போல் இருந்தது சத்யாவுக்கு.

சத்யா அழவில்லை. ஆழமாகச் சிந்தித்தாள். "எந்தக் கயவனும் தாலி ஒன்றைக் கட்டுவதால் கணவன் என்ற அந்தஸ்த்தைப் பெற்றுவிடுகிறான். எந்த நிலையிலும் கணவன் என்று வந்தவனை ஏற்றுத் தன்



**ரூபராணி**

வாழ்வை நசுக்கிக் கொள்ளப் பிறந்தவள்தான் மனைவியா? இதற்கு ஐயர், வேதம், அம்மி, கெட்டிமேளம் தேவைதானா...?' சத்யாவின் சிந்தனை இப்படித்தான் ஓடியது.... 'ஏமாறுபவர்கள் இருக்கும்வரை ஏமாற்றுபவர்கள் ஒழியப்போவதில்லை.' கல்லையும் புல்லையும் புருஷனாக ஏற்க அவள் விரும்பவில்லை. இந்தச் சமூகம் சொல்லப்போகும் கிசு கிசுக்களை எதிர்கொள்ள அவள் தயாராகிவிட்டாள்.

"தாலி வெறுமனே ஒரு அடையாளந்தான். அதனை அணிபவளையும் அணிவிப்பவனையும் பொறுத்தே அது புனிதமடைகிறது."

பிரபு கட்டிய தாலி பாம்பாக அவள் கழுத்தில் ஊர்ந்தது. எதுவித பதட்டமும் இன்றி அதைக் கழற்றி அவனிடமே கொடுத்தாள். அவளுடைய பார்வை அவனை விரட்டியது.

ஊஞ்சலின் ஆட்டம் நின்றுவிட்டது. நினைவுகளை அறுத்துக் கொண்டவள் நிம்மதிப் பெருமூச்சுவிட்டாள்.

www.padippakam.com

# இலக்கிய நயம்

## தருவது ரசிகன்

# மாலை மயக்கம்

ஆயனின் புல்லாங்குழல் ஓசை,
மாலைப் பொழுதுக்கு முன்னறிவிப்பு.
மேய்ந்த ஆடுகள் திரும்பி வருகின்றன.
மாய்ந்து உழைத்தவர் வீடு திரும்புகின்றனர்.

"மயக்கும் மாலை மன்மதச் சோலை
வியக்கும் நிலவு வெளிவரும் நேரம்
தொடங்கும் தொடங்கும் மன்மதப்பாடம்
விளங்கும் விளங்கும் இரகசியமெல்லாம்."
புல்லாங்குழலில் ஆயனின் கவிதை!

கவிதை கேட்ட கன்னிப் பெண்கள்
வெட்கத்திரையை முகத்தில் விரித்தனர்.
கவிதை புரிந்த காதல் மனைவியர்
வெள்ளி நகையை வீசி ரசித்தனர்.

"ஆடு மேய்க்கும் ஆயன்-உனக்கு
ஆசை மிக அதிகம்."
ஒருத்தி கேலி வீசிப் போனாள்.

"மேடு பள்ளம் அறிந்து மேய்ப்பதிலே சூரன்
ஆடு மேய்ப்பதிலே சூரன்"
என்று முடித்தான் அவள் முறைப்புக்கண்டு!
முறைத்தவள் முகம் மலர்ந்து சென்றாள்.

மாலை என்றதும் இத்தனை மகிழ்வா?
மாதவி மட்டும் மாலையை இகழ்ந்தாள்!
காலையில் அவள் காதலன் சென்றான்
வேலையின் நிமித்தம் வெளியூர்ப் பயணம்.

விடைதர முன்னர் விழிநீர் சிந்தினாள்.
மடைதிறந்த வெள்ளமாய்-அவனோ
வாதங்களை அடுக்கினான்!

"பிரிவும் ஒரு வரம்-அடியே
பிரிவும் ஒரு வரம்."

"வரமல்ல அத்தான்! மனதை
தேய்க்கும் அரம்!"

"போடி பைத்தியக்காரி-பொருள்
சொல்கிறேன் செவி கொடு.
உதடுகள் பிரிந்தால்தானே
வார்த்தைகள் என்றவரம் கிடைக்கிறது.
கதவுகள் பிரிந்தால்தானே
வரவுக்கான பாதை கிடைக்கிறது.
கருப்பையிலிருந்து பிரிந்தால்தானே
வாழ்க்கை என்ற வரம் கிடைக்கிறது!
பார்த்தாயா மாதவி-பிரிவில்
எத்தனை பெரும்பலன் கிடைக்கிறது!

உடனே மாதவி உதடு திறந்தாள்.
"இரண்டு கைகள் இணைந்தால்தானே
ஓசை கேட்கிறது!"

"இல்லையடி மாதவி,
உள்ளங்கைகள் இரண்டும்
பிரிந்து பிரிந்து சேரும்போதுதான்
ஓசை கேட்கிறது.
உறவு-பிரிவு இரண்டுமில்லாமல்
ஓசையும் எழாது-காதல்
வாழ்க்கையில் ஆசையும் எழாது!"



"ஓ.கோ.. ஓகோ..
ஒன்றாயிருந்ததால் உங்களுக்கு
ஒடிந்துபோனதோ என்மேல் ஆசை?
மோகம் முப்பது நாள் ஆசை அறுபதுநாள்
உங்கள் கணக்கும் அதுதானோ?"
சிவந்தாள்-சீறினாள்!

"தப்பாக எண்ணி துப்பாதே கோபத்தை!
நிலத்தோடு எப்போதும் நீர்சேரும்.
வளத்தோடு உள்ள நிலத்தில்
பெய்யும் மழைக்கு இல்லாத அருமை
வறண்ட நிலத்தில் பெய்யும் மழைக்கு
உண்டன்றோ கண்மணி?"

வாதம் வேடிக்கையாகவும் இருந்தது;
பிரிவுக்கு நியாயம் என்பதால்
வேதனையாகவும் இருந்தது!

"பிரிவை வரமாக்கிக் கொள்வோம்
பிரிவை உறவுக்கு உரமாக்கிக் கொள்வோம்.
உறைவிட்டு வாள் கிளம்பினால்தான்
களத்தில் வீரம் விளைகிறது.
உன்னைவிட்டு நான் பிரியும் போதுதான்
காதலின் வீரியம் வெளிப்படுகிறது.
நீயில்லாமல் நான் இல்லை-என்னும்
சேதி நெஞ்சுக்குப் புரிகிறது!"

"கொடியைப் பிரிந்த மலர்
வாடாதிருக்குமோ?
மரத்தைப் பிரிந்த கனி
மாளாதிருக்குமோ?
உயிரைப் பிரிந்த உடல்
உக்காதிருக்குமோ?"
கன்னங்கள் வழியே கண்ணீர் முத்துக்கள்.
கலங்கி நின்றாள் காதல் பெண்ணாள்!

தேற்றினான். தீஞ்சுவைக் கன்னத்தில்
சிதறிய முத்துக்களை
உதடுகளால் ஒற்றியெடுத்தான்!

"எண்ணி மூன்றே நாள்
கள்ளி உன்னெதிரே நான்!"
சொல்லிவிட்டுப் பறந்து போனான்.
காலையில்தான் போனான் கட்டழகன்.

இணைந்தே சந்தித்தால் மாலை இனிக்கும்.
கலந்தே இருந்து நிலவை ரசிக்கலாம்.
பிணைந்தே சிந்தித்தால் கவிதை வடிக்கலாம்.
விழுந்தே கிடந்து காதல் கடலில் மிதக்கலாம்.

"பளிங்கு மேனியிது படகானதோ
புலன்கள் யாவுமே பதமானதோ"
அவன் வியப்பான். அவன் வியர்ப்பான்!
வான்நிலவு வெட்கப்பட்டு முகம் மறைக்க
தேன் கனியிதழ்கள் சிறைப்பட்டு வதைய
மாங்கனி மேனி வெட்கத்தில் சிவக்கும்!

இன்றது இல்லை. இனியது இல்லை.
கனன்றது தேகம் பிரிவையெண்ணி.
சுகத்தை இழந்து துயரத்தில் இருக்க
அகத்தில் சோகமாய் ஒருத்தி வந்தாள்.

"யார் நீ?" என்றாள் மாதவிப் பெண்ணாள்.
"நான்தான் மாலைப் பெண்ணாள்"
என்றாள் புதிதாய் வந்தவள்.

"நீ தான் மாலையோ?
நின் முகத்தில் என்ன சோகமோ?
பிரிவென்னும் அம்பை
என்னவர் எய்தார்- உனக்கும்
உன்னவர் அம்புதான் தைத்ததோ?"
மாதவி வினவினாள்.

மாலைப் பெண்ணாள்
மங்கிய முகத்தோடு உரைத்தாள்.
"கதிரவன் என் காதலன்.
உயிரே என்றார்-இதுவரையிருந்து
என்னுடன் ஆடிக் கூடிக் குலவினார்.
நெருப்பென அவர் உடல்
விருப்பென என்மேல் மேவி மகிழ்ந்தது.
கரும்பென நானும் களிப்பினில் இருக்க
திடும்மென ஓடி அடிவானில் ஒளிந்தார்.
துரும்பென நானும் இளைத்துப்போனேன்.
துயரினில் நன்றாய் தோய்ந்து போனேன்"
மாலைப் பெண்ணாள் தேம்பி அழுதாள்.

மாதவி பாவம்
இரு தலைக் கொள்ளி எறும்பாயானாள்.
வாடும் தன் நெஞ்சை தேற்றுவதா-சோகம்
பாடும் மாலைப் பெண்ணுக்கு
மன ஆறுதல் சொல்லுவதா?

"மயங்கிய மாலைப் பெண்ணே!
உன்னவரும் என்னவர் போலானாரே
இரக்கமில்லா இதயமானாரே-அதுதான்
துயரம் உன்னையும் சூழ்ந்தது!"

காதலனைப் பிரிந்த காதலி
மாலைப் பெண்ணுக்கு சொன்ன தேறுதல்
திருக்குறளிலும் இல்லாமல் போகுமோ.
இதோ இருக்கிறது.
"புன் கண்ணை வாழி மருள்மாலை
—எம்கேள் போல்
வன் கண்ண தோநின் துணை"
குறள்-1222, அதிகாரம்-123

# கும்ளே உலக சாதனை

ஜெய்ப்பூரில் இந்தியா-தென் ஆபிரிக்கா அணிகளுக்கிடையே நடந்த ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ளேயும், தென்னாபிரிக்க துடுப்பாட்ட வீரர் கேரி கேர்ஸ்டனும் புதிய உலக சாதனை படைத்தனர்.

இதற்கு முன்பு ஒரு வருடத்தில் ஒரு நாள் ஆட்டங்களில் பந்து வீச்சில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியவர் என்ற உலக சாதனையை அவுஸ்திரேலியாவின் ஷேன் வோர்ன் செய்திருந்தார். இவர் 1994ம் ஆண்டு 29 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 50 விக்கெட்டுக்களை வீழ்த்தியதுதான் சாதனையாக இருந்தது.

இதை ஜெய்ப்பூர் போட்டியில் அனில் கும்ளே முறியடித்தார். இந்த ஆண்டு, இதுவரை தான் விளையாடியுள்ள 27 ஒருநாள் போட்டிகள் மூலம் கும்ளே 51 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி புதிய உலக சாதனையை நிகழ்த்தினார்.



கேரி கேர்ஸ்டன்

இதேபோல் ரன் சேர்ப்பதில் தென் ஆபிரிக்க வீரர் கேரி கேர்ஸ்டன், மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வீரர் பிரைன் லாரா-1993ம் ஆண்டு நிகழ்த்தியிருந்த சாதனையை முறியடித்தார்.

ஒருநாள் போட்டிகளில் பிரைன் லாரா ஒரு வருடத்தில் குவித்த 1349 ரன்கள் தான் உலக சாதனையாக இருந்தது. இச்சாதனையும் ஜெய்ப்பூர் போட்டியில் கேரி கேர்ஸ்டனால் முறியடிக்கப்பட்டது. இந்த ஆண்டு இதுவரை (ஜெய்ப்பூர் போட்டி வரை) 24 ஒரு நாள் போட்டிகளில் விளையாடியுள்ள கேர்ஸ்டன் 6 சதங்கள் உட்பட 1352 ரன்கள் குவித்து சாதனை படைத்துள்ளார்.

# இந்திய-தென் ஆபிரிக்க டெஸ்ட் தொடர்

இந்தியாவுக்குச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருக்கும் தென் ஆபிரிக்க அணி, 'டைட்டன் கோப்பை'ப் போட்டியில் விளையாடி வருகிறது. 'டைட்டன் கோப்பை'க்கான ஒரு நாள் போட்டிகள் முடிவடைந்ததும் தென் ஆபிரிக்க அணி, இந்திய அணியுடன் மூன்று டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது.

இது முடிவடைந்ததும் டிசம்பர் மாத நடுப்பகுதியில் இந்திய அணி, தென் ஆபிரிக்காவுக்குச் செல்லவிருக்கிறது. அங்கு தென் ஆபிரிக்க அணியுடன் மூன்று டெஸ்ட் போட்டிகளிலும், மூன்று நாடுகள் கலந்து கொள்ளும் ஒரு நாள் போட்டிகளிலும் விளையாடவுள்ளது.

இந்தியாவில், இந்திய- தென் ஆபிரிக்க அணிகள் விளையாடும் டெஸ்ட் போட்டிக்கான அட்டவணை விபரம்:

**நவம்பர் 20-24. 1வது டெஸ்ட்-அகமதாபாத்**
**நவம்பர் 27-டிச.01. 2வது டெஸ்ட்-கல்கத்தா**
**டிசம்பர் 08-12. 3வது டெஸ்ட்-கான்பூர்.**

# 14 வயதில் ஒரு கிரிக்கெட்வீரர்

டெஸ்ட் கிரிக்கெட்டில் மிக இளம் வயதில் விளையாடியவர் என்ற சாதனைக்குரியவராக இருந்தவர் பாகிஸ்தான் வீரர் முஷ்டாக் அகமட். இவர் 1958ம் ஆண்டு தனது 15வது வயதில் டெஸ்ட் போட்டியில் விளையாடியதே இதுவரை காலமும் உலக சாதனையாக இருந்து வந்தது.

இந்தச் சாதனையை பாகிஸ்தானின் 14 வயது இளம் வீரர் ஹசன் ராஜா எட்டினார். அண்மையில் பாகிஸ்தான்- ஸிம்பாப்வே அணிகளுக்கிடையே நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட்போட்டியில் ஹசன் ராஜா கலந்து கொண்டு, குறைந்த வயதில் டெஸ்ட் போட்டியில் விளையாடிய வீரர் என்ற உலக சாதனையை நிகழ்த்தினார்.

# சிந்தியா பதில்கள்

★ சூரியகந்த புதைகுழி எலும்புக்கூடுகள்- செம்மணிப் புதை குழிச் சடலங்கள்- என்ன வித்தியாசம்?

வி.மணிமாறன், கொழும்பு-9.

முன்னையது இணையற்ற வெற்றிக்கு பிரசாரமாக அமைந்தது. பின்னையது இரண்டுமணி நேரத்துக்குள் தகன உத்தரவால் தடயமே இல்லாமல் போய்விட்டது.

★ இவ்வுலகில் நிலையானது எது? நிலையில்லாதது எது?

ஜெ.யூட் கிலேரியன், மட்டக்களப்பு.

நிலையானது- மரணம். நிலையில்லாதது- வாழ்க்கை.

★ சிந்தியா! ஜனாதிபதி சொன்னதாக ஆங்கிலப் பத்திரிகை ஒன்று வெளியிட்ட செய்திக்கு அரசு மறுப்பு விடுத்துள்ளதே?

கே.சத்தியசீலன், மொரட்டுவ.

மறுப்பு இருக்கட்டும். அதில் எனக்கொரு வருத்தம் என்ன தெரியுமா? உள்நாட்டில் அச்செய்தி வெளியானது தொடர்பான கவலையைவிட வெளிநாட்டுப் பத்திரிகைகளும் அதனை போட்டுத் தள்ளிவிட்டனவே என்றுதான் அரசாங்கம் அதிகம் கவலைப்பட்டிருக்கிறது. உள்நாட்டு மக்கள் மத்தியில் அச்செய்தியால் ஏற்படும் மனநிலைகள் குறித்து போதிய கவனம் இல்லாமல் போய்விட்டதே!

★ அமைச்சர் அஷ்ரப்புக்கும் பொதுஜன முன்னணிக்கும் இடையில் ஏற்பட்ட பிணக்குப் பற்றி என்ன நினைக்கிறீர்?

எச்.எம். நூர்தீன், கல்முனை.

ஊடினர். கூடினர். அதனை சீரியசான விஷயமாக எடுத்து ஆராய்ந்து பரபரப்பு தேடியோர் வாடினர். ஊடலும், கூடலும் அரசியலிலும் ஒரு கலைதானுங்க.

★ அதிகமான திரைப்படங்களில் கவுண்டமணியிடம் செந்தில் உதை வாங்குவது ஏன்?

மு.கேதீஸ்வரன், பறகடுவை.

உதைவாங்கினால்தான் ஊதியம் கிடைக்கும் என்பதால்.

★ தீபாவளிக்காக ஒரு சிந்தனை சொல்லுங்கள் பார்ப்போம்?

சி.பிரதீபன், கண்டி.

நரகாசூரனை வதம் செய்ததாக மகிழ்ந்து கூத்தாடக்கூடிய காலத்தில்தானா நாம் இருக்கிறோம்? நம் கண்முன்னால் எத்தனை எத்தனை நரகாசூரர்கள்! கிருஷ்ணனும் சத்யபாமாவும் கட்டாய லீவில் போய்விட்டார்களோ?

★ சிந்தியா! அழகால் ஆபத்து என்று சொல்கிறார்களே நம்பலாமா?

செல்வி எம்.குமுதினி, பசறை

இக்கதையைக் கேட்டுவிட்டு முடிவுக்கு வாருங்கள்.

இரண்டாம் உலகப்போர் படு அகோரமாக நடந்துகொண்டிருந்தபோது, ஹிட்லரிடம் அதிகாரிகள் ஒரு யோசனை சொன்னார்கள்.

"சுவிட்ஸர்லாந்தைக் கைப்பற்ற வேண்டும். உத்தரவிடுங்கள். படையை அனுப்பி எண்ணி ஒருவாரத்தில் பிடித்துக் காட்டுகிறோம்!" என்றார்கள்.

அதற்கு ஹிட்லர் என்ன சொன்னார் தெரியுமா?

"சுவிட்ஸர்லாந்து ஒரு அழகான நாடு. அதை அழித்துவிடக்கூடாது. நாம் ஓய்வு எடுக்கவும், உல்லாசமாக இருக்கவும் அந்த அழகான நாட்டை விட்டுவைப்போம்!" என்றார்.

அழகுதான் சுவிட்ஸர்லாந்து மக்களை ஆபத்தில் இருந்து காப்பாற்றியது.

★ சிந்தியா! நெத்தியடியான ஒரு குட்டிக்கதை சொல்லுங்களேன்?

எம்.எம்.ஜிப்ரி, பாணந்துறை.



ஓஷோ சொன்ன கதையொன்று:

ஒரு பெண்மணி இருந்தார். 40 வயது. திருமணமே வேண்டாம் என்று சபதம் செய்துவிட்டு தனியாகத்தான் வீட்டில் தங்கியிருந்தார்.

ஒருநாள் நள்ளிரவு நேரத்தில் இளம் திருடன் ஒருத்தன் அவர் வீட்டுக்குள் புகுந்துவிட்டான். அந்த வீட்டில் இருந்து பொலிஸ் நிலையத்துக்கு ஒரு ஃபோன் வந்தது.

"ஐயோ ஐயோ! விரைவாக வாருங்கள். இங்கே ஒரு பெண்ணின் அறைக்குள் ஒரு திருடன் புகுந்து சிக்கிக்கொண்டான்."

"இதோ பத்து நிமிடத்தில் வருகிறோம். சரி, நீங்கள் யார் பேசுகிறீர்கள்?" என்று கேட்டார் காவல் அதிகாரி.

"நான்தான் திருடன் பேசுகிறேன்," என்று பதில் வந்தது.

★ இந்திய அணி அடிக்கடி தோல்வியைத் தழுவுவது ஏன்?

கே.முகுந்தன், திருகோணமலை.

தாம் மட்டும் வென்றால் போதுமா என்ற நல்லெண்ணம்தான். டைட்டன் கிண்ணத்துக்காக தென்னாபிரிக்காவுடன் நடந்த இரண்டாவது போட்டியில் இந்திய அணி எப்படி ஒரு நிதானமாகத் தோற்றது தெரியுமா? அட அடா!

★ இந்திய அணியில் மீண்டும் சித்து சேர்த்துக் கொள்ளப்படுவாரா?

எம்.சகாயராசா, நீர்கொழும்பு.

சேர்த்தாச்! சித்துவை விட்டால் டெண்டுல்கருடன் முதலில் களம் இறங்க வேறு நல்ல ஜோடி கிடைக்கவில்லை. சுஜித் சோமசுந்தர் என்றொரு புதுமுகம் வந்தார். பத்து ரன்களுக்கு மேல் எடுப்பதில்லை என்ற திட்டவட்டமான முடிவோடு ஆடி வெறுப்பூட்டினார். பின்னர் கங்குலியை இறக்கினார்கள். அவருக்கு அகோரப்பசி. நூறு பந்துகளை சாப்பிட்டுவிட்டு 50 ஓட்டங்களை சேர்த்துக்கொடுத்தார். வெறுத்துப்போய் சித்துவுக்கு பச்சைக் கொடி காட்டிவிட்டார்கள்.

★ 'பட்ஜெட்' பாரமாக இருக்காதாமே? நீர் என்ன நினைக்கிறீர்?

கு.கேசவன், குருநாகல்.

அதேதான் நினைக்கிறேன். பாரமாக இருந்தால் பிரதி நிதியமைச்சர் அதனைச் சூட்கேஸில் போட்டு எப்படித்தான் தூக்கிச் செல்வதாம்?! தூக்கக்கூடிய பாரமாகத்தான் இருக்கும். அந்த உறுதியை அமைச்சருக்கு வழங்கும் வகையில்தான் ஜனாதிபதியும் கருத்துச் சொல்லியிருக்கிறார்.

★ காதலிக்க எங்கே கற்றுக்கொள்ளலாம்?

ஆ.ஜெயரூபன், மன்னார்.

கற்றுக்கொள்ளத் தேவையில்லை. தொட்டுக்கொள்ளத் தெரிந்தால் போதும். எதை? மனதை!

★ நடிகைகள் எதற்கும் துணிந்தவர்களாக இருப்பார்களோ?

வி.எஸ்.கே, மாத்தளை.

ஆம்! துணிவிடயத்தில்!

★ ஸ்ரீதேவியின் சகோதரி மகேஸ்வரியும் இரசிகர்கள் மனதில் இடம்பிடிப்பாரா?

சா.பாலச்சந்திரன், கொழும்பு-5

மகேஸ்வரி பிடிக்க வேண்டிய இடத்தைப் பிடித்துவிட்டார். அது சக்கரவர்த்தியின் மனசு!

★ சிந்தியா! நான் ஒல்லியாக இருப்பதாக நண்பிகள் கேலி செய்கிறார்களே! என்ன செய்யலாம்?

மாதவி, வவுனியா.

சிங், சென் என்று இரு நண்பர்கள். ஒருவர் ஒல்லியாக இருப்பார். இன்னொருவர் குண்டாக இருப்பார்.

"உன்னைப் பார்த்தால் வெளிநாட்டார் என்ன நினைப்பார்கள்? நம் நாடு பஞ்சத்தில் அடிபட்ட நாடாகத்தானே நினைப்பார்கள்". என்றான் சென்.

அதற்கு சிங் என்ன சொன்னான் தெரியுமா?

"ஒத்துக்கொள்கிறேன். உன்னைப் பார்த்தால் அந்தப் பஞ்சத்துக்கான காரணத்தை அறிந்து கொள்வார்கள்."

★ கொழும்பில் பிரபாகரனின் படம் போட்ட சுவரொட்டிகள் காணப்படுகிறதே? தேவை தானா?

க.சிவசுப்பிரமணியம், கொழும்பு-6.

வெண் தாமரை இயக்கத்திற்கும் வேலை வேணும்தானே! சுவரொட்டி வாசகம்தான்- 'கரணம் தப்பினால் மரணம்' ரகம்.

'இவர் அழிப்பது எமது எதிர்காலம்' என்பது வாசகம். அந்த 'ழி' மட்டும் 'ளி' யாக மாறியிருந்தால் அர்த்தமே மாறியிருக்கும்.

★ இப்போதெல்லாம் சின்ன நோய் என்றாலும் டாக்டர்கள் கட்டணம் அதிகம் வசூலிக்கிறார்களே? நியாயமா?

ஐ.முஸ்தபா, காத்தான்குடி.

அடிக்கடி கொட்டாவி வருகிறது என்று டாக்டரிடம் போனார் ஒருத்தர்.

அவரை நாற்காலியில் சாய வைத்து 'வாயைத் திறவுங்க' என்றார் டாக்டர். ஏதோ கொஞ்சம் மருந்தை வாய்க்குள்ளே விட்டார். மூடுங்க என்றார். டாக்டர் வெளியே போய்விட்டு வந்தார். நோயாளி வாயைத் திறந்தபடியே இருந்தார்.

"ஏன் பெரிய கொட்டாவியா வருதா?" என்று கேட்டார் டாக்டர்.

"கொட்டாவி எப்பவோ போயிட்டுது டாக்டர். இப்ப நான் வாயைத் திறந்தது உங்க கையில் இருக்கும் பில்லைப் பார்த்து," என்றார் அவர்.


படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 55



## கிட்கிந்தையில் களியாட்டம்

இராமபிரானிடமும் இளையபெருமாளாகிய இலக்குவனிடமும் விடைபெற்றுக் கொண்டு சுக்கிரீவனும் பரிவாரங்களும் கிட்கிந்தை அரண்மனையை அடைந்தனர். அங்கு வெற்றி விழாக்கள் மிக விமரிசையாகத் தொடங்கின. கூடவே மாரிமழையும் பொழியத் தொடங்கியது.

அரச பதவி என்பது அக்காலத்தில் அமோகமான அதிகாரங்களைக் கொண்டது. இக்காலத்தில் உயர் பதவியை எட்டிப்பிடிப்பவர்கள் தங்களை மறந்து-ஏன் தாங்கள் அப்பதவியை எட்டிப் பிடிக்க கடைப்பிடித்த வழிகளை மறந்து விடுகின்றனர். அப்பதவியை அடைவதற்கு ஏணியாக உதவியவர்கள் அனைவரையும் கூட மறந்துவிடுவதுண்டு. இதே நிலை அந்தக் காலத்திலும் இருந்திருக்கிறது என்பதை சுக்கிரீவனின் நடத்தை எடுத்துக்காட்டுகிறது.

அண்ணனுக்குப் பயந்து மலைக்குகைக்குள் மறைந்து வாழ்ந்த சுக்கிரீவன் கிட்கிந்தை அரண்மனைக்குள் புகுந்த ஓரிரு தினங்களில் தன்னை மறந்தான்; தான் நடந்து வந்த பாதையை மறந்தான். எட்ட முடியாத சிகரத்தைத் தொட்டுவிட்ட நிலையில் அவனிருந்தான்.

### மதுவும் மங்கையரும்

அரண்மனை முழுவதும் ஆடல் பாடல்களுடன் களிப்பூட்டும் நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. கணைவீசும் கண்களைக்காட்டி காளையரை வலைவீசும் கட்டிளம் கன்னியர் கைகளில் கள் ஏந்திய கலசங்கள். அக்கலசங்களிலிருந்த கள்ளைப் பருகுவதுடன் அக்கன்னியர்களின் காதலை வென்றுவிடத் துடிக்கும் காளையர். அகிற்புகை எங்கும் பரவி நறுமணத்தை இறைத்துக் கொண்டிருந்தது. அப்புகையிலிருந்து எழும் நறுமணம் அனைவரினதும் நாசி வழி சென்று- வாய் வழியூடாக உட்சென்ற மதுவின் போதையுடனிணைந்து புதிய வெறியினை ஊட்டியது.

அரண்மனை வாயிலை அடைந்ததும் சுக்கிரீவனின் கண்களுக்கு இவைதான் காட்சி தந்தன. சற்று நின்று நிதானித்தான். அவன் மனைவி உருமையுடன் அண்ணன் மகன் வாலி நின்றான். இருவரும் நிலமையை உணர்ந்து அரண்மனையுள் அவரவருக்குரிய இடங்களை அடைந்தனர். அனுமன் வாயிலிலேயே நின்றான். உள்ளே நடக்கும் ஆரவாரம் அனுமனின் அமைதிக்கு ஒரு பெரும் சவாலாக இருக்கவே, உள்ளே செல்லாமல் வெளியே இருந்த ஒரு பெரு மரத்தினடியில் போய் அமர்ந்து கொண்டான் சுக்கிரீவனின் குண நலன்களை நன்கறிந்தவனாதலால்- அவன் வழி செல்ல விட்டு விட்டு சில காலம் தானாக ஒதுங்கியிருந்து ஆட்சிப் பணிகளைக் கவனிப்பதே சிறந்ததெனக் கருதினான்.

வாலியின் மனைவி பற்றி வர்ணிக்கும் வால்மீகி முனிவரும் கம்பநாட்டாழ்வாரும் இரு முரண்பட்ட தகவல்களைத் தருகின்றனர்.

பண்டைக்காலத்தில் அண்ணன் மனைவியை- அண்ணன் இறந்ததும்- அவன் தம்பி தன்னுடன் இணைத்துக் கொள்ளும் வழக்கம் நடைமுறையில் இருந்தது. அதன்படி தாரையும் சுக்கிரீவனின் மனைவியருள் ஒருத்தியாக இருந்தாள் என்கிறார் வால்மீகி முனிவர். இந்நடைமுறை அக்காலத்தில் மட்டுமல்ல-இக்காலத்திலும் சில இடங்களில் நடைபெறுவதை நாம் காண்கிறோம்.

கம்பநாட்டாழ்வாரோ தாரையை மிக உன்னதமான உச்ச நிலையில் வைத்து விட்டார். அவளை ஒரு பேரறிவாளியாகச் சித்தரிக்கிறார். எதிர்காலத்தை முன்கூட்டியே அறிந்து அறிவுரை கூறும் ஆற்றலுடையவள் என்றும் தாரையைப் பற்றிக் கூறப்படுகிறது.

முக்கியமாக தாரையை தமிழ்ப்பண்பு குன்றாதவளாகவே கம்பர் காட்டுகிறார். ஆகவே கவிச்சக்கரவர்த்தியின் கருத்தை ஒட்டியே நமது கதையை நகர்த்துவோம்.

### தாயாகிய தாரை

சுக்கிரீவன் தன் அண்ணன் மனைவி தாரையை தன் தாயெனக் கருதினான் என்று கம்பர் கூறுகிறார்.

**ஆரியன் அருளின் போய்த்தன்**
**அகல் மலை அகத்தன் ஆன**
**சூரியன் மகனும் மானத்**
**துணைவரும் கிளையும் சுற்ற**
**தாரையை வணங்கி அன்னாள்**
**தாய் என தந்தை முந்தைச்**
**சீரியன் சொல்லே என்ன**
**செவ்விதின் அரசு செய்தான்.**

*கிட்கிந்தா காண்டம்-438-4145.*

பொருள்:

*சுக்கிரீவன் இராமபிரானின் ஆசியைப் பெற்று கிட்கிந்தை வந்து சேர்ந்து தனது ஆட்சிக்கு உதவும் அமைச்சர்கள், பிரதானிகள் மற்றும் பரிவாரங்கள் உறவினர்கள் ஆகியோரும் சூழ்ந்து வர, தன் அண்ணன் வாலியின் மனைவியான தாரையை- தனது தாய்க்குச் சமமாகக் கருதி- அவளை வணங்கி, உயிர்விடும் தறுவாயில் சூரியன் மகனான வாலி கூறியவற்றை தன் தந்தையின் சொல்லாகக் கருதி சிறப்பாக ஆட்சி புரிந்தான்.*

* * *

அரண்மனையின் வாயிலை அடைந்ததுமே சுக்கிரீவன் கண்ட காட்சி அவனைச் சற்றுத் துணுக்குற வைத்தது. இருப்பினும்- இராமபிரானிடமிருந்து அப்போது தான் திரும்பி வந்தமையினால் போலும்-அந்தக் கேளிக்கைகளில் அப்போது நாட்டம் கொள்ளாமல் தன் அண்ணியான தாரையிடம் சென்று அவள் தாளினைத் தொழுது ஆசி பெற்றான். அங்கதனை அணைத்து உச்சி மோந்தான். அப்போது மூவரின் கண்களும் பனித்தன.

மாரிமழை தன் வேகத்தைக் காட்டியது. எங்கும் பெரு வெள்ளம் வழிந்தோடியது. சுக்கிரீவன் தன் தலைமை அமைச்சர் அனுமனை அழைத்து அரசியல் தொடர்பாக சில பணிகளை ஒப்படைத்தான். அன்புக்குரிய தன் அண்ணன் இறந்தமையினால் தன்னைப் பெரும் சோகம் வாட்டுவதாகக் கூறி சில நாட்கள் தான் ஓய்வாக இருப்பதற்கு அனுமனிடம் அனுமதி கோரினான்.

சுக்கிரீவனின் நோக்கம் உணர்ந்த அனுமன் தலையை அசைத்தான். தனக்குரிய தனி அறையில் தனித்திருந்த சுக்கிரீவன் மூன்றாவது நாளன்று காலை அறையை விட்டு வெளியேறினான், இந்தச் சந்தர்ப்பத்துக்காகவே காத்திருந்தவர்கள் போன்று, அந்தப்புரத்திலே இருந்த வடிவழகியரான வானரக்கன்னியர்கள் ஓடோடி வந்து சுக்கிரீவனை அணைத்துக் கொண்டனர். அவன் எவ்வளவோ தடுத்தும் அக்கன்னியர்களின் படையெடுப்பிலிருந்து அவனால் தப்ப முடியவில்லை. இன்னிசை ஒலி எழுப்பி பல்வகை வாத்தியங்கள் முழங்க, பட்டு மேனி மங்கையர் பரவசமூட்டும் பாடல்களைப் பாடினர். அழகிய ஆடைகளை அரையும் குறையுமாக அங்கங்களில் பட்டும் படாமலும் போர்த்திய மாதர்கள் ஆனந்தக் கூத்தாடினர்.

தங்க நிற மங்கையர் இருவர் அவனைத் தொட்டணைத்து இழுத்து வந்து ஆசனத்தில் அமர்த்தினர். வேறு சிலர் மதுக்குடங்களைக் கொணர்ந்தனர். சிறு சிறு குவளைகளில் கள்ளினை மொண்டு சுக்கிரீவனின் வாயில் ஊட்டினர்.

இத்தகைய சூழ்நிலையில் சுக்கிரீவன் தன்னை மறந்தான். அவன் உள்ளத்தில் உறங்கிக் கிடந்த மிருக உணர்ச்சிகள் கண் விழித்துக் கொண்டன. கிட்கிந்தை அரண்மனை மற்றும் அந்தப்புரங்கள் மட்டுமல்ல, அந்த நாடே வெற்றிக்களிப்பில் புரண்டது. சுக்கிரீவனும் மதுவுக்கும் மங்கைக்கும் அடிமையானான்.

## இராஜகுமாரன்

### கார்காலம் முடிந்தது

நான்கு மாதங்கள் பெய்த மழை ஓய்ந்தது. வன விலங்குகள் தங்கள் ஒதுங்குப் புறங்களிலிருந்து புறப்பட்டு கானகத்தில் அலையத் தலைப்பட்டன. பறவையினங்களும் வானில் வட்டமிட்டு ஆனந்த கீதம் இசைக்க ஆரம்பித்தன. மரஞ்செடி கொடிகள் துளிர் விட்டன. பின்னர் மொட்டுக்கள் தென்பட்டு, தொடர்ந்து வண்ணமலர்களும் பூத்துக்குலுங்கி புதுப்பொலிவூட்டின.

கார்காலமும் முடிந்துவிட்டது. இளவேனிற்காலம் வருவதற்கான கட்டியம் கூறப்பட்டுவிட்டது. ஆனால் கிட்கிந்தையில் களியாட்டங்கள் மட்டும் முடிந்தபாடில்லை; சுக்கிரீவனும் தன் சொர்க்க போகத்தைத் துறந்தபாடில்லை. அனுமன் பெரும் அவதிக்குள்ளானான். பிரம்மச்சரியத்திலிருந்து சற்றும் விலக முடியாத ஆஞ்சநேயன், சுக்கிரீவனைக் கண்டு அவனுக்குரிய கடமையை உணர்த்துவதற்குத் துடியாய்த் துடித்தான். சுக்கிரீவன் சல்லாபித்துக் கிடக்கும் இடம் நாடிப்போக அவனால் முடியவில்லை. அங்கதனை அழைத்து சுக்கிரீவனிடம் தூதனுப்பலாம் என்றால் சுக்கிரீவன் இரவு-பகல் என்ற வேறுபாடின்றி மதுவிடமும் மங்கையரிடமும் மயங்கிக் கிடந்தான். சிறுவனான அங்கதன் அவ்விடம் செல்லத் தயங்கினான். சீதையைத் தேடிப்போவதற்கு, கார்காலத்தின் நான்கு மாதங்கள் முடிவடைந்ததும் வானரப் படைகளுடன் வந்து சேர்வதாக வாக்களித்துத் திரும்பிய சுக்கிரீவன் காலத்தை மறந்தவனாக்க் காமக் களியாட்டத்தில் களித்துக் கிடந்தான்.

மழைகாலம் முழுவதையும் இராமரும் இலக்குவனும் உருசியமுகம் குகைக்குள்ளேயே செலவிட்டனர். இராமர் எப்போதும் சீதையை எண்ணி சிறுபிள்ளைபோல் சிணுங்கியபடியே இருந்தார். உண்ணவோ உறங்கவோ மறுத்து அடம் பிடித்தார். ஓர் அன்னையின் நிலையிலிருந்தவண்ணம் இலக்குவன் அண்ணனைத் தேற்றினான். எவ்வளவு ஆறுதல் கூறியும் இராமரை அமைதிப்படுத்த இலக்குவனால் முடியவில்லை.

கார்காலம் முடிந்ததும் குகைவாயிலில் வந்து நின்று, சுக்கிரீவன் படையுடன் வருகிறானா என்று வழிமேல் விழி வைத்து இராமரும் இலக்குவனும் காத்துக்கிடந்தார்கள். நாளாக நாளாக இராமர் பொறுமை இழந்துவிட்டார். பொங்கிய சினத்துடன் தம்பி இலக்குவனை அழைத்தார்.

(தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி: 53

**சரியானவிடை:- தனக்கு எவராலும் அழிவு ஏற்படக்கூடாதென்ற வரம்கேட்டான்.**

1. பாத்திமா ஜெஸ்லா. 227, வாரணை வீதி, திஹாரிய.
2. செல்வி. மஞ்சுளா மொராயஸ். 175, கெப்பட்டிப்பொலை வீதி, பதுளை.
3. செல்வி. ஜெயந்தினி இராயப்பு. கல்நாட்டினகுளம்,வேப்பங்குளம்-வவுனியா.
4. அஸ்ரபுன்நிலா ஏ.ஹமீட். 730சி, மல்வான ஹின்ன, அக்குறணை.
5. செல்வி. சுஜானா உதயபாலன்., 14/25, பாரதி ஒழுங்கை, மட்டக்களப்பு.

**போட்டி இல. 55** கேள்வி:- மழைக்காலத்துக்கு மற்றுமொரு பெயர் என்ன?

நவம்பர்.09 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி–இல.55, தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

# கலைஞருடன் ஒரு பேட்டி

**காதில பூ கந்தசாமி**



கா.பூ.க:- வணக்கம் கலைஞரே! மைந்தன் மேயராகிவிட்டார். உங்கள் மனநிலையை மக்கள் அறியச் சொன்னால் என்ன?

கலைஞர்:- ஈன்றபொழுதில் 'என் மகன்' என்று கொஞ்ச முடிந்தது. இன்று அவன் மேயராக வென்ற பொழுதில் கிட்டவே செல்ல முடியவில்லை. ஒருமுறை உன் முகம் காட்டு என்று கெஞ்சத்தான் முடிகிறது. அவன் மக்களின் மைந்தனாகிவிட்டான். இதனால் மகிழ்ச்சி எனக்கா மக்களுக்கா? நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

கா.பூ.க:- தங்களுக்கு மகிழ்வு இல்லையா கலைஞரே?

கலைஞர்:- மகிழ்வு என்பதும் நான்கெழுத்து. துன்பம் என்பதும் நான்கெழுத்து. இரண்டையும் ஒன்றாகக் கருதும் பக்குவத்தை அண்ணாவிடம் இருந்து கற்றுக் கொண்டவர்கள் நாங்கள்.

கா.பூ.க:- குடும்ப ஆட்சி என்று குற்றச் சாட்டுக்கள் சொல்லப்படுகிறதே?

கலைஞர்:- பாராண்ட தமிழனுக்கு இன்று பாருக்குள் நடப்பதே தெரியவில்லை. தென் ஆபிரிக்காவிலே மண்டேலா அதிபராக இருந்த போது மனைவி வின்னி அமைச்சராக இருக்கவில்லையா?

எங்கள் நாட்டிலே என்ன நடந்தது என்று எண்ணிப்பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பண்டிதர் நேருவின் மகள்தான் அன்னை இந்திரா, அன்னை இந்திராவின் மகன்தான் ராஜீவ்காந்தி என்ற ஒப்பற்ற உண்மைகூட ஏடா தமிழா உனக்குத் தெரியாதா? போடா மூடா! என்பேன்.

கா.பூ.க:- மகன் மேயராக இருக்கிறார். உங்கள் மருமகன் மாறன் மத்திய அமைச்சராக இருக்கிறார். உறவுக்குத்தான் முதலிடமா?

கலைஞர்:- 'உறவுக்குக் கைகொடுப்போம். உரிமைக்குக் குரல் கொடுப்போம்' என்பதை என்றுமே மறக்காத இயக்கம்தான் தி.மு.க.

கா.பூ.க:- என்றாலும் தூற்றுகிறார்களே?

கலைஞர்:- தூற்றுவார் தூற்றட்டும், போற்றுவார் போற்றட்டும். தொய்யாத பணி எங்களுடையது. தொடரான பயணம் எங்களுடையது. தளராத மனம் உண்டு எங்களிடம்! அயராத உழைப்புக்கு நாம் சொந்தக்காரர்கள்!

கா.பூ.க:- உங்கள் மகன் அழகிரிக்கும் பதவி கிடைக்குமா?

கலைஞர்:- என் மகன் என்பதால் அல்லாமல், தன் உழைப்பால் உயர்ந்தால் அழகிரிகளுக்கு மட்டுமல்ல பழகிரிகளுக்கும் பதவி காத்திருக்கிறது. இந்த விடயத்தில் அழகிரி என் மகன் பழகிரி அடுத்த வீட்டு மகன் என்ற பாகுபாடெல்லாம் இல்லாத ஒரே கழகம்தான் தி.மு.க.

கா.பூ.க:- ஆட்சி அமைத்தபோதே ஸ்டாலினுக்கும் அமைச்சர் பதவி கொடுத்திருக்கலாமல்லவா?

கலைஞர்:- கொடுக்கின்ற கடமை எனக்கிருந்தது. அதைப் பெறுகின்ற உரிமை அவருக்கிருந்தது. நானும் கடமையைச் செய்ய தவறிவிட்டேன். அவரும் உரிமையைக் கேட்காமல் இருந்து விட்டார்.

கா.பூ.க:- அதனால் வருத்தப்பட்டீர்களா கலைஞரே?

கலைஞர்:- தந்தை மகனுக்காற்றும் கடமையையை செய்யவில்லையே என்று நினைத்தது உண்டு.

கா.பூ.க:- இப்போது திருப்திதானே?

கலைஞர்:- பதவி என்பது முட்படுக்கை. காயமில்லாமல் மகன் மீளவேண்டுமே என்றுதான் கவலைப்படுகிறேன். அவன் சிறையில் இருந்தபோது நான் கிஞ்சிற்றும் வேதனைப்பட்டவனல்ல. இப்போது பதவியில் இருக்கும்போதுதான் வேதனை நெஞ்சில் வேலாகப் பாய்கிறது.

கா.பூ.க:- செல்வி ஜெயலலிதாவின் எதிர்காலம் என்னாகும் கலைஞரே?

கலைஞர்:- காற்றுப்போன டயர். கழற்றிவிடப்பட்ட சக்கரம்.

கா.பூ.க:- ஒட்டுப்போட்டுக் காற்றடித்து, சக்கரத்தை மீண்டும் பொருத்திக் கொள்ள மக்கள் நினைக்க மாட்டார்களா?

கலைஞர்:- ஒட்ட முடியாதளவுக்கு ஊழல் என்னும் ஓட்டைகள் பெரிதாகிவிட்டனவே, தெரியாதா?

கா.பூ.க:- இலங்கை அகதிகளுக்கு வரவேற்புக் கிடைக்குமா?

கலைஞர்:- அகதிகள் அந்தஸ்து வழங்கியிருக்கிறோம்.

கா.பூ.க:- படகுகளை பறி முதல் செய்கிறீர்களே?

கலைஞர்:- படகுகளுக்கும் அகதிகள் அந்தஸ்து வழங்கப்பட்டதாகச் சரித்திரம் இல்லையே.

கா.பூ.க:- அகதிகள் சிலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்களே?

கலைஞர்:- சட்டம் தன் கடமையைச் செய்கிறது?

கா.பூ.க:- சட்டம் ஒரு இருட்டறை என்றாரே அறிஞர் அண்ணா!

கலைஞர்:- வக்கீலின் வாதம் ஒரு விளக்கு என்றும் அவர்தான் சொல்லியிருக்கிறார். வக்கீல் வைத்து வழக்காடும் உரிமையை ஒருபோதும் மறுக்காது அண்ணா வழிவந்த நம் ஆட்சி.

கா.பூ.க:- இலங்கை விவகாரத்தில் தலையிடுவீர்களா?

கலைஞர்:- தலையை அங்கே இட்டுவிட்டால், தமிழகத் தமிழர்களுக்கு தலைமை தாங்க தலை வேண்டாமா? குரல் கொடுப்போம்.

கா.பூ.க:- ஸ்டாலின் மேயராகிவிட்டார். உங்களுக்குப் பின் முதல்வராவாரா?

கலைஞர்:- முதல்வராகும் தகுதி அவருக்கு இருந்தாலும், கழக செயற்குழுதான் அதனைத் தீர்மானிக்க வேண்டும் என்றாலும், அவர் முதல்வரானால் தமிழக மக்கள் மகிழ்வார்கள் என்பது புரிந்துவிட்ட காரணத்தால் இப்படியொரு கேள்வியை நீங்கள் கேட்டாலும் கூட, அவர் என் மகன் என்பதற்காக அல்லாமல், தமிழக மக்களின் விருப்பத்தின் பேரில்தான் கழகம் ஒரு முடிவு எடுக்குமேயல்லாமல்...

கா.பூ.க:- புரிகிறது, புரிகிறது. இத்தோடு பேட்டி முடிகிறது. இறுதியாக உங்களுக்குப் பிடித்த பாடல் ஒன்று.

"உதய சூரியன் பார்வையிலே
ஸ்டாலின் மேயரான வேளையிலே
இமயத்திலிருக்கும் குளிர்காற்று-இன்று
இதயத்தைத் தொடுகிறது! அன்று
இமயத்தில்-சேரன்
கொடி பறந்த-அந்தக்
காலம் தெரிகிறது."

கலைஞர்:- (கைதட்டுகிறார்) இது எனது நாற்பதாண்டுகால நண்பர் எம்.ஜி.ஆரின் படப்பாடலாச்சே. என் கண்கள் குளமாகின்றன. கண்ணீர் வழிந்தோடுகிறது. கவலை நிழலாடுகிறது.

(கலைஞர் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறார் காதிலை பூ கந்தசாமி விடைபெறுகிறார்)

# செல்வியுடன் ஒரு செவ்வி



கா.பூ.க:- உள்ளூராட்சித் தேர்தலிலும் உங்களை ஓரம் கட்டிவிட்டார்களே அம்மா?

செல்வி:- ஷட் அப் மேன்! ஷட் அப்! இதெல்லாம் தி.மு.காரங்க செய்த செட் அப். எல்லாமே கள்ள வோட்டு. நல்ல வோட்டுக்கும் அவங்க கொடுத்தாங்க நோட்டு.

கா.பூ.க:- பிரசாரத்திற்கு செல்லவில்லையே நீங்கள் ஏனம்மா?

செல்வி:- புதுசா ஆட்சிக்கு வந்திருக்கிறாங்க. புயலா மாறி உடனே அவங்களை புரட்டிப்போட விரும்பலை நான்.

கா.பூ.க:- நீங்க அசிட் வீசினதா சொன்னாங்களே சந்திரலேகா. அவங்களுக்கு நீங்க ஏனம்மா ஆதரவு கொடுத்தீங்க?

செல்வி:- அடிக்கின்ற கைதான் அணைக்கும். அணைக்கின்ற கைதான் அடிக்கும். அதனை அவங்க புரிஞ்சுக்க வேண்டாமா? அதனால்தான்.

கா.பூ.க:- மக்கள் தான் புரிஞ்சுக்கலை. மண்கவ்வ வைச்சுட்டாங்களே?

செல்வி:- முன்னாடி என்னை அவங்க குற்றம் சாட்டியதை மக்கள் மறக்கலை. அதனை மனசில வைச்சுக்கிட்டு பழிவாங்கிட்டாங்க. இது மக்கள் என்மேல வைத்திருக்கிற மதிப்பைத் தானே காட்டுது. நான் மன்னிச்சுட்டாலும் என் எதிரிகளை மக்கள் மன்னிக்க மாட்டாங்க என்பதை என் எதிரிகள் புரிஞ்சுக்கிட்டா சரி.

கா.பூ.க:- உயிர்த்தோழி வருந்திக் கொண்டிருக்கிறார் அம்மா.

செல்வி:- என்னவென்று?

கா.பூ.க:- (பாடுகிறார்)
மன்னிக்க வேண்டுகிறேன்!- உந்தன்
உதவியைக் கோருகின்றேன்-என்னைச்
சிந்திக்க வேண்டுகிறேன்!- கண்கள்
சந்திக்க ஏங்குகின்றேன்"

செல்வி:- (பாடுகிறார்)
"சொத்தெல்லாம் இனி உனக்கு
என்றென்றும் அது நமக்கு-நாம்
பிரிவென்னும் ஒரு சொல்லை
மறந்தாலென்ன?

கா.பூ.க:- உறவேயில்லையென்றீர்கள். இப்படி உருகிப்பாடுகிறீர்களே

செல்வி:- (எரிப்பதுபோல முறைக்கிறார். கந்தசாமி யார் காணாமல் போகிறார்)



படிப்பகம்

www.padippakam.com



அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
436331
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11


# சுவையின் சுமை



➡ ஒன்றைப் பத்தாக்குவது, இருப்பதைப் பெரிசாக்குவது என்பதெல்லாம் சாதனைதான். முயற்சியும், தன்னம்பிக்கையும் இருந்தால்போதும்.

எப்படிப் பெரிசாக்கியிருக்கிறார் பாருங்கள் காரட்டை. இவரது பெயர் பேர்னாட் லவெரி. பிரித்தானியாவில் லான்றரி மாநிலத்தைச் சேர்ந்தவர். காய்கறிகள் உற்பத்தியில் புதிய முறைகளைப் புகுத்தி சாதனைபடைத்து வருகிறார். இதுவரை 30 வகையான காய்கறிகளைப் பெரிய ரகமாக மாற்றியிருக்கிறார். அதில் ஒன்று காரட்.

இதன் எடை 7.13 கிலோகிராம் (115 இறாத்தலும் 11.5 அவுன்சும்) உலகில் எடை கூடிய காரட் இதுதான்.



ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
323657
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11


# சின்னப் போதை

⬇ 'நாளை முதல் குடிக்கமாட்டேன் சத்தியமடி தங்கம்' என்பவர்கள் மறுநாளைக்கு புட்டியை ஒளித்துவைத்துக் குடிக்க ஒரு வசதி. உள்ளங்கைக்குள் ஒளித்துக்கொண்டு தங்கம் தூங்கும் நேரம் பார்த்து குடித்துவிடலாம். என்ன அளவு தான் குறைச்சல். நாக்கு நனைக்கவும் போதாது. சிறு குடிமக்கள் சமாளித்துக் கொள்ளலாம்.




ஒரு தீக்குச்சி அளவிலான குட்டிப் போத்தலில் விஸ்கி. இதுதான் உலகிலேயே மிகச் சிறிய மதுப் புட்டி. ஸ்கொட்லாந்தில் விசேட தயாரிப்பு. பிரான்ட்-வைற் ஹோர்ஸ் விஸ்கி 1.3 மில்லி லீட்டர் மட்டும் இதில் 12 போத்தல்கள் கொண்ட சிறிய பெட்டியின் விலை 8 ஸ்டேர்லின் பவுண் (அதாவது 720 ரூபாய்கள்) சின்னதாய் வெறிக்கும்.

# சந்தையில் புதுசு

⬇ விதம் விதமான மோட்டார் சைக்கிள்கள் வெளிநாடுகளில் வீதிகளை கலக்கிக் கொண்டிருக்கின்றன. கார்களுக்குள் அடைந்துகொண்டு திரிவதைவிட மோட்டார் சைக்கிள்களில் காற்றாடப் பறந்து திரிவதுதான் வெளிநாட்டு இளசுகளுக்கு பிடித்தமான பொழுதுபோக்கு. அதிலும் காதலி பின்னால் இருந்துவிட்டால் கேட்கவே வேண்டாம். வேகம் தான் பறக்கும். பயத்தில் காதலி பிசினாக ஒட்டிக்கொள்ள வேகம் உச்சத்தை தொடும்.



மோட்டார் சைக்கிள்களில் சொகுசான ரகங்களும் வந்துவிட்டன. படத்தில் இருப்பது ஹொண்டா கோல்ட் விங் மோட்டார் சைக்கிள் குடிக்கார் போல நவீன வசதிகள் கொண்டது. ஜப்பான் தயாரிப்பு அளவிலும் பெரியது. வேகத்திலும் கில்லாடி. பாவனைக்கு உறுதியானது.

இதன் வல்லமையைப் பரிசோதிக்க இந்த மோட்டார் சைக்கிள் மூலமே உலகைச் சுற்றிவந்து காட்டினார் ஒருவர். அவரது பெயர் எமிலியோ ஸ்கொட்டோ.

1985 இல் புறப்பட்டு 214 நாடுகளுக்கு பயணம் செய்தார். மொத்தம் மூவாயிரத்து எழுநூற்றி இருபத்தெட்டு நாட்கள் பயணம் செய்தார். கிட்டத்தட்ட பத்து வருடங்கள். அதுவே ஒரு உலக சாதனையாக பதியப்பட்டுள்ளது. பத்து வருடமும் இந்த மோட்டார் சைக்கிள் நன்கு ஒத்துழைத்ததாம். அதுவே தரத்தின் அடையாளம் என்று பாராட்டுகிறார் எமிலியோ. சாதனையுமாச்சு விளம்பரமுமாச்சு!


மோட்டார் சைக்கிளைப் பார்த்ததும் சவாரி செய்ய ஆசை வருகிறதல்லவா!

# கொக்கரக்கோ



படத்தில் இருப்பது உங்கள் வீட்டுக் கோழி, எங்கள் வீட்டுக் கோழியல்ல. உலக சாதனைக் கோழி. கோழி இனத்தில் 'வைற்சல்லி' என்ற இனத்தைச் சேர்ந்தது இது. உலகில் மிகப்பெரிய கோழி இது. பலசாலியும் கூட. நாய்களைக் கண்டால் ஓடாது. ஒரு நாயை மோதி வீழ்த்தக் கூடிய பலம் கொண்டது. இரண்டு பூனைகளை ஒரே நேரத்தில் சமாளித்து கொத்திக் கொல்லவும் இதனால் முடியும். குறைந்தது 10 கிலோ எடைவரை இதன் பலம் இருக்கும் (22 றாத்தால்) சாதாரணமாக நம்மவீட்டுக் கோழி 2 இறாத்தல்தான் தேறும். அது எங்கே, இது எங்கே?

# அசையாத மலை



⬅ உடல் சற்றுக் கொழுத்திருந்தால் இங்கே உடனே கேலி செய்கிறார்கள். 'எந்தக் கடையிலே அரிசி வாங்கினாய்?' என்று பாடுகிறார்கள்.

ஜப்பானில் அப்படி இல்லை. நன்றாக மூக்கு முட்ட ஒரு பிடி பிடித்து மாமிச மலையாக இருப்பவர்களுக்கு அமோக மரியாதை.

காரணம் என்னவென்றால், அந்த மாமிச மலைகள் உண்டு கொழுத்துக்கொண்டு ஒரு மூலையில் முடங்கிக்கிடக்க மாட்டார்கள். வரிந்து கட்டிக்கொண்டு தொடை தட்டி களத்தில் இறங்கிவிடுவார்கள்.

ஜப்பானின் தேசிய மல்யுத்த விளையாட்டுக்கு 'சுமோ' என்று பெயர். மலையாக உடல் இருந்தால்தான் 'சுமோ' வில் மரியாதை.

சுமோ வீரர்கள் பலர் என்னதான் மூக்குமுட்ட கொட்டிக் கொண்டாலும், படத்தில் இருக்கிறார் பாருங்கள், மாமிச மலை. இவரை மட்டும் எவராலும் அசைக்க முடியவில்லை. இவரது பெயர் 'கொனிசிக்கி' இவர் ஹவாய் நாட்டைச் சேர்ந்தவர்.

அண்ணன் கொனிசிக்கியின் எடை 267 கிலோ. (589 இறாத்தல்) நம்ம அண்ணன் (ஒரு மரியாதைதான்) விரும்பிச் சாப்பிடுவது அல்லது வயிற்றுக்குள் கொட்டிக் கொள்வது சான்கோனபிள். அதி உயர் புரோட்டின் கொண்ட மாமிசக் குழம்பு அது. அதன் புண்ணியத்தால்தான் அண்ணன் வளமாக இருக்கிறார். உலகில் சுமோ வீரர்களில் இன்றைய தேதிவரை எடை கூடியவர் அண்ணர் தான். அண்ணா! வணக்கமுங்க!

வாரமலர் தினமுரசு



இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை காவிந்த பிளேஸ், 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 29, வெல்பார, நாவலவில் உள்ள சமனலை அச்சகத்தில் நவம்பர் மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்